# சலனம்

கதைகள்

மாயாவி

காமராசர் பல்கலைக்கழ
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

புதுமைப் பிரசுரம்
பெண்ணாடம் ★ தெ.ஆ. மாவட்டம்

முதற் பதிப்பு: நவம்பர், 56.

விலை ரூ. 2—0—0

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அன்பளிப்பு
தி.க. சண்முகம் நூலகம்.
மதுரை.

மாருதி பிரஸ், சென்னை—14.

# பதிப்புரை

சலனம் என்ற தலைப்பில் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற முறையில் சில கதைகளை திரு. மாயாவி அவர்கள் 'கலைமகள்' பத்திரிகையில் எழுதி வந்ததை வாசகர்கள் நன்கு அறிவார்கள். பத்திரிகையில் வெளிவந்தபோது வாசகர்கள் காட்டிய ஆர்வமே இதைத் தொகுப்பாக்கி வெளியிட எங்களை ஊக்குவித்தது. ஆசிரியர் திரு. மாயாவி அவர்களின் எழுத்துக்களை தொடர்ந்து ரசித்துவரும் வாசகர்கள் இதற்கும் ஆதரவு தருவார்களென்று நம்புகிறோம்.

அன்பு,

**புதுமைப் பிரசுரத்தார்.**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அன்பளிப்பு
தி.க. சண்முகசுந்தரம்

# " சலனம் "

ஓடிக்கொண்டிருந்த ரெயில் வண்டியின் ஜன்னலில் தலையைச் சாய்த்து, சிந்தனையில் மூழ்கியிருந்தான், அந்தச் சிறுவன். ரெயிலின் வேகத்தைக் காட்டிலும் அவன் மனம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. எவ்வளவு சீக்கிரமாக, முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக, எத்தனை எட்டச் செல்ல முடியுமோ, அத்தனை எட்டச் சென்றுவிடத் துடித்துக் கொண்டிருந்தது, அந்த இள உள்ளம்.

இத்தகைய நீண்ட ரெயில் பிரயாணம் அவனுக்குப் புதிய அனுபவந்தான். வழி நெடுகக் கண்ணைக் கவரும் காவேரிப் படுகைக் காட்சிகள், ஊர்கள், வாய்க்கால்கள், பச்சைப்பசேலென்ற வயல்வெளிகள்; அவற்றையெல்லாம் ஆவலுடன் பார்த்து ஆனந்தப்பட வேண்டிய வயதினன் அவன். வேறொரு சமயமாக இருந்தால், அவற்றைக் கண்டு களித்திருப்பானோ, என்னவோ ? ஆனால், இப்பொழுது அவன் மனம் அவற்றில் லயிக்கவில்லை.

சென்ற காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் வருங்காலத் துக்குமாகக் ‘ கிளித்தட்டு ’ விளையாடிக்கொண்டிருந்தது அது.

“ இந்நேரம் அம்மா நான் எழுதி வைத்திருந்த கடிதத்தைப் பார்த்திருப்பாள். அதில் கோணல் மாண லாக, எனக்குத் தெரிந்த பாஷையில், அவசரம் அவசர மாகக் கிறுக்கி வைத்திருந்ததை அவள் புரிந்துகொண்டிருப் பாளோ, என்னவோ ? அதன் அடக்கத்தைச் சரியாகத் தெரிந்துகொள்ளாவிட்டாலும், ‘ நான் சாக ஓடவில்லை ; வாழத்தான் ஓடுகிறேன். அதிலும எங்கள் இருவரின் மன நிம்மதிக்காகத்தான் ஓடுகிறேன் ’ என்பதை அவள் புரிந்துகொண்டிருந்தால் போதும். ஆனல் அவள், புரிந்துகொள்ளாவிட்டாலும், அவர் அவளுக்கு அதைப் புரிய வைத்திருப்பார். என்னைப் பிரிந்த அதிர்ச்சி அவளுக்குப் பெரிதாகத்தான் இருந்திருக்கும். இருந்தாலும், அவர் அவளைத் தேற்றியிருப்பார். அம்மா ! அம்மா ! உன்னைப் பிரிய எனக்கு மாத்திரம் திடம் இருந்ததென்று நினைக்கிருய் ? ஆனல் உன் வாழ்வில் சலனத்துக்குக் காரணமான நானே அதில் சஞ்சலத்தை ஊட்டுவதற்கும் காரணமாக இருந்தேனென்ருல் ? அதை என்னல் பொறுக்க முடியவில்லை, அம்மா ; அதுதான் கிளம்பி விட்டேன். நான், எங்காவது, எப்படியாவது பிழைத் திருப்பேன். இந்தச் சலனமும் சஞ்சலமும் காலவேகத்தில் கரைந்ததும் உன்னிடம் வருவேன்......”

பதின்மூன்று வயதை நெருங்கிக்கொண்டிருந்த ஓர் சிறுவனின் உள்ளம், இவ்வளவு கோவையாக, இத்தனை அழகான வார்த்தைகளிட்டு ஒரு விஷயத்தைச் சிந்தித் திருக்க முடியாது. ஆனல், அப்பொழுது அவன் சிந்தனையில் ஓடிய நினைவின் கருத்து இதுதான்.

அப்பொழுது மாலை ஐந்து மணி இருக்கும். ரெயில் ஏதோ ஒரு நிலையத்தில் வந்து நின்றது. அது இஞ்சினுக்குத் தண்ணீர் சேகரித்துக்கொள்ளும் இடம்போலும்: பிரயாணிகள் கீழே இறங்கி, சிற்றுண்டிகளோ, குடிநீரோ, வாங்கிவரச் சென்றனர். அவனுக்குப் பசித்தது. அன்று காலை, வெறும் காபி கொஞ்சம் குடித்திருந்தான். அவ்வளவுதான். பிறகு தண்ணீர்கூட அருந்தவில்லை. கையில் காசிருந்தால் அவனும் ஏதாவது வாங்கிச் சாப்பிட்டிருப்பான். ஆனால் இப்பொழுது அவனிடம் அவன் தான் இருந்தான். கீழே இறங்கி எதிரே இருந்த பிளாட்பாரத்துக் குழாயில் முகத்தைக் கழுவிக்கொண்டு இரண்டு கைகளாலும் தண்ணீரை ஏந்திக் குடித்துவிட்டுத் தன் இடத்தில் வந்து உட்கார்ந்துகொண்டான்.

யாரோ ஒரு கிழவர் அங்கே அதே வண்டியில் ஏறினர். பையனுக்கு எதிராக இருந்த பெஞ்சியில் வந்து அமர்ந்தார். அவரைப் பார்த்தபோது, அவனுக்குத் தன் தாத்தாவின் நினைவு வந்தது. ஐயோ! அந்தச் சலனம் நிகழ்ந்த அன்று அவர் அவனை நோக்கிக் கூறிய சொற்கள்— 'பிறக்கு முன்பே அப்பன் உயிருக்கு உலை மூட்டிவிட்டாய். இப்போது பெற்றவளையும் உயிரோடு பறிகொடுத்து விட்டாயேடா; அட அதிருஷ்டம் கெட்ட பயலே!'

ஏன் அவர் அப்படிச் சொன்னர் என்பது அப்போது அவனுக்கு விளங்கவில்லை. அது ஒரு சாதாரணச் சம்பவம் போலத்தான் அவனுக்குக் தோற்றிற்று. போகப் போக அல்லவா, அதன் உண்மைச் சொரூபம் அவன் சிறு உள்ளத்தில் உருவாக்கப்பட்டது? அப்போதுங்கூட, அவன் வரையில் அம்மா செய்தது சரி என்றுதான் பட்டது. ஆனல் எதற்காக அது நிகழ்ந்ததோ, அதற்குத் தான் ஒரு தடை என்பதைத் தொடர்ந்து இரண்டு மூன்று

நிகழ்ச்சிகள் சுட்டிக்காட்டிய போது, தாத்தாவின் வார்த்தைகளின் அர்த்தத்தை அவன் உணர்ந்துகொண்டு விட்டான். பிறகு, அவனால் அங்கே இருக்க முடியவில்லை ; கிளம்பிவிட்டான்.

* * *

"எந்த ஊருக்குப் போகிறாய் தம்பி ?" எதிரே உட்கார்ந்திருந்த கிழவர்தாம் அவனை நோக்கி இப்படிக் கேட்டார்.

எந்த ஊரைச் சொல்வதென்பது அவனுக்குத் தெரியவில்லை. எங்கே போகிறோம் என்பது தெரிந்திருந்தால் அல்லவா சொல்லுவான் ? இருந்தாலும் குருட்டாம் போக்கில், "பட்டணத்துக்கு" என்றான்.

" நீ தனியாகவா போகிறாய் ? எங்கேயிருந்து வருகிறாய் ?"

" பாலக்கரையிலிருந்து."

" திருச்சியிலிருந்தா ?"

" ஆமாம்."

' அதற்கு இந்த வழியாக வருவானேன் ? இது ஈரோடுக்குப் போகிற வண்டியல்லவா, தம்பி ?"

அவன் ஒரு கணம் விழித்தான். ஆயினும், உடனே சமாளித்துக்கொண்டு ' பெரிய ரெயிலில் போனதே இல்லை ; அதுதான்......' என்று இழுத்தான்.

அவர் முகத்தில் சந்தேக ரேகைகள் தோன்றின ; எனவே மீண்டும், " பட்டணத்திலே யார் இருக்கிறார்கள் தம்பி, உனக்கு ?" என்று கேட்டார்.

ஏண்டா இவரிடம் பேச்சுக்கொடுத்தோம் என்று இருந்தது. அவன் பொய் சொல்லிப் பழக்கப்பட்டவன்

அல்ல ; ஆகவே, இப்படித் தொடர்ந்து வந்த கேள்வி களுக்குக் கோவையாய்ப் பதில் அளிக்கத் திணறினன். அந்தத் திணறலுக்கிடையே வேருெரு சோதனையும் ஏற்பட்டது. 'டிக்கட் டிக்கட்' என்று யமகிங்கரன் போல டிக்கட்டுப் பரிசோதகன் ஒருவன் வந்து நின்ருன்.

ஒஹோ ! டிக்கட்டு என்று ஒன்று வாங்க வேண்டுமே ! அது இப்போதுதான் அவனுக்குப்பட்டது.

கிழவர் டிக்கட்டைக் காட்டிவிட்டார், 'எங்கே தம்பி, உன் டிக்கட்டு ?" என்று விரட்டினன் பரிசோதகன்.

"டிக்கட்டு இல்லை." கிணற்றினுள்ளிருந்து வரும் குரலைப்போல இருந்தது அவன் பதில்.

"எங்கே போகிருய் ?"

'எங்கேயாவது.'

'எங்கேயாவதா ? உங்கள் தாத்தாவீட்டு வண்டி யின்னு நெனச்சுக்கிட்டியோ ?"

"ஸார் !" அவன் குரல் பரிதாபகரமாக இருந்தது ; கண்களிலே நீர் பொங்கிற்று.

"ஸாராவது, மோராவது? ராஜாமாதிரி ஜன்னலோரம் வந்து குந்திக்கிட்டான் ; எளுந்திருடா."

அவன் எழுந்து நின்ருன்.

"இப்படியே நில்லு ; இந்த வண்டியை முடிச்சிக் கிட்டு வந்திடறேன்." பரிசோதகன் அடுத்த பகுதிக்குச் சென்ருன்.

"வீட்டிலே கோபித்துக்கொண்டு வந்து விட்டாயா தம்பி ?" என்று சந்தேகமில்லாது கேட்டார், அந்தக் கிழவர்.

" கோபம் இல்லை ; சொல்லாமல் வந்துவிட்டேன்."

" ஏன் ?"

" ஏன் ?" என்று அவனும் தன்னையே கேட்டுக் கொண்டான். ' அதைச் சொல்லலாமா ? சொல்லுவதா ?' என்பதுதான் அந்த அகக்கேள்வியின் அர்த்தம்போலும் ! அதைச் சொன்னால் நிச்சயமாக அவர் தன் நிலைக்கு இரங்கு வார். ஆனால், அவன் அம்மாவைப்பற்றி என்ன நினைப் பார் ? அவன் தீர்மானம் செய்துவிட்டான், அதைச் சொல்லுவதில்லை என்று. எனவே, " அது என் சொந்த விஷயம் " என்று அந்தப் பெரியவருக்குப் பதில் அளித்தான்.

அவர் கேலியாக நகைத்தார் ; " சொந்த விஷயமாமே: பெரிய ஆளாக இருக்கிறாயே, தம்பி ! நீ சும்மா சொல்லு, பயப்படாதே. நான் அவருக்கு ஈரோடு வரையிலுள்ள சார்ஜு கொடுத்து அனுப்பிவிடுகிறேன் " அந்த நிலையில், அது அவனுக்கு எதிர்பாராத ஒரு பேருதவிதான். இருந் தாலும், அந்த அற்பக் காசுக்காகத் தன் குடும்ப ரகசி யத்தை வெளியிட்டுவிடுவதா ? அல்லது, அவரிடம் பொய் சொல்லி ஏமாற்றுவதா ? இரண்டையும் அவன் விரும்பவில்லை. அந்த ரகசியம் அவனுள்ளே புதைந்து, அவனுள்ளே மடிய வேண்டியது. அதைச் சொல்ல அவன் வாய்க்குத் திறன் இல்லை ; மனத்துக்குத் திடம் இல்லை. ஏனெனில், அவனுக்கு அது சாதாரண மான நியாயமான நிகழ்ச்சிதான். என்றாலும் உலகுக்கு ஓர் அசாதாரண நிகழ்ச்சி.

* * *

ஆம் ; அது தன்னிலிருந்துதான் ஆரம்பித்தது என்றே அவன் நினைத்தான். மேற்பார்வைக்கு எல்லோ

ருக்கும் அது அப்படியே தோன்றினாலும், ஆய்ந்து பார்த்தால், அவன் தாத்தாதான் அதன் அஸ்திவாரம் என்பது தெரியவரும்.

அவனுடைய அம்மா ஜானகி, திருச்சி ஸெயிண்ட் ஜோஸப் கல்லூரி பேராசியராக இருந்த சதாசிவத்திற்கா ஒரே பெண். அவளுக்குப் பதினொரு வயதாக இருக்கையில் சதாசிவத்தின் மனைவி இறந்து போனாள். அவருக்கு அப்பொழுது நாற்பது வயதுகூட ஆகவில்லை. எனவே, எல்லோரையும் போல அவர், ருக்மிணியை மறுமணம் செய்துகொண்டார். அந்த மறுமணந்தான் காரணமோ என்னவோ, மற்றப் பெற்றோர் தம் குழந்தைகளை வளர்ப்பது போன்று அவர் தம் மகளை வளர்க்கவில்லை. செல்லம் கொடுத்துக் கெடுத்தார் என்றும் சொல்லுவதற்கில்லை. ஏதோ ஒரு தப்பைச் செய்துவிட்டு அதற்கு வேறொரு விதத்தில் பரிகாரம் தேடுவதுபோல, அவளுடைய கோரிக்கைகளுக்கெல்லாம் இணங்கி வந்தார். அவளும் அப்படி ஒன்றும் பெரும் கோரிக்கைகளைச் சமர்ப்பித்து விடவில்லை. மெட்றிகுலேஷன் படித்து முடிந்ததும், ஆசிரியப் பயிற்சி பெற விரும்பினாள். அவர் அவளுக்கு உரிய காலத்தில் திருமணத்தை முடித்துவிட எண்ணியிருந்தார்.

இருவரும் சமரசமாகவே இதைத் தீர்த்துக்கொண்டனர். அவர் அவள் விருப்பத்துக்கு இணங்கினார்; அவளும் அவர் கோரியபடி மணம் செய்துகொள்ள இசைந்தாள். ஜானகி பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்துக்கொண்டே ரங்கநாதனின் மனைவியும் ஆனாள். அவனுக்குத் திருச்சி நகரசபையில் வேலை. எல்லாம் சௌகரியமாகவே போயிற்று. ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தனர்.

ஆனால், சலனம் எங்கே எப்பொழுது எப்படி ஏற்படுமென்று யார் கண்டார்கள்? அது, சதாசிவத்தின் நிறைவேறிய கோரிக்கையிலிருந்து அவள் வாழ்வில் புகுந்தது. கல்யாணமான ஒரு மாதத்துக்கெல்லாம் ரங்கநாதனுக்கு மாலைதோறும் ஜுரம் வரலாயிற்று. டாக்டரிடம் காட்டியபொழுது க்ஷயரோகத்தின் சின்னம் லேசாகத் தென்படுவதாகவும், பூரண ஓய்வுகொடுத்து இருந்தால், எளிதாகப் போக்கிவிடலாம் என்றும் அறிவித்தார். ரங்கநாதன் வேலையைவிட்டு விட்டு, மாமனார் வீட்டிலே தங்கி உடம்பைப் பார்த்துக்கொண்டான். ஆனால் மனத்தைப் பார்த்துக்கொள்ள முடியவில்லை. ஜானகி மூன்று மாதக் கர்ப்பிணியாக ஆனபோது, அவன் நோயும் அவள் வயிற்றைப் போலவே வளர்ந்துவிட்டது.

தப்பை அவன் உணர்ந்தான்; அவள் உணர்ந்தாள்; எல்லோரும் உணர்ந்தார்கள்; ஆயினும் என்ன செய்வது? இன்னும் ஓர் ஐந்தாறு மாதங்கள் பணத்தைப் பணம் என்று பாராமல் செலவழித்துப் பார்த்தார்கள். நோய் குறைவதாகக் காணோம். கடைசி நம்பிக்கையாக ரங்கநாதனை அழைத்துக்கொண்டு மதனப் பள்ளிக்கு ஓடினார், சதாசிவம். ஜானகி போகக் கூடவில்லை; அவள் நிறைமாதச் சூலியாக இருந்தாள். அவள் பிரசவத்தைக் கவனிக்க, சித்தி ருக்மிணியும் ஊரிலே தங்க வேண்டியதாயிற்று.

மதனப்பள்ளிக்குப் போன பிறகு, ரங்கநாதனுக்கு உடம்பு கொஞ்சம் குணம் கண்டது. ஊரிலிருந்து, அவனுக்கு ஆண்குழந்தை பிறந்த நல்ல செய்தியும் வந்தது. எல்லாம் சேர்ந்து அவனைப் படிப்படியாகத் தேற்றின. மூன்று ஆண்டுகள் கணவனும் மனைவியும் சந்திக்காது நாட்களை ஓட்டினர்.

ஆயினும், எத்தனை நாட்கள்தாம் அப்படி விலகி இருக்க முடியும்? அவள் கணவனைக் காணத் துடித்தாள். அவன் அவளையும் குழந்தையையும் பார்க்க விழைந்தான். டாக்டரின் எச்சரிப்பு இருக்கத்தான் இருந்தது. இருந்தாலும் இந்த ஏக்கத்தை அவர்களால் சகிக்க இயலவேயில்லை. அவள் சோக நிலை சதாசிவத்தையும் கரைத்தது. 'அவன்தான் இப்பொழுது நோயின் பிடியிலிருந்து விடுபட்டுவிட்டானே; போய்ப் பார்த்துவிட்டு வருவதால் என்ன கெடுதல் ஏற்பட்டுவிடப் போகிறது?' என்று ஒரு தடவை, ஜானகியை மதனப் பள்ளிக்குக் கூட்டிச் சென்றார்; ஆனால்—

அது வெறும் சந்திப்பாக இருக்க முடியவில்லை. நான்கு ஆண்டுகள் பட்ட சிரமமெல்லாம் வீணாயிற்று. ஜானகி வந்து திரும்பிய ஒரு மாதத்துக்கெல்லாம், ரங்கநாதன் உடல் நிலை முன்னிலும் கேவலமாகி விட்டது. ஊருக்குக் கொண்டுபோய் விடுமாறு டாக்டர்கள் கூறி விட்டனர்.

பிறகு அவன் மீளவேயில்லை. பின்னும் கொஞ்ச காலத்தில் எல்லோரையும் தவிக்க விட்டு விட்டு கண்களை மூடினான்.

அவன் மறைவு எல்லோரையுமே தாக்கிற்று. ஆனால் சதாசிவத்தைத் தாக்கிய அளவு எவரையும் தாக்கியிராது. உரிய காலத்தில் கல்யாணம் செய்துவிட வேண்டுமென்று அவர் கட்டாயப் படுத்திச் சேர்த்துவைத்த தாம்பத்தியம் என்ன ஆயிற்று? சேர்ந்து நான்கு மாதங்களாவது அவள் இன்பமாக இருந்தாளா? எதற்காக அவர்கள் இணைக்கப்பட்டார்களோ, அதுவே அவர்கள் பிரிவுக்குக் காரணமாகிவிட்டது.

சதாசிவம் இத்தனை தூரம் உணர்ச்சியும் வருத்தமும் அடைந்திருக்கமாட்டார். ஆனால், வீட்டில் ஜானகியை விடக் கொஞ்சம் வயதே மூத்தவளான அவருடைய இளமனைவி ருக்மிணி இருந்தாள். அவள் போக பாக்கியங்களை விரும்பினாள். கடமை என்ற கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு அவள் குறைகளை அவர் நிறைவேற்றத்தான் வேண்டியிருந்தது. தமது பிடிவாதத்துக்குப் பலியாகி வாழ்விழந்து நிற்கும் மகளின்முன் தாம் களிப்பாக வாழ வேண்டியிருந்ததே! அதைத்தான் அவரால் பொறுக்க முடியவில்லை.

அதை அவள் ஓரளவாவது உணராதிருக்க வேண்டுமென்று, அவர் ஜானகிக்கு உள்ளூர்ப் பள்ளி ஒன்றில் ஆசிரியை வேலை தேடிக் கொடுத்து, அவள் மனத்தை அதில் ஈடுபடச் செய்தார். ஆயினும், பருவச் சூட்டில் கொதித்து வெளிவரும் நீராவியை மூடி போட்டு அடைத்துவிட முடியுமா? அதோடு சோதனை வேறொரு விதத்திலும் சதாசிவத்தை விரட்டி வந்தது.

அவருடைய மைத்துனன், இளையதாரத்தின் தம்பி அழகிய வாலிபனான பசுபதி, ஜானகி வேலையாயிருந்த அதே பள்ளியில் ஒரு வேலையேற்றுத் திருச்சிக்கு வந்து சேர்ந்தான். அக்காள் வீட்டிலேயே தங்கிக் கொண்டான். ஜானகியும் அவனும் ஒன்றாகவே பள்ளிக்குப் போனார்கள். ஒன்றாகவே திரும்பினார்கள். வீட்டிலும் ஒன்றாகவே பழகினார்கள். சதாசிவம் இந்த ஒற்றுமையில் சட்டென்று விகற்பத்தைக் கண்டுவிடவில்லை. ஆனால் அவர் அதை விரும்பவில்லை. தடுத்து நிறுத்தவும் மனம் முன்வர மறுத்தது.

நாலைந்து ஆண்டுகள் இப்படியே சென்றுவிட்டன. ஜானகியின் மகன் கோபு வளர்ந்து விட்டான். புத்தி

சாலியாக இருந்தான். எல்லா வகுப்புக்களிலும் முதலில் தேறி வந்தான். அவனுடைய வளர்ச்சியில் அவள் பெருமையே அடைந்தாள். இருந்தாலும் புத்திசாலிப் பிள்ளை ஒருவனே, ஓர் இளம் பெண்ணின் வாழ்வை முழுவதும் களிப்பாக வைத்துவிட முடியாதே! எனவே, அவள் உள்ளத்தில் இட்டு நிரப்பாத அந்தக் குறை இருந்துகொண்டுதான் இருந்தது.

அந்த நிலையில் அவளுக்குப் பசுபதியிடம் கவர்சி ஏற்பட்டது வியப்பே அல்ல; அவனையுந்தான் சும்மா சொல்லிவிட முடியுமா? அந்த வயதில், அப்படி ஒரு யுவதியுடன், நான்கு ஆண்டுகள் கண்ணியமாகப் பழகி வந்தான் என்றால், அவனை ஓர் உத்தமோத்தமன் என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் அந்த இள உள்ளங்கள் இரண்டும் தவியாய்த் தவித்தன. வாய்விட்டுச் சொல்ல வாய்விட்டுக் கேட்க அஞ்சித் தத்தளித்தன. அதை அவளும் உணர்ந்திருந்தாள்; அவனும் உணர்ந்தே இருந்தான்.

ஜானகிதான் வாழ்க்கை மூளியானவள். ஆனால் பசுபதிக்கு வாழ்க்கையே இனிமேல்தானே? அவனுக்குக் கல்யாணம் வந்தது. ருக்மிணியிடம் ஜாதகம் கேட்டனர் சிலர். அவனிடம் அதுபற்றிப் பேசிய பொழுது, "எனக்குக் கல்யாணமே வேண்டாம், அக்கா!" என்றான்.

"என்னடா தம்பி, அதிசயமாகப் பேசறியே?" என்றாள் அவள்.

பசுபதிக்குத் தன் மனநிலையை வெளியிட அதுதான் நல்ல தருணமென்று தோன்றிற்று; வெளியிட்டு விட்டான்.

ருக்மிணி ஒரு கணம் திடுக்கிட்டாள். இருந்தாலும் பெண்ணுள்ளந்தானே அவளுக்கும் இருந்தது? "சில நாள் ஊர் சிரிக்கும். - சிரித்தால் சிரித்துவிட்டுப் போகட்டும். இப்படியாவது அந்தப் பெண்ணின் கஷ்டம் விடியுமானால்?"

"ஆனால் தம்பி, அவள் மனசு எப்படி இருக்குமோ?"

"அதை என்னைக்காட்டிலும் நீ நன்றாக உணர்ந் திருப்பாயே, அக்கா!"

ருக்மிணி, பிறகு அதைப்பற்றி அவனிடம் வாதாட வில்லை. அன்றிரவே கணவரிடம் பேசினாள்: "ஊர் வாயைக் கவனியாது அவர்களை இணைத்துவிடவேண்டும்" என்று வற்புறுத்தினாள்.

"அப்படியா?" என்றார் சதாசிவம், சலனமற்றவர் போல. ஆனால் அவர் உள்ளம் அந்தச் சமயம் கொந் தளித்த கொந்தளிப்பு அவரை அறியாமல் வெளிவரத் தான் வந்தது. "அப்படிச் செய்து கொள்ளும்படி ஏதாவது.........?"

"இருந்தால்கூட அதிசயம் இல்லை."

"ஜானகியைக் கேட்டியா?"

"கேட்பானேன்?"

ஆனால் அவர், அவனையும் அவளையும் கூப்பிட்டுக் கேட்டே விட்டார். "அப்படி நிர்ப்பந்தம் இருந்தால், செய்துவிட வேண்டியதுதான்; வேறு என்ன செய்வது?"

"இல்லாவிட்டால்?" என்றாள் ஜானகி. அந்த ஒரு வார்த்தையில் அவள் உள்ளம் வெளிவந்துவிட்டது.

சதாசிவத்தின் வாய் அடைத்துப் போயிற்று. "சரி, ஒரு நல்ல நாள் பார்த்து ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்றார்.

"இப்பொழுது வேண்டாம்; இன்னும் ஓராண்டு போகட்டும்" என்றான் பசுபதி.

ஜானகி உட்பட எல்லோரும் திடுக்கிட்டனர்.

"ஏண்டா, அப்பா?" என்று கேட்டாள் ருக்மிணி.

"அத்தான் மனசிலே இருக்கிற சந்தேகம் நீங்க வேண்டும்; எங்கள் நேர்மையை அவர் உணரவேண்டும்."

சதாசிவத்தின் மனத்தைச் சம்மட்டி கொண்டு அடித்தன அவன் வார்த்தைகள்.

மறு வாரமே, அவர் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டார். உச்சிப் பிள்ளையார் கோவிலுக்கு அவர்கள் இருவரும் மாத்திரம் சென்று அந்தத் தெய்வீக ரிஜிஸ்திரார் முன் தங்கள் திருமணத்தைப் பதிவு செய்து திரும்பினர்.

*  *  *

விரும்பியவர் போற்றினர்; விரும்பாதவர் தூற்றினர். ஆனால். எல்லோரும் ஒருமுகமாகப் பசுபதியின் தீரத்தையும், நேர்மையையும் வியக்காமல் இருக்கவில்லை. எத்தனையோ வாலிபர்கள் இளம் பெண்களை ஏமாற்றிக் கெடுத்துப் பிறகு கையை விரித்துவிடும் இந்நாளில், ஒரு விதவையை, அதிலும் குழந்தை உடையவளை, நேர்மையாக எல்லோர் சம்மதமும் பெற்று மணந்த அவன் இன்றைய இளைஞர் சமூகத்திற்கே ஒரு வழிகாட்டி என்று நண்பர்கள் பாராட்டினார்கள்.

ஜானகிகூட அவனை ஒரு லட்சிய புருஷனாகவே கருதினாள். தன் வாழ்க்கைக் குறையைத் தீர்க்க வந்த

தெய்வம் என்று வழிபடத்தான் அவள் தீர்மானித்துக் கொண்டாள். ஆனால்—

கண் மூடியிட்ட குதிரையைப்போல அவள் நோக்கு இந்த நிகழ்ச்சிகளின்போது ஒன்றிலே லயித்திருந்தது. தன்னை வாழ்விழந்த பெண் என்று மாத்திரம் கருதினளே அன்றித் தான் ஒரு தாய் என்பதை அவள் மறந்து விட்டாள். ஆனால், அதை உடனே உணர்த்தினன், கோபு. அவள் சலனத்தில் சஞ்சலம் புகுந்தது இங்கே தான்.

அவர்கள் கோவிலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார் கள். அன்று ஞாயிற்றுக்கிழமை; கோபுவுக்குப் பள்ளிக் கூடம் இல்லை. வீட்டில் இருந்தான், தானும் வருவதாகச் சென்னன். அவனைப் போகவிட்டிருக்கலாம். ஆனால் ஏனே சதாசிவம் கட்டிப் பிடித்துக்கொண்டார். அவன் அழவில்லை; சிணுங்கினன்; அவ்வளவுதான். அவர்கள் கிளம்பிச்சென்றபோது அவரை அறியாமலே அவ்வார்த் தைகள் வெளிவந்துவிட்டன. "பிறக்கும் முன்பே அப்பன் உயிருக்கு உலை மூட்டிவிட்டாய். இப்போது பெற்றவளையும் உயிரோடு பறிகொடுத்து விட்டாயேடா, அட அதிருஷ்டம் கெட்டபயலே!"

அது அந்தச் சிறுவன் உள்ளத்தில் மாத்திரமா விழுந்தது? வாயிலைத் தாண்டிக்கொண்டிருந்த ஜானகியின் உள்ளத்திலும் பாய்ந்து எதிரொலித்தது. தன் குறை நிறைந்துவிட்டதாக ஏற்பட்ட இன்ப மிதப்பு அக்கணமே ஆட்டம் கண்டுவிட்டது.

இருந்தாலும் முறைப்படி எல்லாம் நடந்தன. அவள் அவன் மனைவியானள். ஆனால், பெயரளவில் தான் எதிர் பார்த்த வாழ்க்கை இன்பம் பசுபதிக்குக் கிட்டவில்லை.

ஏன் ?

'ஏன் ?' என்பது ஆண்பிள்ளையாகிய அவனுக்குப் புரியவில்லை. இன்னும் இவளுக்கு என்ன குறை இருக்கிறது? ஏன் இந்தச்சோகம் சதா சர்வ காலமும்? அதை அவனுல் கேட்காதிருக்க முடியவில்லை; கேட்டுவிட்டான்.

அவள் தேம்பினுள்; "நான் தவறு செய்துவிட்டேன்" என்ருள்.

"இனிமேல் இப்படிச் சஞ்சலம் அடைவது மதியீனம், ஜானகி! ஊர்வாய்க்குப் பயந்து உற்சாகத்தை இழக்காதே."

"ஊர்வாய் அல்ல."

"பின் ?"

அவள், அருகில் உறங்கிக்கொண்டிருந்த கோபுவைக் காட்டி, "இவனை நான் மறந்துவிட்டேனே!" என்ருள். அவளால் மேலே பேசமுடியவில்லை. அவன் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

பசுபதி அவளைத் தேற்றினுன்: "அவன் என் மகன், ஜானகி!" என்ருன்.

இருந்தாலும், அவள் சஞ்சலம் என்னவோ மாறிவிட்ட தோற்றம் ஏற்படவில்லை.

அன்று சென்றது. மறுநாளும் அப்படியே. தினம் தினம் அதுவேதான்.

முதல்நாள் கோபு தூங்கிக்கொண்டிருந்தான். மறுநாள் அவன் நன்ருகத் தூங்குமுன்பே இந்த நாடகம் ஆரம்பித்துவிட்டது. ஏற்கனவே அவனுடைய சிறு உள்ளத்தில் சலனத்தைத் தோற்றுவித்திருந்தார் தாத்தா. அதை அவன் பள்ளி நண்பர்கள், தெரிந்தவர்கள், தெரி

காமராசர் பல்கலை...

யாதவர்கள் எல்லோரும் கிளறிவிட்டனர். ‘ இனிமேல் அவன் அவளிடம் அம்மா உறவு கொண்டாட லாயக் கற்றவன் ’ என்று அதைத் தாயும் உறுதிப்படுத்திய போது......?

தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் இது போன்ற நிகழ்ச்சி நடைபெறவே, அவன் மனம் சுழலலாயிற்று. தாயின் வாழ்க்கைக்கு இனி, தான் ஒரு தடை என்ற தோற்றம் அவனிடம் ஆழப் பதிந்துவிட்டது. முன்னாள் இரவு முழுவதும் அவன் கண்ணை மூடிக் கொண்டு ஆலோசித்தான். கடைசியில் அவன் கண்ட முடிவுதான் காலையில் செயலாயிற்று.

காபி சாப்பிட்டானதும், படிக்கும் அறைக்கு வந்தான். பள்ளி நோட்டிலிருந்து தாள் ஒன்றைக் கிழித்து அவசரம் அவசரமாகச் சிலவரிகளைக் கிறுக்கினான். “ என்னை ஒருத்தரும் கோவிச்சுக்கலே ; ஆனா, எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கலே. ஓடிப்போறேன். ஆனா, நிச்சயமாகத் திரும்பி வந்துடுவேன். என்னைத் தேடா தேங்கோ.”

கடிதத்தை மடித்து மேஜையின்மீது வைத்தான். பாலக்கரை ஸ்டேஷனை நோக்கி நடையைக் கட்டினான். சிறிது நேரத்தில் ரெயில் ஒன்று வந்தது ; ஏறி அமர்ந்து கொண்டான்.

ரெயில் நகர்ந்த பிறகுதான் அவனுக்குச் சரியாக மூச்சு வந்தது. “ அப்பா ! இனிமே ஒருத்தரும் என்னைப் பார்த்து ‘ எண்டா உங்கம்மா......’ன்னு கேக்கமாட்டா” என்று சாந்தி அடைந்தான் அந்தச் சிறுவன்.

ஆனால், எங்கேயோ வழியோடு வந்த இந்தக் கிழவர் ? இவர்தாம் போகட்டும். வரப்போகும் அந்தப் பரிசோ

தகக் கடன்காரன்—அவன் கேட்டானே 'ஏன் ஓடி வந்தாய்?' என்று! அதைச் சொன்னால்தானே, அவன் மனம் கொஞ்சமாவது இரங்கும்?

'சொல்லுவதா? சொல்லிவிடுவதா? எதைத் தாங்க மாட்டாது ஓடிவந்தேனோ, அதை தானே சொல்லுவதா? முடியாது; முடியாது.'

* * *

ரெயில் மீண்டும் ஒரு ஸ்டேஷனில் வந்து நின்றது. பெரிய ஸ்டேஷனாக இருந்தது. 'ஈரோடு ஈரோடு' என்று சொல்லிக்கொண்டு எல்லோரும் வண்டியை விட்டு இறங்கினர்.

" தம்பி, எங்கிட்டேதான் சொல்லலே; அவருகிட்டே யாவது உள்ளதைச் சொல்லிவிடு. இல்லாவிட்டால் தாணாவுக்குக் கூட்டிண்டு போயிடப் போறாரு" என்று சொல்லிவிட்டுச் சென்றார் கிழவர்.

டிக்கட்டுப் பரிசோதகன் வந்தான். "இறங்கு தம்பி" என்று அவனைக் கையைப்பிடித்து அழைத்துச் சென்றான். அவன் சலனமின்றி அவனைப் பின்பற்றினான். அவன் வாய் இறுக மூடியிருந்தது. அது திறக்காது; இனி எந்த நிலையிலும் திறக்காது.

# சலனம் 2

குறிப்பு: "அடுத்த மாத இதழுக்கு ஒரு கதை அனுப்ப முடியுமா?" என்று ஆசிரியரின் கடிதம் வந்தது. அவர்கள் உபயோகித்திருந்த "முடியுமா?" என்ற வார்த்தை என்னைத் தற்சமயம் சூழ்ந்துள்ள புறநிலைகளை ஒட்டி எழுந்ததாயினும், எனக்கு என்னவோ சற்று உறைத்தது. "முடியாதா?" என்று என்னையே கேட்டுக் கொண்டு, "என்ன கதை எழுதுவது?" என்று சிந்தித் தவனாய்ப் படுக்கையில் சாய்ந்தேன். சிந்தனை என்னை உரக்கத்துக்கு விரட்ட, அந்த உறக்கத்தில் உதித்த கனவு தந்த கதைதான் இது. எனவே, இதை என் கற்பனை என்றோ, உண்மைச் சம்பவமென்றோ எண்ணி மயங்க வேண்டாம்.

1965-ஆம் வருஷத்துக் காலண்டரில், ஜனவரி மாதம் 28-ஆம் தேதியைக் காட்டிய தாளைக் கிழித்த போது, அந்தப் பழைய நினைவு வரவே, ஆயாசப் பெரு மூச்சு விட்டேன்.

"என்ன ஆச்சு ?" என்று கேட்டாள், அருகே, என்னை ஆபீசுக்கு வழி அனுப்ப நின்றுகொண்டிருந்த மனைவி.

"ஒன்றும் இல்லை ; பதினைந்து வருஷத்துக்கு முந்திய இந்த ஜனவரி 29-ஆம் தேதியில் ஞாபகம் வந்தது ; அதுதான்......" என்று மறுபடியும் நெடுமூச்செறிந்தேன்.

"எனக்கு விளங்கவில்லையே !"

"மறந்துவிட்டாயா, என்ன ? அன்று நம் வீட்டில், கிட்டத்தட்ட இதே சமயத்தில் ஒரு பெரிய ரகளை நடந்ததே !"

"ஓஹோ, அதுவா ? ஆமாம் ; அன்றைக்கு நான்கூட அந்த ஆள் பண்ணின ஆர்ப்பாட்டத்தைப் பார்த்துப் பயந்துவிட்டேன். என்னவோ, அதுவும் ஒரு காரியத்துக்கு நல்லதாகத்தானே ஆயிற்று ? அன்று அவன், 'இனிமேல் உங்களுடைய கதை எதையாவது பத்திரிகையில் பார்த்தால், கையை வெட்டி விடுவேன்' என்று கத்தியைக் காட்டிப் பயமுறுத்தியிராவிட்டால், அந்தக் கால் காசுக்குப் பயனில்லாத பிழைப்பைக் கட்டிக்கொண்டு, உடம்பையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிக்கொண்டு தானே இருப்பீர்கள் ?"

மனைவி சொன்னது அவள் வரையில் சரிதான். ஆயினும், அதுவே முழுவதும் என்னை 'மாஜி எழுத்தாள'னாக்கி விடவில்லை. அதற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. எதுவாயினும், என் கைகளைத்தான் அவற்றால் கட்ட முடிந்ததே தவிர, எந்த மனிதரையும், எந்தச் சம்பவத்தையும், ஊடுருவிப் பார்க்கும் அந்த எழுத்தாள மனப்பண்பை அவைகளால் கட்டிவிட முடியவில்லை. அது

கட்டுப்படாத வரையில், வாசகர்களுக்கு வேண்டுமானால், நான் 'மாஜி எழுத்தாளனாகி விடலாம்; ஆனால் என் வரையில் இன்னும் ஜீவனுள்ள எழுத்தாளன்தானே? வைரத்தின்மீது மெழுகைப் பூசிவிட்டதால், அது தெருவில் கிடக்கும் கல்லாகிவிடுகிறதா? காலக் கிரமத்தில் அந்த மெழுகு தேயும்போது அதன் ஒளி உள்ளே சுடர் தெறித்துக்கொண்டுதானே இருக்கும்?

"என்ன, காலண்டரண்டையே நின்றுவிட்டீர்கள்? ஆபீசுக்கு நேரமாகவில்லையா? மணி ஒன்பதேகாலாயிற்றே!"

வழக்கம்போல, என் சிந்தனையைக் கலைத்து, காரியாலயத்துக்குச் செல்லும் மின்சார ரெயிலைப் பிடிக்க விரட்டினாள், என் மனைவி.

* * *

மனிதன் நினைக்கிறதெல்லாம் நடந்துவிட்டால் அவன் தேவனாகிவிடமாட்டானா? அதனால்தான்போலும், பதினைந்து வருஷங்களுக்கு முன்பு நான் கொண்ட நினைவுகள் எல்லாம், பித்தன் கண்ட கனவாகப் போய் விட்டன. 'அல்னஷ்'ரின் மனோராஜ்யம் அவனை, "உள்ளதும் போச்சுடா, நொள்ளைக் கண்ணா" என்ற நிலைக்கு விரட்டியதுபோல, என் மனோ ராஜ்யமும், என்னை எழுத்தாளர் உலகத்திலிருந்து பலவந்தமாகக் கீழே இறக்கி விட்டது.

அந்த ஆண்டு அகில உலகச் சிறுகதைப் போட்டி ஒன்று நடந்தது. போட்டியில் கலந்துகொள்ளுவதை அறவே வெறுப்பவன் நான். "ஆயிரக்கணக்கான வாசகர்கள் மனப்போக்கை, நாலைந்து பேர் எப்படி நிர்ணயிக்க முடியும்?" என்பது என் சித்தாந்தம். அது தவறோ,

சரியோ, அன்றுவரை, நான் எந்தப் போட்டியிலும் கலந்துகொண்டதில்லை.

இதை நன்ருக உணர்ந்திருந்தும், என்னுடன் நெருங்கிப் பழகும் சக எழுத்தாளர்களுள் ஒருவர், அன்று ஒரு பட்டாளத்தையே சேர்த்துக்கொண்டு, என்னை மடக்கி வெற்றி கண்டு விட்டார்.

அவர் சொன்னுர் : " உங்கள் கற்பனைகள் உண்மைச் சம்பவங்களை உரித்துக்கொண்டு பிறக்கின்றன. இதோ, நம் நண்பர் ராகவன் சற்று முன்பு கூறியதே அதற்கு அத்தாட்சி, இம்மாதம் வெளியாகியிருக்கும் உங்கள் 'சலனம்' என்ற கதையைப் படித்த அவருடைய தொழிற்சாலை 'போர்மன்' ஒருவன், " நிஜக் கதையைப் போலவே இருக்கிறது, ஸார் ; எங்கள் ஊரில்கூட போன வருஷம் இப்படியே ஒன்று நடந்தது" என்று பாராட்டி, தனது பாராட்டுதலை நேரில் தெரிவிக்க உங்கள் விலாசமும் வாங்கிப் போயிருக்கிருனும்.

" வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைக் கொண்டு பின்னப்பட்ட கதையை, கற்பனைக் கதை ஒருபோதும் மிஞ்சிவிட முடியாது. எந்த நீதிபதிகளின் தீர்ப்பும் இந்தத் தீர்மானத்துக்கு மாறுபட்டிராது. நான் வேண்டுமானுல் பந்தயம் கட்டுகிறேன். நீங்கள் மாத்திரம் இந்தப் பைத்தியக்கார வைராக்கியத்தை ஒதுக்கிவிட்டு, நடக்கப் போகும் அகில உலகச் சிறுகதைப் போட்டிக்குக் கதை அனுப்புங்கள் ; உங்களுக்கு ஒரு பரிசி நிச்சயமாக உண்டு" என்று பலவாறு அளந்தார்.

நான் புகழ் மொழிகளில் மயங்குபவன் அல்ல ; என் எழுத்தின் தரம் எனக்கு நன்ருய்த் தெரியும். அதனுல்தான் அன்று அவர் வார்த்தைகள், என்னை உச்சி குளிரச் செய்து விட்டன.

உலகச் சிறுகதைப் போட்டிக்குக் கதை எழுத ஆரம்பித்துவிட்டேன் !

சிறந்த வாழ்க்கைச் சம்பவம் ஒன்றை எடுத்துக் கொண்டு அதை ஒப்பற்ற அமர கதையாக்கிவிடும் உத்தேசத்துடன் எழுதிக்கொண்டிருந்தேன்.

அப்பொழுதுதான், அந்தத்துயரம் நிறைந்த 1950-ஆம் ஆண்டின் ஜனவரி 29-ஆம் தேதி வந்தது.

காலையில் வழக்கம்போல, ஆபீசுக்குப் புறப்படு முன்பு, முன்னாள் தேதித் தாளைக் கிழித்துவிட்டு ஓரடி எடுத்து வைத்தேன்.

" யாரு சார், உள்ளே ?" என்ற குரலும், வெளிக் கதவுத் தாழ்ப்பாளைத் தட்டும் ஓசையும் கேட்டன.

கதவைத் திறந்தேன். கன்னங் கறேலென்று, முறுக்கிய மீசையுடன், ஆஜானுபாகுவாய்,ஓர் நாடோடித் தமிழன் நின்றுகொண்டிருந்தான்.

" மாயாவீங்கறது நீங்க தானா ஸார் ?" அவன் கேட்ட தோரணை எனக்குப் பிடிக்கவே இல்லை.

" ஆமாம் ; என்ன வேணும் ?"

" இந்தக் கதை நீங்க எழுதினதுதானா, ஸார் ?" அவன், கையிலிருந்த இதழில் வெளியாகியிருந்த 'சலனம்' கதைப் பக்கத்தைத் திருப்பி என்முன் நீட்டினான்.

முதல் நாள் எழுத்தாள நண்பர் வீட்டில் கேட்ட செய்தி, எனக்கு நினைவு வந்தது. ஓஹோ ! இவன்தானா, அந்தக் கதையைப் பாராட்ட விலாசம் வாங்கிப் போன ஆசாமி ?

" ஆமாம் ; கதையைப் படித்தீர்களா ? நன்றாக இருக்கிறதா ?"

"ரொம்ப நல்லாயிருக்குது ஸார்."

"என்னவோ, உங்களைப் போன்ற வாசகர்கள் தரும் ஊக்கந்தான், இது போன்ற ஆக்கவேலைகளுக்கு அஸ்தி வாரமாகிறது."

அவன் என்னைப் பார்த்த பார்வை பயமாயிருந்தது. "ஊக்கந்தானே, ஸார்? இதோ, தயாராகவே கொண்டு வந்திருக்கேன்." அவன் இடுப்பில் செருகியிருந்த கத்தியைச் சடாரென்று உருவி, "இதை எழுதின கையை வெட்டிட்டுப் போவதுன்னுதான் வந்திருக்கேன். என்ன துணிச்சல் உனக்கு? எங்கவூட்டுக் கதையை எந்தக் காமாட்டிப் பயகிட்டியோ கேட்டுத் தெரிஞ்சுக் கிட்டு, அதை ஊரெப் பேரை மாத்தி எழுதிப் போட்டு என் பெண்டாட்டியை வூட்டை விட்டு ஓடிப் போகச் செய்திட்டியே! அப்படித் திருட்டுத்தனமா எழுதின கையை வெட்டினு என்ன? இல்லே, கேக்கறேன், வெட்டிப் போட்டா என்னுன்னு?"

அவன் போட்ட சத்தத்தில் அங்கே ஊர் கூடி விட்டது. வீட்டினுள்ளிருந்து ஓடிவந்த என் மனைவி, குழந்தைகள் 'குய்யோ முறையோ' என்று ஓலமிட ஆரம்பித்துவிட்டனர். அண்டை அயலில் இருந்தவ ரெல்லோரும் தமிழர் ஆதலால், அவனைச் சமாதானப் படுத்தி, என்னவென்று விசாரித்தனர்.

எல்லாம் என் 'சலனம்' கதையில் எழுதியிருந்தது போலவே அவன்வாழ்வில் நடந்திருந்தது. கந்தையாபிள்ளை என்பது அவன் பெயர். அவன் ஊர் திருநெல்வேலிக்குப் பக்கத்தில் ஓர் கிராமம். பெரிய 'கில்லாடி' அவன். இளைய தாரமாக, திருநெல்வேலியில் வாழ்க்கைப்பட்டிருந்த தங்கையின் வீட்டில் இருந்துகொண்டு, அங்கேயே ஒரு பஸ் கம்பெனியில் 'மெக்கானிக்'காக வேலை செய்து

வந்தான். அவன் தங்கையின் கணவர் பள்ளிக்கூட தலைமை ஆசிரியர். அவருக்கு மூத்த தாரத்தில் மாணிக்கம் என்று ஒரே பெண். அவள் சிறுவயதில் 'அறுத்து' ஓர் ஆண் குழந்தையுடன் அப்பாவிடம் வந்திருந்தாள். மாணிக்கமும் கந்தையாவும் நாளடைவில் மனம் ஒன்றி, சமூகச் சட்டத்திட்டங்களுக்கு எதிராகப் பகிரங்கமாகக் கல்யாணம் செய்துகொண்டு, ஊரிலிருக்கப் பிடிக்காமல் பம்பாய்க்கு வந்துவிட்டார்கள். மாணிக்கத்தின் பன்னிரண்டு வயது மகன் ஊரில் தாத்தாவிடம் வளர்ந்து வந்தான். அவனையும் நாளடைவில் ஊர் ஏசல் வீட்டை விட்டு விரட்டிவிட்டது. இவை நடந்து இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. இன்றும் அவன் எங்கே போனான், என்ன ஆனான் என்பது எவருக்கும் தெரியாது.

இது பழங்கதை. இப்பொழுது நடந்தது: மாணிக்கம் நாலு வகுப்புவரையில் படித்தவள், பத்திரிகைகளைத் தவறாது வாசிப்பவள். என் கதையையும் படித்திருக்கிறாள். அவள் ஆய்ந்தோய்ந்த உள்ளத்தில் அது சலனத்தைக் கிளப்பிவிட்டது. அவளால் அவனுடன் வாழ முடியவில்லை. என் கதையால் எழுந்த கலக்கத்தை வெளியிட்டு ஓர் கடிதம் எழுதி வைத்துவிட்டு, அவளும் எங்கேயோ ஓடி மறைந்து விட்டாள். அவள் எங்கேயாவது விழுந்து செத்திருப்பாளென்று கந்தையா சொன்னான். இருந்தாலும் இருக்கலாம். சே! கடைசியில் என் கற்பனை, இப்படியா ஒரு குடும்பத்தைச் சிதைக்க வேண்டும்?

கூடியிருந்தவர்கள் கந்தையாவைச் சமாதானம் செய்ய முயன்றார்கள். ஆனால், அவனோ, விடாப்பிடியாக என் கையை வெட்டாமல் போகமாட்டேனென்று

குதித்தான். "இந்தக் கை, இன்னிக்கு என் குடும்பத்தைக் கெடுத்திச்சு; இதை இப்படியே நீளவிட்டா, எத்தனை குடும்பத்தைப் பாழ்படுத்திடும்? எனக்குப் பத்து வருசம் செயில் கெடைத்தாலும் கெடைக்கட்டும்; இவரு கையை ஒடிக்காம நான் போகமாட்டேன்' என்று ஆர்ப்பாட்டம் பண்ணினுன்.

என் மனம் விண்டு போயிற்று. "அவனை விட்டு விடுங்கள், ஸார்" என்றேன், பிடித்துக்கொண்டிருந்தவர்களிடம். அவர்கள் விடவில்லை; ஆகவே, நானே முன் சென்று, "நான் அறியாது செய்த பிழை இது, கந்தையா. இருந்தாலும் பிழை பிழைதான். நீ சொல்வதுபோல, அது இன்னும் பல குடும்பங்களைக் கெடுத்தாலும் கெடுத்துவிடும்; இந்தா, அதை வெட்டிவிடு" என்று கையை நீட்டினேன்.

கூட இருந்தவர்கள், என்னை எட்ட இழுத்து, "என்ன ஸார் இது, பைத்தியம்? அவன் வெறி கொண்டிருக்கிறுன். அவனிடம் போய் விளையாடுகிறீர்களே" என்றுர்கள்.

"விளையாடவில்லை ஸார்; உண்மையாகத்தான்."

என் மனைவி குறுக்கே விழுந்து, என்னைக் கரகர வெனப் பிடித்திழுத்து வீட்டுக்குள் தள்ளிக் கதவை அடைத்தாள்; பிறகு மடியை விரித்து ஏந்திக்கொண்டு கந்தையாவின் முன்சென்று, "அப்பா, உனக்கு ஆயிரம் முறை வேண்டிக்கொள்கிறேன். அந்தப் பாழாய்ப் போன கதையே இனிமே எழுதாதபடி பார்த்துக்கறேன். நீ பெரிய மனசு பண்ணி இந்த ஒரு தடவை மாத்திரம் அவரை மன்னிச்சுடு; நான் நாலஞ்சு புள்ளைகுட்டிக் காரி; அந்த ஒரு ஜீவன் சம்பாதிச்சு, நாங்க சாப்பிடணும்;

உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு; அவரை மன்னிச்சுடு" என்று கண்களில் நீர் மல்க மன்றாடினாள்.

கந்தையா கையிலிருந்த கத்தியைத் தூர வீசி எறிந்தான். தன்னைப் பிடித்து நின்றவர்களை ஓர் எட்டில் உதறிக்கொண்டு, "இந்தாப் பாரு; இந்த மகாலட்சுமியின் மொகத்துக்காக ஒன்னெச் சும்மா விடறேன். நான் ஒரு பத்திரிகை விடாம வாங்கிப் பாத்துக்கிட்டிருப்பேன். இனிமே எப்போதாவது ஒன் கதையை எதிலேயும் பாத்தேன், அவ்வளவுதான்; அப்புறம் கை மாத்திரமில்லே, ஆளையே தீத்துக் கட்டிடுவேன்; நல்லா நெனவிலே வச்சுக்கோ" என்று கூறிவிட்டு இறங்கி நடந்தான்.

அவனுடைய அந்த எச்சரிக்கையும், எனது கற்பனை ஓர் குடும்பத்தைக் கலைத்துவிட்ட சோக நினைவும் சேர்ந்து, அன்றே என்னை எழுத்து வேலைக்குப் பெரிய கும்பிடு போடச் செய்துவிட்டன.

கடைசியில் என்ன? அகில உலகச் சிறுகதைப் போட்டிக்குத் தமிழ்க் கதையே தேர்ந்தெடுக்கப்படவில்லை!

இத்தனை தடபுடலாக என் வாழ்வின் போக்கை மாற்றிவிட்ட அந்த ஜனவரி 29-ஆம் தேதி, அந்தப் பதினைந்து வருஷங்களாக, ஒவ்வொரு தடவை வரும் போதும் என் உள்ளத்தைக் கிளறாமல் சென்றதில்லை.

* * *

**ப**தினைந்து வருஷங்கள்!

அந்தப் பதினைந்து வருஷங்களில் பாரதநாடு எத்தகைய பிரமிக்கத் தக்க மாறுதல்களை அடைந்துவிட்டது! கைத்தொழில், விவசாயம், இலக்கியம், பொருளாதாரம் இப்படி

ஒவ்வொன்றிலும் நம் நாடு எத்தனை முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

ஆயினும் இத்தகைய பிரமாத முன்னேற்றங்களுக்கிடையே ஒரு சில விஷயங்களில் அது பழைய பாரத நாடாகத்தான் இருந்தது. முக்கியமாக, அத்தனை செழிப்புக்கிடையேயும், பிச்சைக்காரர்கள் இருந்துகொண்டிருந்ததைக் குறிப்பிடவேண்டும். காலத்துக்கு ஏற்றவாறு, அவர்கள் கோலத்தில்—போக்கில்—மாறுதல் இருந்ததென்னவோ, உண்மையே; அன்று கந்தலைச் சுற்றிக்கொண்டு பிச்சை எடுத்தவர்கள், இன்று நன்றாக உடுத்துப் பிச்சை யெடுத்தார்கள். அன்று கெஞ்சிக் கூத்தாடி இரந்தவர்கள், இன்று அதிகாரத்துடன் இரந்தார்கள். அன்று ரெயில் வண்டியில் டிக்கட்டில்லாமல் ஏறிப் பயந்து பயந்து பிச்சை கேட்டவர்கள், இன்று டிக்கட்டுடன் பிரயாணம் செய்து, தைரியமாய்ப் பிச்சை கேட்டார்கள். இப்படியாகப் பிச்சை எடுக்கும் தொழிலென்னவோ, சிரஞ்சீவியாக நம் நாட்டில் வாழ்ந்துகொண்டுதான் இருந்தது.

அன்று 1956-ஆம் வருஷம் ஜனவரி 29 ஆம் தேதி அன்றுதான் பாருங்களேன்; நான் காரியாலயத்துக்குச் செல்லரெயிலேறிய பொழுது, என்னுடன் ஒரு மராத்திச் சிறுவனும் ஏறினன். அவனைப் பார்த்தால், செல்வர் வீட்டுப் பிள்ளையைப் போலிருந்தது. வண்டி புறப்பட்டது; அவன் எழுந்து ஒவ்வொருவரிடமாகக் கை நீட்ட ஆரம்பித்துவிட்டான். எனக்கு எத்தனை எரிச்சலாக இருந்தது, தெரியமா ? பன்னிரண்டு வயசு வாண்டுப் பயல். இவன் இப்பொழுது இப்படிச் சோம்பேறியாகப் பிச்சையெடுக்க ஆரம்பித்துவிட்டானே ! ம்......இவன் மீது குற்றம் இல்லை. இத்தகைய சோம்பேறிகளுக்குக்

கொடுத்துக் கொடுத்து ஊக்குகிறார்களே, அவர்களைத் தான் குறை கூறவேண்டும்.

இப்படி நான் உள்ளூறப் புகைந்துகொண்டிருந்த பொழுது, அவன் என்னிடம் வந்து கையை நீட்டினான். எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டது. சிறுவனென்றும் பாராமல், வார்த்தைகளால் வெளுத்துக் கட்டிவிட்டேன்.

பிரயாணிகள் எல்லோரும் என் பேச்சையே கவனித் தார்கள். பெருமை பொங்க என் கற்பிரசங்கத்தை முடித்துக்கொண்டு அந்தப் பையனைப் பார்த்தபோது, அவன் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தான்.

"சோம்பேறிப் பயலே, நாட்டைக் கெடுக்கத் தோன்றியிருக்கும் நாசகாலியே, உள்ளதைச் சொன்னால் அழுகை வேறா? போடா போ, இங்கேயிருந்து" என்று கோபம் தாங்காமல் கத்தினேன்.

"நீங்க நினைக்கிறபடி நான் பிச்சைக்காரனில்லை ஸார்" என்று விசும்பினான் அச்சிறுவன்.

"பின்னே எதுக்குடா இப்பொழுது ஒருத்தர் ஒருத்த ராகக் காசு கேட்டாய்?"

"நான் வயிற்றை நிரப்பக் கேட்கவில்லை ஸார்; ஊருக்குப் போகவேண்டும்; கையில் காசில்லை; அதற் காகத்தான்......"

"நீ எந்த ஊருடா?"

"இந்த ஊருதான்; ஆனால் இங்கே இருக்கப் பிடிக்க வில்லை; வேறெங்கேயாவது பிழைக்கப் போகலாமென்று பார்க்கிறேன்."

"அப்படியானால், உனக்கு அப்பா அம்மா யாரும் இல்லை?"

“சும்மா எதுக்காக ஸார், சின்னப் பையன், அவன் வாயைக் கிண்டிக்கொண்டிருக்கிறீர்கள்? ஏதாவது கொடுக்கிறதானுல் கொடுங்கள்; இல்லாவிட்டால் போகச் சொல்லுங்கள்” என்று பக்கத்தில் வக்கீலைப்போலக் கறுப்புக்கோட்டு அணிந்து, கையில் காகிதக் கட்டு ஒன்றுடன் பிரயாணம் செய்து வந்த ஒருவர், சம்மனில்லாமல் வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசினுர்.

என் உள்ளத்தின் ஒரு பகுதிகூட, நான் கேட்கும் கேள்விகள் அவசியமற்றவை என்று அச்சுறுத்தியது. ஆமாம்; நானே, அவனுக்குக் கால் காசுக்கூடக் கொடுக்கப் போவதில்லை; பின் எதற்கு இந்த விசாரிப்புகளெல்லாம்? ஆனுல், உள்ளத்தின் மற்றைப் பாதி-அது தான், பதினைந்து வருஷங்களாக எழுதுவதை விட்டும், தன்னிடத்தை விடாது பற்றிக்கொண்டிருந்த அந்த எழுத்தாளர் பகுதி-அது இத்தகைய விசாரிப்புகளில் ஆவல் கொண்டது; ருசியும் கண்டது. எனவே, அழையா விருந்தாக வந்த அந்த வக்கீலின் வாதத்தைப் பொருட்படுத்தாது, அச்சிறுவனை நோக்கி, “சொல்லுடா; ஏண்டா விழிக்கிருய்?” என்று உலுக்கினேன்.

“எனக்கு அப்பா இல்லை, ஸார்; அம்மாதான் இருக்கிருள்” என்ருன் அவன், தயங்கியவாறே.

“அம்மா எங்கே இருக்கா? இங்கேதானு?”

“இங்கேதான், ஸார்.”

“என்ன செய்கிருள்? அவளும் உன்னைப்போலப் பிச்சை எடுக்கிருளா?”

அவன் குபீரென்று அழுதுவிட்டான். “இல்லை, ஸார்; அவள் பிச்சை எடுக்கவில்லை; நன்ருகத்தான் வாழ்கிருள். அவள் இங்கே ஓர் ஆஸ்பத்திரியில் நர்ஸ் வேலை பார்க்கிருள்.”

"என்னடா புரளி பண்ணுகிறாய்? அம்மா நர்ஸ் வேலை பார்க்கிறாளென்றால், நீ ஏண்டா இப்படித் திரிகிறாய்?"

அவன் பதில் சொல்லாது வெறுமனே நின்றான்.

"என்னடா முழிக்கிறாய்?"

"நீங்க காசு கீசு கொடுக்கவேண்டாம், ஸார்; என்னை விட்டுடுங்க, ஸார்" என்று அழுதான் அவன்.

"சும்மா சொல்லுடா; இவ்வளவு தூரம் எல்லாம் சொன்னாய்; இப்போ மறைக்கப் பார்க்கிறாயே!"

"அது என் சொந்த விஷயம், ஸார்; சொல்லமாட்டேன்." அழுது நின்ற சிறுவன் அழுவதை நிறுத்திக் கம்பீரமாக நின்று இவ்வாறு சொன்னான்.

என் மனம் சட்டென்று பதினைந்து வருஷங்கள் பின்னோக்கிப் பாய்ந்தது.

"அது என்ன சொந்த விஷயம்!"

இதே வார்த்தைகளை அன்று என் 'சலன'க் கதையில் வந்த இவனைப் போன்ற சிறுவன் கூறுவதாக எழுதியிருந்தேன். எதன் பொருட்டு என் கதைப் பையன் அப்படிச் சொன்னானோ அதன் பொருட்டுத்தான் இவனும் இப்படிச் சொல்லுகிறானா? ஒருவேளை இவன் அம்மாவும்......

ரெயில் அடுத்த ஸ்டேஷனில் வந்து நின்றது. பையன் 'செத்தோம் பிழைத்தோம்' என்று இறங்கக் கிளம்பிவிட்டான். என் அருகில் அமர்ந்திருந்த வக்கீல் அவசரமாகப் பையனின் கையில் ஒரு ரூபாய் நாணயத்தைத் திணித்து, "உன் அம்மா பெயர் என்ன தம்பி?" என்று அன்பொழுகக் கேட்டார்.

"பவானி" என்றான் அச்சிறுவன். வார்த்தை வெளி வர மனமின்றி வந்ததுபோல ரகசியமான குரலில்

வந்தது. இதைச் சொல்லிவிட்டு அவன் திரும்பிப் பாராமல் இறங்கிச்சென்ருன். பையனிடம் சென்று நின்ற என் கவனத்தை, மறு விநாடி, "ஆ! பவானியின் மகனு?" என்ற வக்கீலின் அலறல் கவர்ந்து இழுத்தது.

* * *

ஆம். அவர் ஆயாசத்துடன் தம் ஆசனத்தில் சாய்ந்து, "ஐயோ, அநியாயமாகக் கெடுத்து விட்டேனே" என்று அங்கலாய்த்தார்.

இதுவரை அங்கே நடைப்பெற்ற சம்பாஷணை முழுவதும் ஹிந்துஸ்தானியிலேயே நடந்தது. ஆனல், இப்பொழுது அவர் சட்டென்று தமிழில் தமக்குள்ளே பேசிக்கொண்டதைக் கேட்டதும், என் எழுத்தாள உள்ளம் சந்தோஷமும் ஊக்கமும் அடைந்தது. எப்பொழுது அவர், "பவானியின் மகனு?" என்று அலறினரோ, அப்பொழுதே அச்சிறுவனுக்கும் அவருக்கும் ஏதோ தொடர்பு இருக்கவேண்டும் என்று அது ஊகித்து விட்டது. அதை மற்றப் பிரயாணிகள் அறியாதவாறு நான் மாத்திரம் கேட்டறிய அவர் தமிழராக இருந்தது எவ்வளவு சௌகரியமாய்ப் போயிற்று! கிடைத்த தருணத்தை விடாது, நான் அவரிடம் பேச்சுக் கொடுத்தேன்.

"என்ன ஸார் விஷயம்? ஏன் இப்படி வருந்துகிறீர்கள்?"

"நீங்களும் தமிழரா" என்று அவர் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தார்.

"ஆமாம்; விஷயம் என்ன? சொல்லுங்கள்."

" என்னவென்று சொல்ல ஸார் ? உலகம் ரொம்ப கெட்டுப்போச்சு. அது கெடுவதற்குத் தெரிந்தோ, தெரியாமலோ நாம் உதவிக் கொண்டிருக்கிறோம்."

" தெரியாமல் இல்லை, ஸார் ; தெரிந்துதான் உதவு கிறோம். இதோ, இந்தப் பையன், சோம்பேறியாக இத்தகைய பிச்சைத் தொழிலில் நிரந்தரமாகத் தங்கிவிடக் கூடும் என்பது தெரிந்திருந்தும், அவனுக்கு ஒன்றும் இரண்டும் கொடுத்து ஊக்கத்தானே செய்கிறோம் ?"

" இந்தப் பையன் சமாசரம் வேறு, ஸார்; இவனுக்கு ஒன்றல்ல, இரண்டல்ல ; நூறு, ஆயிரம் கொடுத்தாலும், என் பாவத்துக்குப் பிராயச்சித்தமாகாது. ஏனென்றால், இவனை இந்த நிலைக்கு விரட்டக் காரணமானவன் நான் தான்."

அவருக்கும் அந்தச் சிறுவனுக்கும் தொடர்பு இருக் கிறதென்பதை முன்பே ஊகித்துவிட்ட போதிலும், அதைக் காட்டிக்கொள்ளாது, " நீங்களா ! எப்படி ஸார்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டேன்.

" ஆமாம் ; நான்தான். அது பெரிய கதை. என் மனத்தை நான்கு நாட்களாகக் குடைந்து கொண்டி ருக்கும் கதை. என் உள்ளத்தில் பெருஞ்சுமையாக ஏறியிருக்கும் அதை யாரிடமாவது சொன்னாலன்றி, மனப் பாரம் இறங்காது போலிருக்கிறது. நீங்கள் எதுவரை போகவேண்டும், ஸார் ?"

" சர்ச் கேட் வரையில் போகிறேன் ; சாவகாசமாய்ச் சொல்லுங்கள் ; ஆனால், நீங்கள் இங்கேயே மாதுங்கா எங்கேயாவது இறங்கவேண்டுமோ, என்னவோ ?"

" இல்லை ; இல்லை. நானும் 'மரைன் லைன்ஸ்' வரை வருகிறேன். அங்கேதான் நான் தொழில் நடத்துகிறேன்; நான் ஒரு வக்கீல், ஸார்."

" அதுதான் உங்கள் கோட்டையும், கையில் இருக்கும் காகிதக் கட்டையும் பார்த்ததுமே தெரிந்து விட்டதே. சரி; கதையைச் சொல்லுங்கள்."

வக்கீல் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டு ஆரம்பித்தார்.

* * *

இந்த உலகத்தில் மன உறுதி இல்லாத மனிதர் வாழ முடியாது, ஸார். ஆணாகட்டும்; பெண்ணாகட்டும்; எத்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் உறுதியோடு ஈடுபட வேண்டும்; அதில் வரும் விளைவுகளைச் சலனமின்றி ஏற்க வேண்டும். அதன்றி, ஒரு காரியத்தில் இறங்கிவிட்டுப் பிறகு, மனச் சலனமடைந்து 'ஆற்றில் ஒரு கால்: சேற்றில் ஒரு கால்' என்ற நிலையிலிருப்பவர்கள், எதிர் பார்த்த பயனையும் அடைய மாட்டார்கள்; துன்பத்திலும் சிக்கி அவதிப்படுவார்கள்.

இந்த நிலைக்கு, இதோ, நான் ஓர் உதாரணம். இருபத்தெட்டு வயதுவரையில் மன உறுதி தளராதிருந்த என்னிடம், இரண்டு மாதங்களுக்கு முன்பு ஓர் சலனம் ஏற்பட்டது. அந்தச் சலனத்தின் பயனாகத்தான், இப்பொழுது துயர் அநுபவிக்கிறேன். என்னோடு மட்டு மல்ல; ஒரு பிழையும் அறியாத இந்தக் குழந்தையையும் துயருறச் செய்துவிட்டேன்.

ஐயா, நானும் இந்தச் சிறுவனைப் போலிருந்தபோது விரக்தியுடன் வீட்டைவிட்டு வெளியேறினேன். இரண்டு உறுதிகள் அன்று என் மனத்தில் உரம் பெற்றிருந்தன. ஒன்று, இனி வீட்டுக்கே திரும்பு வதில்லை என்பது. அதை இன்றுவரை நிறைவேற்றி

விட்டேன். ஆருவது வகுப்புப் பரீட்சையை எழுதி விட்டு வெளியேறிய நான், உறுதியோடு இருந்ததால்தான். இன்று பி. எல். வரை படித்து, என்வரைக்கும் தாராள மாகக் காணும் வருவாயுடைய இந்த வக்கீல் தொழிலே எட்டிப்பிடிக்க முடிந்தது. வீட்டையும் சுற்றத்தையும் பிரிந்து வந்த நான், சொந்த முயற்சியாலே முன்னுக்கு வந்தேன் என்று பெருமைப்பட்டுக் கொள்வதற்கில்லே. அதற்குப் பிறர் உதவிகளே அவ்வப்போது பெறத்தான் பெற்றேன். ஆனுல் அவ்வுதவிகளேப் பெற எத்தனே கஷ்ட நஷ்டங்களே அனுபவித்தேன்! என் வயதுக்குத் தாங்கமுடியாத எவ்வளவு சங்கடங்கள் பட்டேன்! இருந்தாலும், அத்தனே இன்னல்களே அனுபவித்தும் மனே திடம் குறையாதிருந்தால்தான், இன்று ஓர் நிலேயான வாழ்வை எட்டியிருக்கிறேன்.

அது போகட்டும்; அது நான் வெற்றி கண்ட செய்தி. ஆனுல், தோற்ற செய்தியோ? அதைச் சொல்கிறேன். கேளுங்கள். சிறுவயதில், வாழ்வில் இடர்ப்பட்ட ஓர் கசந்த அனுபவம் உயிருள்ளமட்டும் பெண்களேத் திரும்பிப் பார்க்கலாகாது என்ற வைராக்கியத்தை என்னுள் வளர்த்திருந்தது.

ஐயா, அந்த என்னுடைய இளமை வாழ்வைப்பற்றி விவரித்துப் பொழுது போக்கப் போவதில்லே. என்வாழ்வில் பெண்ணுக்கு இடமில்லே என்ற உறுதிஅந்த வயதிலே என்னிடம் ஏற்பட்டது என்பது மாத்திரம் உங்களுக்குத் தெரிந்தால் போதும்; அதை இந்த இருபத்தெட்டு வயது வரையில் தளராது காத்துவந்தேன். எப்பொழுது அதில் என்னேயும் அறியாது தளர்ச்சி ஏற்பட்டதோ, அப்பொழுதே நான் துயருக்கு விதை விதைத்துக் கொண்டவனுகிவிட்டேன்.

மூன்று வருஷங்களுக்கு முன்பு, அதாவது 1953-இல் பி. எல். பரீட்சையில் தேறினேன். உடனே ஸ்ரீதர் பாண்டே என்ற மகாராஷ்டிர வக்கீலிடம் ஜூனியராக வேலைக்கு அமர்ந்தேன். பாண்டே என் நாதியற்ற தன்மையை அறிந்து மிகுந்த கருத்துடன் எனக்குத் தொழிலைப் பயிற்றுவித்தார். அவர் 'ஸிவில் கேஸ்'களை நடத்துவதில் நிபுணரெனப் புகழ் பெற்றவர். அவருடைய கவனிப்பில் இரண்டே வருஷங்களில், எந்தச் சிக்கலான கேஸையும், கட்சிக்காரருக்குச் சாதகமாகத் திருப்பிவிடும் வாத வன்மையை அடைந்தேன். என் முன்னேற்றத்தைக் கருதி அவர் என்னைத் தமது கூட்டு வக்கீலாக்கிக் கொள்ளவும் தீர்மானித்தார்; ஆனால்—

வெற்றிப்படியில் முதல் சறுக்கல் எனக்கு அப்போது ஏற்பட்டது. திடீரென்று ஒரு நாள், பாண்டே கார் விபத்துக்குள்ளாகி மரணமடைந்தார். நான் கெட்டிக்காரன்; பாண்டேயிடம் ஜூனியராக இருந்து அனுபவம் பெற்றவன் என்பதனைத்தும் தெரிந்தும், அவரிடம் கேஸ்நடத்திக் கொண்டிருந்த கட்சிக்காரர்களில் ஒருவர்கூட என்னிடம் வரவில்லை. எத்தனைதான் சாமார்த்தியசாலியானாலும்,'கற்றுக்குட்டி' என்று ஒதுக்கி விட்டு, வேறு வக்கீல்களிடம் அவர்கள் போய்விட்டார்கள்.

நான் வெறுமனே கோர்ட்டுக்கு எதிரே ஓர் அறையை அமர்த்தி, மேஜை, நாற்காலி, சட்டப்புத்தகங்கள், குமாஸ்தா முதலிய அந்தஸ்துகளில் ஒன்றும் குறைவின்றி, ஈ ஓட்டிக்கொண்டிருந்தேன்.

இந்த நிலையில் ஒரு நாள் காலை ஆபீஸ் அறையில் உட்கார்ந்து பொழுதைப் போக்க, சட்டப் புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்த போது, இளவயதுடைய

அழகிய நங்கை ஒருத்தி அங்கே வந்தாள். "நமஸ்தே வக்கீல் ஸாகேப்" என்று என்னுடன் பலகாலம் பழகியவள் போல அவள் வந்த தோரணை எனக்கு என்னவோ போலிருந்தது.

"நமஸ்தே; நீங்கள் யார், தெரியவில்லையே?"

"என்னை உங்களுக்குத் தெரியாது; ஆனால் நான் அறிவேன். உங்கள் ஸீனியர் வக்கீல் பாண்டே இருந்தாரே; அவருடைய பெண், நான்."

பாண்டேயிடம் இரண்டு வருஷங்கள் ஜூனியராக இருந்தேனென்றாலும், அவருடைய குடும்ப வரலாறு எதுவும் எனக்குத் தெரியாது. அவருடைய காரியாலயமும் வீடும் வெவ்வேறு இடங்களில் இருந்ததால், அவர் குடும்பத்தினர் யாரையும் நான் பார்த்ததும் இல்லை.

அந்தப் பெண் தொடர்ந்து சொன்னாள்: "அம்மா தான் உங்கள் விலாசத்தைக் கொடுத்துப் பார்க்கச் சொன்னாள், என் மைத்துனரிடமிருந்து பணம் கொஞ்சம் வரவேண்டியிருக்கிறது. அவருக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பவேண்டும்; அதற்கும் பணம் பெயராவிட்டால் கேஸ் போடவேண்டும்."

நான்கு மாதங்களாக சும்மா இருந்துகொண்டிருந்த என்னிடம் வந்த முதல் கேஸ் இது. அதுவும் எவர் எனக்குத் தொழில் குருவாக இருந்தாரோ, அவருடைய மகளின் வழக்கு. என் உற்சாகத்துக்குக் கேட்கவும் வேண்டுமா? உடனே விவரங்களையெல்லாம் கேட்டுக் குறித்துக்கொண்டேன்.

அவள் பெயர் பவானி, பாண்டேயின் ஒரே மகள். பம்பாயில்தான் வாழ்க்கைப்பட் டிருந்தாள். கணவன் ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு இறந்துவிட்டான்.

அவன் பெரிய பணக்காரன் அல்ல. 'கிர்காம்' பகுதியிலிருந்த இரண்டொரு கட்டிடங்களே அவனுடைய சொத்துக்கள். அவற்றை அவனுடைய ஒன்றுவிட்ட தம்பி ஒருவனுடைய மேற்பார்வையில் விட்டிருந்தார், பாண்டே.

கணவன் இறந்த பின்பு, பவானி நர்ஸ் வேலைக்குப் படித்து, சென்ற மூன்று வருஷங்களாக கே. இ. எம். ஆஸ்பத்திரியில் வேலை பார்த்து வருகிறாள்.

பாண்டே உயிரோடு இருந்தவரையில் பவானியின் வீடுகளில் வரும் வாடகைப் பணத்தை வசூல் செய்து, வருஷத்துக்கு ஒரு தடவை ஒழுங்காக அடைத்துக் கொண்டிருந்தான் மைத்துனன். அவர் இறந்ததும், தகராறு செய்ய ஆரம்பித்துவிட்டான்.

**அ**ன்றே நோட்டீஸ் தயாரித்து அனுப்பிவிட்டேன். ஒரு வாரத்தில் அவனிடமிருந்து பதில் வந்தது. பணம் இறந்துபோன பாண்டேயிடம் கொடுக்கப்பட்டுவிட்டதாகவும், பவானியின் சொத்துக்களைப் பராமரிக்கத் தங்களுக்குள் ஒப்பந்தம் எதுவும் இல்லாததால், பாண்டே பெற்றுக்கொண்ட பணத்துக்கு இது வரை ரசீது எதுவும் தரவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தான்.

பதில் வந்த அன்று பவானிக்குக்குச் சொல்லியனுப்பினேன். மாலையில் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பியதும் அவள் காரியாலயத்துக்கு வந்தாள்.

நோட்டிஸைக் காட்டினேன்.

"அத்தனையும் பொய்; அப்பா இறந்தபிறகு சல்லிக் காசுகூடத் தரவில்லை, பாவி. சென்ற வருஷத்து

வாடகைத் தொகை பூராவும் பாக்கி நிற்கிறது. சரி; தாக்கல் செய்துவிடுங்கள்" என்றாள் அவள்.

"ஆனால், நம் கட்சி பலமாக இல்லையே, அம்மா. வீடுகளின் வாடகை பணத்தை வசூல் செய்து தருவதாக, அவனிடமிருந்து ஓர் பத்திரம் எழுதி வாங்கியிருக்க வேண்டும். சட்டம் தெரிந்த உங்கள் அப்பா, அதைச் செய்யத் தவறிவிட்டார். இப்பொழுது அவன் பணம் தரவேண்டும் என்பதற்கு வேறு அத்தாட்சி என்ன இருக்கிறது ?"

"அப்படியானால் அது அந்தப் பாவிக்குத் தாரை வார்த்ததுதானா ?"

"அப்படி விட்டுவிட முடியுமா ? கேஸ் பலமில்லா விட்டாலும் முயன்று பார்த்துவிட வேண்டியதுதான். ஆமாம் ; உங்கள் அப்பா வீட்டுவரவு செலவுகளுக்குக் கணக்கு வைத்திருப்பதில்லையா ?"

"கணக்கா ?" பவானி சோக நெடுமூச் செறிந்தாள். "அப்பா தமது வரவு செலவைக் கணக்குப் பண்ணியிருந் தால், அவர் இறந்து ஆறு மாதங்களாவதற்குள் நாங்கள் இந்த நிலையை அடைந்திருக்க மாட்டோமே."

"என்ன நிலை, பவானி அம்மா ?"

"என்னவென்று சொல்ல, வக்கீல் ஸாகேப் ? செல வாளியான அப்பா, தமது வரும்படிபோக நிறையக் கடனும் பட்டிருந்தார். வீடுவாசல் முதலியவற்றை விற்று அந்தக் கடனையெல்லாம் அடைத்தோம். இப் பொழுது என் நர்ஸ் உத்தியோகம் எங்களுக்குச் சோறு போடுகிறது."

என் மனம் அவர்கள் நிலையறிந்து உருகியது. ஆனால், அரைக் காசுக்கு விதியற்ற நான் உருகிப் பயன் என்ன ?

என்ஞல் செய்யமுடிந்தது ஒன்றுதான் : அந்தக் கேஸை நடத்திக்கொடுப்பது ; அதைச் செய்தேன்.

கேஸ் நடந்தது. என் அதிருஷ்டமோ, அல்லது பவானியிடம் இயற்கையாய் அமைந்திருந்த முகராசியோ தெரியாது ; அவள் பக்கம் தீர்ப்பாகாது என்பது வெட்ட வெளிச்சமாக இருந்த போதிலும், இரண்டொரு வாய்தாக்கள் ஆனதும், மைத்துனன் 'ராஜி' பேச வந்துவிட்டான். ஒரு நாள் என் காரியாலயத்தில், பவானியையும் அவனையும் வரவழைத்து வழக்கைச் சமரசப்படுத்தி வாடகைப் பணம் முழுவதையும் வாங்கிக் கொடுத்துவிட்டேன்.

"உங்கள் கைராசிதான், இந்தப் பணம் கிடைத்தது" என்ருள் பவானி, அந்தப் பணம் கைக்குக் கிட்டியதும்.

"இல்லே ; உங்கள் முகராசி" என்றேன் வேடிக்கையாக. ஆனல் அது உண்மையாகவே ஆகிவிட்டதே !

ஒருவாரத்துக்குப் பின்னர் ஒரு நாள் கோர்ட் கலேந்து ஆபீஸ் அறைக்குத் திரும்பியதும் அங்கே பவானி உட்கார்ந்திருப்பதைக் கண்டேன்.

"இன்னும் என்ன தகராறு ?" என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

"பழைய ஆசாமிதான் மறுபடியும் தகராறு பண்ணுகிருன்."

"இனிமேல் அவன் உங்கள் விஷயத்தில் தலேயிட என்ன இருக்கிறது, அம்மா ? பழைய பாக்கி வசூலாகிவிட்டது. மேற்கொண்டு வாடகை வசூல் செய்ய வேறு ஆளேப்போட்டு, அவனிடந்தான் வாடகையைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டுமென்று குடியிருப்பவர்

களுக்கு அறிவிப்பும் செய்துவிட்டோம். இன்னும் அவனுடன் என்ன தகராறு, பவானி அம்மா ?"

" பணத் தகராறு ஒன்றும் இல்லை, வக்கீல் ஸாகேப் ; இப்பொழுது வந்து......" அவள் பேச்சை நிறுத்திவிட்டு என் காரியாலய அறையை ஒரு முறை சுற்றி நோக்கினாள். பிறகு, மெதுவான குரலில் " வாருங்களேன், நாம் பின்புறமுள்ள பார்க்கில் உட்கார்ந்து பேசலாம் " என்றாள்.

காரியாலய அறையில் இருந்த குமாஸ்தா அறியக் கூடாத ரகசியம் எதையோ சொல்லப் போகிறாளென்று, அவளைப் பின்பற்றிக் கோர்ட்டுக் கட்டிடத்துக்குப் பின்னால் இருந்த பார்க்குக்குச் சென்றேன்.

ஆமாம் ; பவானி ரகசியத்தைத்தான் வெளியிட்டாள்; எப்படிப்பட்ட ரகசியம்......?

ஆரம்பத்தில், தகராறு செய்த மைத்துனன் வலிய வந்து வழக்கை ராஜி செய்துகொண்டது, தன்னை மணக்க வேண்டுமென்ற ஆசையால் தான் என்று அவள் கூறிய பொழுது, 'இதைச் சொல்லத்தானா இங்கே கூட்டி வந்தாள் ?' என்று நினைத்தேன். " அதற்கென்ன பவானியம்மா ; அப்படியே செய்துகொண்டு விடுங்களேன். உங்கள் ஜாதியில் பெண்களின் மறு விவாகத்தைச் சமூகம் அனுமதிக்கிறது. அவனும் பசையுள்ளவன் ; வாலிபன் அழகன் ; வேறென்ன வேண்டும் உங்களுக்கு ? பணத் தாசை அன்று உங்களிடம் இப்படி நடந்துகொள்ளச் செய்தது. மற்றப்படி அவன் ஒழுங்கானவனாகத்தானே தென்படுகிறான் ?

" பவானி அம்மா ! நான் பிரம்மச்சாரிதான் ; இருந்தாலும் உலக அனுபவம் நிறைந்தவன். விதவா விவாகத்தைச் சட்டம் அனுமதித்தும், தான் அநுமதியாத எங்கள்

சமூகத்தில், எத்தனை இழுக்குகள், எவ்வளவு அக்கிரமங்கள் நடக்கின்றன என்பதைக் கண்கூடாகக் கண்டிருப்பதால் சொல்லுகிறேன் ; உங்களைப் போன்ற இள வயதுடைய விதவைகள், சமூகம் அநுமதித்துப் போதிய வசதியும் இருக்கும்போது, மறு விவாகம் செய்து கொள்ளுவதுதான் பாதுகாப்பானது '' என்றேன்.

" நீங்கள் சொல்வது உண்மைதான் ; ஆனால்......" அவள் சிறிது தயங்கிப் பிறகு தொடர்ந்தாள். " எத்தனைதான் அனுபவசாலியானாலும், நீங்கள் பெண்ணுள்ளத்தை அறியாதவர்கள் தாமே ?"

" அதென்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள், அம்மா."

" பின் என்ன ? பெண் மனம் தெரிந்திருந்தால், அவனைக் கட்டிக்கொள்ளச் சொல்லுவீர்களா ?"

" சரி ; அவனை உங்களுக்குப் பிடிக்கவில்லை யென்றால் வேறு யாராவது பிடித்தமானவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதுதானே ?"

" தேர்ந்தெடுத்து விட்டேன் ; ஆனால் அந்த ஆசாமி வெறும் கண்மூடிச் சாமியராக இருக்கிறார்."

" அப்படியானால், அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் ? சொல்லுங்கள் ; முடிந்ததைச் செய்கிறேன்."

" உங்களால் முடியும் ; நிச்சயமாக முடியும். நீங்கள் மனசு வைத்தால்தான், நான் வரித்திருப்பவர் கிடைப்பார்."

" அந்த நிச்சயம் உங்களுக்கு இருந்தால், நான் பின் வாங்கமாட்டேன், பவானி அம்மா ; தீர்மானமாக, என்னால் இயன்றவரை முயன்று உங்கள் மூடிய வாழ்வை மலரச் செய்தே தீருவேன்."

"ரொம்ப சந்தோஷம், வக்கீல் ஸாகேப்; உங்கள் வாக்குறுதி எனக்கு நம்பிக்கை ஊட்டுகிறது. சொல்லட்டுமா, அவர் யாரென்று? சொன்ன பின்பு 'ஐயோ என்னால் முடியாது' என்று பின்வாங்க மாட்டீர்களே?"

"இதென்னம்மா சந்தேகம் உங்களுக்கு? எனக்கே, உங்கள் வயதுக்கு, இளமைக்கு, அழகுக்கு, ஓர் வாழ்க்கைத் துணைவர் அவசியமென்று தோன்றியிருக்கும்போது, அதிலும் அவரை அடைய என் உதவிதான் தேவை என்று நீங்கள் கூறும்போது, என் விரோதியாக இருந்தாலும், காலில் விழுந்து உங்களைக் கட்டிக்கொள்ளுமாறு மன்றாடுவேன், பவானி அம்மா; தயங்காது சொல்லுங்கள், அவர் யாரென்பதை."

அவள் கல கலவென நகைத்து, அடேயப்பா, பெரிய ஆசாமியாக இருக்கிறீர்களே, நீங்கள்!" என்றாள். காரியம் கைகூடிவிடும் என்ற நம்பிக்கை அவள் வதனத்தில் தோன்றியது.

"சொல்லுங்கள் பவானி அம்மா."

"சொல்லட்டுமா?"

"ம்........"

அவள் சட்டென்று தனது ஆள் காட்டி விரலை என் நெஞ்சின் மீது வைத்து, "இதோ இவர்தாம்" என்றாள்.

"என்ன!"

"எது என்ன? இத்தனை நாட்களாக நான் பார்க்கும் பார்வையும், பேசும் பேச்சுக்களும் உங்களுக்குக் கொஞ்சங்கூடப் பிடிபடவில்லையா? அல்லது பிடிபட்டும் என் வாயிலிருந்து வரட்டுமே என்று காத்திருந்தீர்களா?"

ஆயிரம் தேள்கள் ஒன்றாய்க் கொட்டிய வேதனையை அனுபவித்தேன். இதென்ன விபரீதம்? இவள் பேச்சிலும்

நடையிலும் காதல் ததும்புகிறதென்று நான் கனவில்கூட கருதவில்லையே! "பவானி அம்மா, நீங்கள் தவருன இலக்கைக் குறி வைத்துவிட்டீர்கள் ; நான் வருந்துகிறேன்" என்றேன் உள்ளம் துடிக்க.

"வக்கீல் ஸாகேப்!" மகிழ்ச்சி ததும்பிய அவள் முகம் வாடி விழுந்தது. "இதுதானு சற்று முன்பு நீங்கள் தந்த வாக்குறுதி?"

"நான் என்ன செய்வது, அம்மா? என்னுல் இயலாததைக் கேட்டுவிட்டீர்களே!"

"ஏன் இயலாது வக்கீல் ஸாகேப்? நீங்கள் தமிழர் : நான் மராத்திச்சி என்பதாலா? அல்லது, நீங்கள் முழுப் பிரம்மச்சாரி, நான் குறைபட்டவள் என்பதாலா? இல்லாவிட்டால், என் தாய் இந்தக் கலப்பு மறுமணத்துக்கு இசைவாளா என்ற சந்தேகமா? எதனுல் இயலாது என்பதைச் சொல்லுங்கள், வக்கீல் ஸாகேப்."

"நீங்கள் சொன்ன தடையொன்றும் இல்லை, பவானி அம்மா. நான் பெண் தொடர்பே வைத்துக்கொள்ளுவதில்லை என்ற விரதம் பூண்டிருக்கிறேன்."

அவளுடைய வாடிய முகத்தில் மீண்டும் நம்பிக்கை முளை விட்டது. "அப்பா! இது தானு வக்கீல் ஸாகேப் ; நான் என்ன என்னவோ நினைத்து மனம் கலங்கி விட்டேன். இதுதானென்ருல், உங்களுக்குக் கௌசிகன் கதையை நினைவுபடுத்த விரும்புகிறேன்."

"நான் முனிவன் அல்ல அம்மா ; மனிதன் ; உறுதியுடைய, அசைக்க முடியாத மனத்தைப் படைத்த மனிதன். வாழ்வின் முளையிலே தோன்றி இன்றுவரை இறுகி வந்திருக்கும் என் வைராக்கியத்தை எந்த 'டைனமைட்'டும் துளைக்க முடியாது ; எந்த மேனகையின்

கடைக்கண் வீச்சும் அதில் சலனத்தை உண்டுபண்ண முடியாது. என் வாழ்க்கைக்கு, அது முடிவுறும் வரையில் பெண் தேவையே கிடையாது.''

"நீங்கள் தாம் தவருன இலக்கைக் குறி வைத்திருக்கிறீர்கள், வக்கீல் ஸாகேப். பெண்ணில்லாமல் ஆணின் வாழ்க்கை நிறைவு பெருது. காதல் செய்ய மாத்திரமல்ல, வாழ்வின் ஒவ்வோர் படியிலும் பெண்தான் பக்கபலமாக நின்று அவர்களை முன்னேற்றிவிட வேண்டியிருக்கிறது. இது உலகம் உணர்ந்த உண்மை.''

"இருக்கலாம்; ஆனல் பெண்தேவையின்றியே, நான் இன்றுவரை முன்னேறிவிட்டேன்; இனியும் அப்படியே செல்ல முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.''

"வக்கீல் ஸாகேப், பெண் தேவையில்லாதவர்கள், நாட்டில், நகரத்தில் அவர்கள் மத்தியில் வசிக்கமாட்டார்கள். அவர்கள் மூக்கைப் பிடித்துக்கொண்டு, வனத்தில் அமர்ந்து. அங்குள்ள மிருகங்களோடு மிருகமாக வாழ்ந்து வருவார்கள். இங்கே இருப்பவர்கள் எத்தனை வைராக்கியம் பேசினலும், இறுதியில் ஸ்திரீ சக்திக்கு அடிமைப்பட்டுத்தான் ஆகவேண்டும்.''

"நான் அடிமைப்பட மாட்டேன், பவானி அம்மா; ஒருபோதும் அடிமைப்படமாட்டேன். போதும், இந்தப் பேச்சு; இதன் வாடையே எனக்கு எரிச்சலை உண்டு பண்ணுகிறது.''

"கடைகியில், உங்கள் முடிவுதான் என்ன வக்கீல் ஸாகேப் ?''

"அதைத்தான் சொல்லி விட்டேனே, அம்மா; என்னைச் சகோதரனுக என்ணி இங்கே வருவதானல் வாருங்கள்; சகோதரனுக நின்று, நீங்கள் விரும்பும் வேறு

எவரையும் மணமுடித்து வைக்கிறேன். இல்லை, என் மீது கொண்ட ஆசையை மாற்ற முடியாதென்றால், அப்படியே இருங்கள்; ஆனால் இங்கே மாத்திரம் ஒரு போதும் வர வேண்டாம். இன்றைக்கல்ல; என்றைக் கானாலும், என்னை வசப்படுத்திவிட முயலும் உங்கள் முயற்சி, தெரிந்தும் கல்லில் மோதிக்கொள்ளுவது போலவே ஆகும்."

"என்ன ? நான் மோதிக்கொண்டது கல்தானா ?"

"ஆமாம்; கல்தான்; கருங்கல்; பெயர்க்க முடியாத கடும் பாறை !''

"இதுதானா, மனம் விட்டு ஓர் அதமனிடமிருந்து என் மானத்தைக் காப்பாற்ற இறைஞ்சிய ஓர் அபலைப் பெண்ணுக்கு நீங்கள் அளிக்கும் பதில் ?"

"வேறு பதிலுக்கு வழியில்லையே !"

"அப்படியானால நான் போக வேண்டியது தானா ?"

"இவ்விஷயத்துக்காக இனி வீணில் காத்திருக்க வேண்டியதில்லை."

பவானி விருவிரென்று எழுந்து நடந்தாள். பெருஞ் சோதனை ஒன்றிலிருந்து மீண்டது போன்று, ஆசுவாசப் பெருமூச்சு விட்டேன்.

* * *

ஆனால் அந்தச் சோதனை ஓயவில்லை. இரண்டு மாதங்களுக்குப் பிறகு அது மீண்டும் ஆரம்பித்துவிட்டது.

மனிதப் பிறவியென்றால் பிணி, மூப்பு, சாக்காடு இவற்றுக்கு உட்பட்டுத்தானே ஆகவேண்டும்? வீட்டை விட்டு வெளியேறிய பிறகு இந்தப் பதினைந்து வருஷங்க ளாக ஒரு பற்று அரைத்துப் போட்டறியாத எனக்கு

எப்படியோ டைபாயிடு ஜுரம் வந்து, ஆஸ்பத்திரியை நாடிப் போகச் செய்துவிட்டது.

ஆஸ்பத்திரியில் பிரத்தியேக வார்டில் அனுமதிக்கப் பட்டதும், என்னைக் கவனிக்க வந்து நின்ற நர்ஸ்—

பவானியும் திடுக்கிட்டாள் ; நானும் திடுக்கிட்டேன்.

' இது என்ன ? விதி எங்களை இப்படி ஒன்று கூட்டு கிறதா ? பாவம் ! அவள்தான் எப்படி இளைத்து உருக் குலைந்து போய்விட்டாள் !'

இந்த நினைவு எப்பொழுது எழுந்ததோ அப்பொழுதே என் உள்ளத்தில் சலனம் ஏற்பட்டுவிட்டது. ஆனால், அதை நான் அப்பொழுது உணரவில்லை.

சரியாக இருபத்தேழு நாட்கள் ! அப்பப்பா ! அவள் எத்தனை கருத்துடன் என்னைக் கவனித்து வந்தாள் ! சாதாரண நர்ஸைப் போலவா என்னைப் பராமரித்தாள் ? இல்லை ; கடமையும் காதலும் கலந்த மனைவியைப் போலவே அவள் எனக்குச் சேவை செய்தாள். ஆனால், இவ்வளவுக்கும் எங்களிடையே நிகழ்ந்த நிகழ நேர்ந்த சம்பாஷணைகள், முகமறியாத ஓர் நோயாளிக்கும் நர்ஸுக்கும் நடப்பவற்றை ஒத்தே இருந்தன.

என் ஜுரம் இறங்கி வந்தது. ஆனால், அது டாக்டர் கொடுத்த மருந்தினாலென்று எனக்குத் தோன்றவே இல்லை. பவானியின் பராமரிப்பே என்னைக் குணப் படுத்தியதாக ஓர் உள்தோற்றம் என்னில் நிலைபெற்று விட்டது. உள்ளம் நெகிழ்வதை இப்பொழுது நான் உணர்ந்தேன். சோகத்தால் தொங்கும் அவள் முக விலாசம் என் பார்வையில் படும்போதெல்லாம் அது இன்னும் உருகி ஓடிற்று. அவள் உருவை மனத்திலிருந்து மறைக்க, மறக்க முயன்றேன் ; முடியவில்லை.

இந்த நிலையை இன்னும் மோசமாக்க, ஆஸ்பத்திரியில் சேர்ந்த இருபத்தெட்டாவது நாள் ஒரு சம்பவம் நடந்தது. அன்று பவானிக்குப் பதிலாக வேறொரு நர்ஸ் என்னைக் கவனிக்க வந்தாள். "பவானி எங்கே அம்மா?" என்று வினவியபோது, முன்னுளிரவு ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது, அவளை யாரோ வழிமறித்து அடித்து விட்டதாகக் கூறினாள்.

என் மனம் பட்ட பாட்டை என்னவென்று சொல்லுவேன், ஐயா? இரண்டு நாட்களுக்குப் பிறகு உடம்பெல்லாம் கட்டுடன் அவள் வார்டுக்குள் நுழைந்த போது என் விரதம் அனைத்தும் பறந்து போய்விட்டது; "என்ன நேர்ந்தது பவானி அம்மா?"

அவள் என் கேள்விக்குப் பதிலளியாது, தன் வேலையே கவனமாக, உஷ்ணமானியை எடுத்து என் வாயருகில் கொண்டு வந்தாள். அதைக் கையால் தடுத்து விட்டு. "நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள்" என்றேன்.

பவானி ஒரு கணம் என்னைக் கூர்ந்து நோக்கினாள். பிறகு துக்கம் தொண்டையை அடைக்க, "ஒரு தடவை நிராகரித்து, வீதியில் எறிந்த குப்பையான தான் காற்றிலடித்துக்கொண்டு போகப்படுவதைப்பற்றி இப்பொழுது நீங்கள் ஏன் கவலைப்படவேண்டும்?" என்றாள்.

"எனக்குக் கவலை ஏற்பட்டிருக்கிறது; அதனால் தான் அதை அறிய விரும்புகிறேன்; சொல்லுங்கள், யாருடைய வேலை இதென்று."

"எந்த அதமனிடமிருந்து என்னைக் காப்பாற்றும்படி கெஞ்சினேனே, அவனேதான்."

"யார்? உங்கள் மைத்துனனா? என்ன நடந்தது பவானியம்மா? விவரமாகச் சொல்லுங்கள்."

" விவரம் என்ன ? அவனுக்கு என் உடல் வேண்டும் அதை உயிருள்ளளவும் நான் அளிக்கப்போவதில்லை. எனவே, அந்த உயிருள்ளளவும் இத்தகைய தண்டனை களால்தானே என்னை நான் காத்துக்கொள்ளவேண்டும் ? ஆயினும் எத்தனை நாள்தான் காமவெறி கொண்ட ஓர் ஆண்பிள்ளையை அபலைப் பெண் ஒருத்தி எதிர்த்து நிற்க முடியும் ? என்றாவது ஒரு நாள் அவன் வெறி தீரும் ; என் வாழ்வும் முடியும்."

பவானி முகத்தை மூடிக்கொண்டு கேவி அழுதாள். சொட்டுச் சொட்டாக வழிந்த அவள் கண்ணீர் என்னை மூடியிருந்த போர்வையின்மீது விழுந்து, அதை நனைத்து, என் உடலை—ஏன், என் உள்ளத்தையே நனைத்தது. ஏற்கனவே இளகியிருந்த என் வைராக்கியம், அந்தக் கண்ணீரின் வெப்பம் பட்டதும் பாகாய் ஓட ஆரம்பித்து விட்டது. ஆம் ; நான் சலனம் அடைந்துவிட்டேன்.

முகத்தை மூடிக்கொண்டிருந்த அவள் கைகளை அகற்றி, ' அழாதே பவானி ; இனி ஒரு பயல் உன் அருகில் நெருங்க முடியாது " என்றேன்.

அவள் ஏளனமாக நகைத்து, அடேயப்பா ! நம்ப ' வக்கீல் ஐயா ' பெயரைக் கேட்டால், ' கில்லாடி'களெல் லாம் நடுங்கிப் போவார்களே !" என்றாள்.

" நடுங்க வேண்டாம், பவானி ; ஆனால் பிறன் மனைவி மீது கைவைக்க ஒருவனுக்கு அசாதாரணத் துணிவு வேண்டும், தெரியுமா ?"

" கணவன் உள்ள பெண்களல்லவா மனைவியர் ஆவார்கள் ? என் பதி இறந்து எட்டு வருஷங்களாகி விட்டனவே !"

" இல்லை ; அவரைச் சொல்லவில்லை ; அவரிடத்தை நிரப்பத் தயாராகிவிட்ட என்னைத்தான் சொல்கிறேன்."

"வக்கீல் ஸாகேப்!" அவள் குரலில் ஆர்வம் பீறிட்டது.

"ஆம் பவானி ; இன்று தொட்டு நீ என் மனைவி."

"தெய்வமே, கண் திறந்தாயா !" என்று அந்தப் பேதை ஆஸ்பத்திரியென்றும் பாராது என் மார்பின் மீது முகத்தைப் புதைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

ஆஸ்பத்திரியிலிருந்து வந்து ஒரு மாதமான பிறகு ஒரு நல்ல நாளில் ரிஜிஸ்திரார் முன்னிலையில் விவாகப் பதிவு செய்து கொள்ளத் தீர்மானித்தோம். பவானிக்கு மறு மணமானாலும், எனக்குப் புதுமணம் அல்லவா ? ஆகவே சற்று ஆடம்பரமாகவே அந்த நிகழ்ச்சியைக் கொண்டாட முடிவு செய்தோம்.

கல்யாணத்துக்கு வேண்டிய புத்தாடைகளை எல்லாம், எனக்குள்ளவைகளையும் சேர்த்து, பவானியே தேர்ந்தெடுத்து வாங்கிவந்தாள். மாலையில் அவற்றைப் பார்வையிட அவள் வீடு சென்றேன். ஒவ்வொன்ருகப் பார்த்துவந்த போது, சிறிய அரை நிஜாரும், புஷ்கோட்டும் சேர்ந்த ஸெட் ஒன்று என் கண்களை உறுத்திற்று. இவை யாருக்கு பவானி ?" என்று பரபரப்புடன் கேட் கேட்டேன்.

"நம் மோஹனுக்கு" என்ருள் அவள்.

"மோஹனு ?"

"ஆமாம் : அவனை நீங்கள் பார்த்ததில்லை, பெல்காமில் என் ஒன்று விட்ட மாமா 'சிறுவர் இல்லம்' ஒன்று நடத்துகிருர் ; அங்கே தான் நாலு வருஷமாகப் படிக்கிருன். இன்று மாலை மாமாவுடன் வருவான்."

"உனக்கு தம்பி ஒருவன் உண்டு என்று என்னிடம் சொல்லவே இல்லையே !"

"தம்பியா?" அவள் சிரித்தாள்; 'மோஹன் என் தம்பி அல்ல; உங்கள் மகன்."

"அட கடவுளே!" என்று சோர்ந்து தலைமீது கை வைத்துக்கொண்டேன்.

"ஏன்? என்ன?" என்று பதறினாள் பவானி.

"ஒன்றும் இல்லை; இந்தத் துணிமணிகளையெல்லாம் மூட்டை கட்டி வையுங்கள்; நம் கல்யாணம் ரத்தாகி விட்டது."

"ஐயோ இதென்ன?" என்று அவள் அலறிய அலறல் அவ்வீட்டையே கிடுகிடுக்க வைத்தது. "என் மோஹனுக்காகவா கல்யாணத்தை நிறுத்த வேண்டு மென்கிறீர்கள்? அவன் ஒரு போதும் நம் வாழ்வுக்குத் தடையாக மாட்டான். கல்யாணம் முடிந்ததும் மாமா வுடன் பெல்காமுக்கே சென்றுவிடுவேன்."

"அவன் எங்கேனும் நன்ருக இருக்கட்டும். பவானி அம்மாஆனல் அந்தப் பச்சைக் குழந்தையின் உள்ளத்தில் சலனமூட்டி அலையவிடும் பாவத்துக்கு நான் ஆளாக மாட்டேன்."

"நீங்கள் புதிராகப் பேசுகிறீர்களே!"

"புதிரல்ல அவன் அம்மாவை அவனிடமிருந்து பிரிக்க உடம்படேன்."

"ஐயோ இதென்ன விசித்திரம்! நான் உங்களை மணந்து கொண்டதால் அவன் அம்மா இல்லை என்ருகி விடுவேனு? அல்லது பெற்ற பிள்ளையின் மீதுள்ள பாசந் தான் குறைந்துவிடுமா?"

"இல்லை பவானி அம்மா? உங்கள் தாயன்புவேண்டு மாஞல் முன்போலவே இருக்கலாம்; ஆனல் அவன்

உங்களைத் தன் அம்மாவாகக் காண முடியாது; என் மனைவியாகத்தான் காண்பான்.''

இது விதண்டாவாதம்; நீங்கள் வேறு எதையோ மனத்தில் கொண்டு......

என்னால் பொறுக்க முடியவில்லை. நான் எதை அவளிடம் மறைத்து வந்தேனோ, எது என்னைப் பெண் சமூகத்திடமே அத்தனை விரக்தியடையச் செய்ததோ. அதை அவளிடம் வெளியிடத்தான் வேண்டியதாயிற்று, சொன்னேன்: "விதண்டாவாதமல்ல, பவானி அம்மா; அது என் அனுபவம்.''

"அனுபவமா? எப்படி?''

பவானி இந்தக் கேள்வியைக் கேட்டாளோ என்னவோ நான் கேட்டுவிட்டேன்.

வக்கீல் சொன்னார்: "அதை மாத்திரம் கேளா தீர்கள், ஸார்; அது என் சொந்த விஷயம்.''

மீண்டும் என் மனம் என் 'சலன'க் கதைக்குத் தாவிற்று. ஒருவேளை அத்தப் பையன் மோஹனைப்போல அல்லது என் கதையில் வந்த சிறுவனைப்போல இவரும்...

ஒரு கணம் இந்தச் சிந்தனையில் மூழ்கி எழுந்து தெளிவடைந்தபொழுது வண்டி மரைன் லைன்ஸை அடைந்துவிட்டது. வக்கீல் எழுந்து, "வருகிறேன் ஸார், "நமஸ்காரம்'' என்று புறப்பட்டார்.

"ஸார், உங்கள் பெயர்?''

"எஸ். காசிலிங்கம் பிள்ளை.''

"யார்?'' என்று என் உள்ளத்தில் எழுந்தது கேள்வி.

ஆமாம்; வக்கீலின் ' சொந்த விஷயம் ' அவர் பெயரைச் சொன்னதுமே எனக்குத் தெரிந்துவிட்டது. அவர் வேறு யாரும் அல்ல; பதினைந்து வருஷங்களுக்கு முன்பு என் கதை காரணமாகச் சலனமடைந்து ஓடி மடிந்த மாணிக்கத்தின் மகன்தான்!

[பிற்குறிப்பு:- வக்கீலின் கல்யாணம் நின்றுவிட்டது. அந்தக் கல்யாணத்தை முன்னிட்டு வந்த மோஹன், விஷயத்தை அறிந்து, தன்னுல் தாயின் மறுமலர்ச்சி தடைப்பட்டதென்றறிந்து இனியேனும் அதற்குத் தடையாக இருக்கலாகாதென வீட்டை விட்டு வெளியேறி விட்டான் என்பதை ஊகித்துக்கொள்ள உங்களுக்குத் தெரியாதா, என்ன?]

# சலனம் 3

## 1

டாக்டர் ஸீ. ஜே. படேல் முப்பது வயசுக்குட்பட்ட இளைஞர். அவருடைய தோற்றம் எத்தனை கவர்ச்சியாக இருந்ததோ, அதைவிடக் கவர்ச்சியாக இருந்தது. நோயாளிகளிடம் பழகிய விதரணை. சாதாரணமாக, டாக்டர் பட்டத்துடன் சிடு மூஞ்சித்தனத்தையும் சேர்ந்து வாங்கி வந்து விடும் இனத்தவரல்ல இவர். நோயாளிகளிடம் இனிமையாகவும் அன்புடனும் பேசி நோய் மூலங்களை நன்ருகக் கிரகித்துச் சிகிச்சை செய்தார்.

என்னிடம் அவர் அவ்வாறே இனிக்கப் பேசி நோயின் தன்மைகளை விசாரித்தார். இந்த விசாரிப்பின் போதுதான், நான் ஒரு எழுத்தாளன் என்பதை அவரிடம் கூற நேர்ந்தது.

" எழுத்தாளரா ? அதுதானே பார்த்தேன் ? இரண்டு மாதங்களாகக் கண்களில் கோளாறு இருந்தும் கவனியாது இருந்திருக்கிறீரே மனிதர் என்று ?"

அவருக்குச் சரியாக நானும் பேச விரும்பினேன். " அதென்ன டாக்டர், அப்படிச் சொல்லிவிட்டீர்கள் ?" என்று கேட்டேன்.

" ஆமாம் ஸார் ; இந்த எழுத்தாளர்களுக்குக் கண்கள் மாத்திரம் என்ன ? கண் நிறைந்த பெண்களிடம் கூட லட்சியம் இல்லை " என்று கூறிச் சிரித்தார் அவர்.

அவர் சொற்களில் ஓரளவு உண்மை இருந்ததை என் மனது ஒப்புக்கொண்டது. இருந்தாலும், " பெண்கள் விஷயத்தில் வேண்டுமானால், நாங்கள் ஒருகால் பராமுகமாக இருக்கலாம் ; ஆனால், கண்களைக் கவனிக்காதிருந்தால் எங்கள் பிழைப்பே கெட்டுவிடுமே டாக்டர் !" என்றேன்.

" அதை உணர்ந்திருந்தால், நீங்கள் எப்பொழுதோ என்னைத்தேடி வந்திருப்பீர்களே. சரி ; இப்பொழுது நமது காரியத்தைக் கவனிப்போம். உங்கள் கண்களின் உபத்திரவம் அறவே ஒழியவேண்டுமானால், அதற்கு என் மருந்து மாத்திரம் போதாது. முதலில், நீங்கள் இன்னும் இரண்டு வாரங்களுக்காவது படிப்பதோ எழுதுவதோ இல்லையென்று வாக்களிக்கவேண்டும்."

" இரண்டு வாரங்களுக்காக !" என்று மலைப்புடன் கேட்டேன்.

" ஆமாம், மிஸ்டர், ஆமாம் ; அது மாத்திரம் அல்ல. காரியாலயம் எதிலாவது வேலை பார்த்து வந்தால் அதையும் இந்த இரண்டு வாரம் நிறுத்தி வைக்கத்தான் வேண்டும்."

"ஏன் டாக்டர், கண்களில் ஆபரேஷன் ஏதாவது செய்யவேண்டுமோ?"

"ஆபரேஷன் ஒன்றுமில்லை; வெறும் மருந்துச் சிகிச்சைதான். ஆனால், நான் ஒரு பக்கம் நோயைப் போக்கப் பாடுபட, நீங்கள் இன்னொரு புறம் அதைப் பெருக்கிக்கொண்டிருக்கக் கூடாதல்லவா?"

பதினான்கு நாட்கள் காரியாலயத்துக்கு லீவு போட்டு விட்டு வீட்டில் இருந்தேன். ஆனால் ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒவ்வொரு யுகமாகத் தள்ளிக்கொண்டு மிகவும் சங்கடப்பட வேண்டியதாயிற்று.

## 2

இந்தத் தர்மசங்கட நிலையை இரண்டு மூன்று நாட்களுக்குமேல் என்னால் தாங்க முடியவில்லை. ஒரு நிமிஷம் கிடைக்காதா என்று அலைந்த என்னை நாள் முழுவதும் உட்கார்ந்திரு என்றால் எப்படி முடியும்? பொழுதை எப்படிக் கண்களுக்குக் கேடின்றிப் பயன்படுமாறு போக்குவது என்று சிந்தித்தபொழுது ஒரு வழி தென்பட்டது. டாக்டர் படேல் உற்சாகமான இளைஞராக இருக்கிறார். அவருடைய டிஸ்பென்ஸரில் போய் உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருப்பதோடு அங்கு வந்துபோகும் நோயாளிகளிடையே கதாபாத்திரம் யாராவது தென்படுகிறார்களா பார்க்கலாமே!

நான் உடனே சட்டையை மாட்டிக்கொண்டு கிளம்பிவிட்டேன்.

"என்ன ஸார், கண் வேதனை அதிகப்பட்டு விட்டதோ?" என்று கேட்டார் டாக்டர்.

“ கண் வேதனையல்ல டாக்டர் ; மன வேதனைதான்,”

“ ஏன் என்ன விஷயம் ?”

விஷயத்தைச் சொன்னதும், அவர் கலகலவென நகைத்து, “ இந்த எழுத்தாளர்களே அதிசயப் பிறவிகள் தாம் ” என்றார்.

“ நீங்கள் என்ன, எழுத்தாளர்களிடம் ரொம்ப ரொம்ப அனுபவப் பட்டவர்கள் போலப் பேசுகிறீர்களே, டாக்டர் என்று பேச்சை வளர்த்தேன்.

“ ஆமாம் ஸார் ; அனுபவப்பட் டிருக்கிறேன். நிறைய அனுபவப் பட்டிருக்கிறேன். நான் எழுத்தாளன் அல்லவே தவிர, எனக்கு நிறைய எழுத்தாள நண்பர்கள் இருக்கிறார்கள்.”

அவர் ‘எழுத்தாள நண்பர்கள்’ என்றதும் என் மனம் பளிச்சென்று சொந்த விஷயம் ஒன்றுக்கு தாவிற்று. குஜராத்தியிலும் ஆங்கிலத்திலும் எழுத்துவன்மை பெற்ற ஒருவரின் உதவி எனக்குத் தேவையாக இருந்தது. ஆகவே படேலிடம், “ டாக்டர் ஸார், எனக்கு ஓர் உதவி செய்யவேண்டும். என்னிடம் குஜராத்திக் கதை ஒன்று வந்திருக்கிறது. அதை உங்கள் நண்பர்கள் யாரிடமாவது கொடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தரச் செய்ய முடியுமா ?” என்று கேட்டேன்.

“ குஜராத்தி தெரியாத உங்களிடம் யார், எதற்காக அந்தப் பாஷைக் கதையைக் கொண்டு தந்தார்கள் ?”

“ எவரும் தரவில்லை டாக்டர் ; அது எனக்குக் கிடைத்தது.”

“ கிடைத்ததா ?”

“ ஆமாம் ; நான் வெற்றிலை புகையிலை உபயோகிப்பவன். ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள்,

காரியாலயத்தில் இடைவேளை உணவுக்குப் பிறகு வெற்றிலை போட்டுக் கொண்டபோது, புகையிலைச் சாற்றைத் தவறி விழுங்கிவிட்டேன். தலை ஒரே அடியாகச் சுற்றி மயக்கமாக வந்தது. எங்கேயாவது சிறிது நேரம் படுத்து எழுந்தால்தான் மேலே வேலை செய்ய முடியும் என்று தோன்றிற்று. சௌபாத்திக் கடற்கரை முன்பாக ஓர் பார்க் இருக்கிறதே; அங்கே போய் சிமிண்டு பெஞ்சி ஒன்றில் நீட்டி நிமிர்ந்து படுத்துவிட்டேன். பார்க்கில் அந்த உச்சி வேளையில் ஆள் பழக்கம் ஏது? யாரோ ஒரு வாலிபர் மாத்திரம் எனக்கு அடுத்த பெஞ்சியில் உட்கார்ந்து தம் போக்கில் சில காகிதங்களைப் பிடித்துக் கவனமாய்ப் படித்துக் கொண்டிருந்தார்.

"கடற்காற்று இதமாக இருந்தது. படுத்தவன் நன்றாகத் தூங்கிவிட்டேன். விழித்தபோது மணி மூன்றாகி யிருந்தது. 'அடடே! காரியாலயத்துக்கு "லேட்'டாகி விட்டதே' என்று கிளம்பியபோது, என் பார்வை யதேச்சையாக அடுத்த பெஞ்சியின்மீது விழுந்தது. அந்த வாலிபரைக் காணவில்லை. ஆனால், அவர் படித்துக்கொண்டிருந்த காகித கற்றை பெஞ்சியின் மீது கவனிப்பாரற்றுக் கிடந்தது. நான் அதைக் கையில் எடுத்துப் பார்த்தேன். முதல் பார்வையிலே அது குஜராத்தியில் எழுதப்பட்ட கதை அல்லது கட்டுரையாக இருக்க வேண்டுமென்பது தெரிந்துவிட்டது. எழுத்தாளர்களுக்கே ஞாபக மறதி அதிகம். ஒரு கால் அந்த மனிதர் மறதியாக வைத்துவிட்டுப் போயிருக்கலாம். அதை நான் எடுத்துவந்து, மறுநாள் பத்திரிகையில் அது கிடைத்த விவரத்தை அறிவித்து, உரியவர்கள் வந்து வாங்கிப் போகலாமென்று சிறிய விளம்பரம் ஒன்று செய்தேன். ஒரு மாதமாகியும் எவரும் அதற்காக வரவில்லை.

" எங்கள் காரியாலயத்தில் குஜராத்திக்காரர் ஒருவர் வேலை செய்து வந்தார். அவரிடம் ஒரு நாள் அதைக் காட்டி, படித்து ஆங்கிலத்தில் அர்த்தம் சொல்லும்படி கேட்டுக்கொண்டேன். அவர் கையெழுத்துப் பிரதியை வாங்கி ஒரு தடவை முழுவதும் மேலோட்டம் பார்த்தார். பிறகு உதட்டைப் பிதுக்கிக் கொண்டே, " இதென்ன ஸார், கதை போலல்லவா இருக்கிறது? அதிலும் அடேயப்பா! பதினெட்டுப் பக்கங்கள்! எனக்கு இதைஉங்களுக்குப் புரியும்படி மொழிபெயர்த்துச் சொல்லத் தெரியாது, வேண்டுமானுல், எங்கள் வாடியில் குஜராத்தி எழுத்தாளர் ஒருவர் இருக்கிருர்; அவரை ஓர் லீவு நாளில் உங்கள் வீட்டுக்கே அழைத்துவந்து மொழி பெயர்த்துச் சொல்லச் செய்கிறேன்' என்ருர்.

" அவ்வாறே வன் நண்பர் ஒரு ஞாயிறன்று அந்த எழுத்தாளரை என் வீட்டுக்கு அழைத்து வந்து, ' ஆங்கிலத்திலும் குஜராத்தியிலும் கதைகள் எழுதும் ' கல்பா ' இவர்தாம் " என்று எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்."

" யார் அது? கல்பாவா?" என்று டாக்டர் படேல் என்னை இடைமறித்துக் கேட்டார்.

" ஆமாம்; அவரை உங்களுக்குத் தெரியுமோ?"

' தெரியுமாவா? அவன் என் அத்தியந்த நண்பர் ஸார் "

" அப்படியா? சரி; உங்கள் நண்பர் செய்த கேலிக் கூத்தைக் கேளுங்கள்."

அவரிடம் கதையைக் கொடுத்து. கிடைத்த விவரத்தையும் சொன்னேன். கதையைப் பிரித்துப் பார்த்ததும் கல்பாவின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. ' சரி; நம் கையில் கிட்டிய பொருள் சோடையல்ல ' என்று

எண்ணியவாறே, "யார் எழுதிய கதை ஸார்; இது? என்று கேட்டேன்.

"எழுதினவரின் பெயர், விலாசம் எதையும் காண வில்லையே' இருந்தாலும் கதையின் ஆரம்பத்தைப் பார்க் கையில் பண்பட்ட எழுத்தாளர் ஒருவரே எழுதியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது" என்றார்.

'கதைப் பெயராவது எழுதியிருக்கிறதோ?'

'பெயர் இருக்கிறது. சலனம் என்று பொருள் படும் தலைப்பு அது.'

'என்ன சலனமா!'

'ஆமாம்; ஏன் ஆச்சரியப் படுகிறீர்கள்?'

"அந்தத் தலைப்புடன் நானும் ஏற்கனவே ஒரு கதை எழுதியிருந்தேன். அது மாத்திரமல்ல; அதே தலைப்புடன் தொடராகச் சில கதைகள் எழுத வேண்டுமென்றுதிட்ட மிட்டு, அச்சமயம் இரண்டாவது கதையையும் உருவாக்கு வதில் முனைந்திருந்தேன். எனவே கிடைத்த கதையிடம் எனக்கு முன்னைவிட அதிகமான கருத்து ஏற்பட்டது. அவசரத்தோடு, 'சரி; கதையை மொழி பெயர்க்கலாமே' என்றேன் கல்பாவிடம்.

"ஆனால் அவர் அதை உடனே செய்து தர இசைய வில்லை. 'நல்ல கதை ஸார் இது; அதிலும் நீங்கள் எழுத் தாளர். நல்ல முறையில் மொழி பெயர்த்துத் தர வேண் டாமா? இதை நான் வீட்டுக்கு எடுத்துச் சென்று, ஆழ்ந்து படித்து மொழி பெயர்ப்பை எழுதி நம் நண்பர் மூலம் அனுப்பி விடுகிறேன்' என்றார் 'சரி' என்றேன்.

"டாக்டர், உங்கள் நண்பர் கதையை எடுத்துக் கொண்டு போனார் போனார்; போயே விட்டார்' தினமும் நான் காரியாலய நண்பரை நச்சரிப்பதும், அவர்,

'நான் என்ன ஸார் செய்யட்டும் ; அந்த மனிதர் மொழி பெயர்த்துத் தந்தால் தானே வாங்கிவர முடியும் ! என்பது மாக மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. அப்புறம் நானே கவ்பாவின் வீட்டுக்குப் பல தடவை நடந்து, ஒரு நாள் கதையாவது திரும்பக் கிடைத்தால் போதுமென்று வாங்கி வந்தேன்."

"அந்தப் பயல் கல்பா சுத்தச் சோம்பேறி ஸார் ; சரி ; இப்பொழுது கதையை எடுத்து வாருங்கள் ; அவனிடமே கொடுத்துக் கூட இருந்து மொழிபெயர்த்து வாங்கித் தருகிறேன் " என்ருர் டாக்டர்.

"ஐயையோ ! மறுபடியும் அவரிடமா ? வேண்டவே வேண்டாம். வேறு யாராவது எழுத்தாள நண்பர்களிடம் கொடுத்து உடனே செய்துதரச் செய்ய முடியுமானுல் மட்டும்......"

"ஏன் ஸார், நானே அதை மொழி பெயர்த்துத் தந்தால் போதுமா ?"

"ரொம்ப வந்தனம் டாக்டர், சிறிய குறிப்பு ஒன்று எழுதி வந்தால்கூட எனக்குப் போதும். கதையைக் கொண்டு வரட்டுமா ?"

"எடுத்து வாருங்கள். ஆனுல் ஒரு விஷயம், நானும் அதை வீட்டுக்கு எடுத்துச் சென்று படித்துத்தான் மொழி பெயர்க்க இயலும்."

"பரவாயில்லை டாக்டர் உங்களிடம் கதையைக் கொடுக்க எனக்குத் தயக்கமே இல்லை. ஏனென்ருல் நீங்கள் எழுத்தாளர் அல்லவே !" என்று கூறிச் சிரித்தேன்.

டாக்டரும் நகைப்பில் கலந்துகொண்டார்.

இவ்வாறு, சிலகாலமாக என் பெட்டியில் உறங்கி வந்த அந்தக் கதை டாக்டர் படேலின் கைக்கு மாறிற்று.

# 3

இரண்டு மூன்று நாட்களுக்குப் படேலிடம் கதையைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை. என்னைப் போலவே வேலைத் தொந்தரவு அதிக முள்ளவர் அவர். புதிதாக மணம் செய்து கொண்டவர் என்று வேறு கேள்விப்பட்டிருந்தேன். ஆற அமரப் பார்த்துச் சொல்லட்டுமே என்று இருந்தேன். ஒரு வாரம் சென்ற பிறகும் அவர் கதையைப் பற்றிப் பேச்சு மூச்சையே காட்டவில்லை. அப்போது, மெல்ல அவரிடம் ' என்ன டாக்டர், அந்தக் கதையைப் பார்த்தீர்களா ?" என்று கேட்காதிருக்க முடியவில்லை.

" எந்தக் கதை ?"

நான் திகைத்தேன். ' சென்ற வாரம் படித்துச் சொல்லும்படி கொடுத்த கதையை மறந்துவிட்டீர்களா ?'

" அடடா ! மன்னிக்க வேண்டும் ஸார் ; வாஸ்தவமாகவே அதை மறந்து விட்டேன். இன்று கட்டாயம் பார்த்துவிடுகிறேன்."

மறு நாளை ஆவலுடன் எதிர் நோக்கிப் படேலிடம் சென்றேன். " அந்தக் கதை......என்று ஆரம்பித்ததுமே அவர் இடைமறித்து, ' அதை எங்கேயோ கைத் தவறுதலாக வைத்து விட்டேன். நேற்றுத் தேடு தேடென்று தேடினேன். அகப்படவில்லை. இன்றைக்கு எப்படியும் கண்டுபிடித்து விடுகிறேன் " என்றார்.

என் முகம் விழுந்து போயிற்று. ஆயினும் அதைக் காட்டிக்கொள்ளாமல் மறு நாளும் அவர் முன் சென்று நின்றேன். கதையைத் தேடி எடுத்து விட்டேன் ஸார். பழைய பத்திரிகைக் கும்பலுக்கிடையில் புகுந்து

கிடந்தது. நேற்று அதைத் தேடி எடுத்த போது வெகு நேரமாகி விட்டது. இன்று கட்டாயம்......"

அந்த 'இன்று கட்டாயம்' கடைசியில் என் சிகிச்சை முடியும் நாள் வரையில் தொடர்ந்தது. 'இதென்ன? நம் அதிருஷ்டமா? அல்லது கதையின் அதிருஷ்டந்தானா? இவரும் இப்படி அலேக்கழிக்கிருரே' என்ற விசனம் ஏற்படவே அன்று அவருடைய பில் கணக்குத் தீர்த்துக் கொடுத்தபோது, "டாக்டர், என் கண்களைச் சீர் செய்துவிட்டீர்கள். ஆனால் அந்தக் கதையைச் சீர் செய்ய உங்களால் முடியவில்லை. போனால் போகிறது. நாளைக்குத் தயை செய்து ஞாபகமாகக் கதையையாவது திரும்ப எடுத்து வாருங்கள்" என்றேன்.

மறு நாள் வந்தது. அன்று லீவு முடிந்து காரியாலத்துக்குச் செல்ல வேண்டிய நாள் காரியாலயத்துக்குப் போகும் வழியில் டாக்டரின் டிஸ்பென்ஸரிக்குப் போனேன். கதவு பூட்டியிருந்தது. அடைந்த கதவில் ஓர் அட்டை தொங்கிற்று; 'இன்று முதல் ஆஸ்பத்திரி காலை பதினேரு மணி முதல் மாலை நான்கு மணி வரையில் தான் திறந்திருக்கும்!' என்று எழுதியிருந்தது.

எனக்கு என்னவோ, இப்பொழுது அந்தக் கதையின் மீது பலத்த சந்தேகம் விழுந்துவிட்டது. நான் அறியக்கூடாத விஷயங்கள் எவையேனும் அதில் அடங்கியிருக்க வேண்டும்! அதை எப்பாடு பட்டாகிலும் டாக்டரிடமிருந்து வாங்கி, வேறு யாரிடமாவது கொடுத்து விஷயத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் முன்னிலும் பன்மடங்கு அதிகமாகிவிட்டது. எனவே, மறுநாள் மீண்டும் காரியாலயத்துக்கு லீவு போட்டுவிட்டு டாக்டரை எதிர் நோக்கி அவருடைய ஆஸ்பத்திரி வாசலில் காத்துக் கிடந்தேன்.

ஆனால், விபரீதமாக மணி பதினொன்று பன்னிரண்டு அடித்தும் டாக்டர் வரவேயில்லை. ஆஸ்பத்திரிக்கு வந்த நோயாளிகள் என்னைப்போலவே பொறுமை இழந்து காத்திருக்கையில் எனக்கு ஒரு ஆலோசனை தோன்றிற்று. நேரே பக்கத்தில் டெலிபோன் வைத்திருந்த ஒருவரின் வீட்டுக்குச் சென்று, 'டைரக்டரி'யைப் புரட்டிப் பார்த்தேன். படேலின் வீட்டு விலாசம் கிடைத்தது. அருகில் இரண்டு மைல்களுக்கு அப்பாலிருந்த 'விலி பார்லா' என்ற இடத்தில்தான் அவர் வசித்து வந்தார். எப்படியும் அவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கதையை வாங்கிவிடுவதென்று உடனே பஸ் பிடித்து விலிபார்லாவுக்கு வந்தேன்.

## 4

டாக்டர் தனி மாளிகை ஒன்றில் வசித்து வந்தார். இயற்கையிலே செல்வர் என்பதை உணர்த்தும் வண்ணம் இருந்தது அந்தப் பிரும்மாண்டமான மாளிகை. நேரே உள்ளே நுழைந்து 'போர்ட்டிகோ'வில் வந்து நின்றேன். நின்றதுதான் தாமதம்; மறுபடியும் ஓர் அதிர்ச்சி: பங்களாவுக்குள்ளே பெண்களின் ஒப்பாரி வைத்த அழுகுரல் கேட்டது!

'யார் இறந்து போனார்களோ, பாவம்! கிழங்கட்டைகளாக இருக்கவேண்டுமே.'

உள்ளே சென்று விசாரித்து, முடிந்தால் டாக்டரிடம் எனது அனுதாபத்தைத் தெரிவித்து வரலாமென்று படிக்கட்டில் காலடி எடுத்து வைத்தபோது, அந்தப் பழைய எழுத்தாளர் கல்பா, பங்களாவிலிருந்து வெளியே வந்துகொண்டிருப்பதைக் கண்டேன்.

"நமஸ்காரம் ஸார்."

அவர் உற்சாகமின்றிப் பதில் வணக்கம் தெரிவித்தார்.

"யாருக்கு என்ன உடம்பு, ஸார்? ஏன் அழுகுரல் கேட்கிறது?"

கல்பா, முகத்தில் விசனம் தோய, "டாக்டரின் மனைவி நேற்றிரவு தற்கொலை செய்து கொண்டுவிட்டாள்" என்றார்.

"ஆ! டாக்டரின் மனைவியா? தற்கொலையா? ஏன் அப்படி?"

"அதற்கு நீங்களும் நானுமே ஒருவாறு காரணமாகிறோம்."

"நாமா?" என் உடல் கிடுகிடென்று நடுங்கிற்று.

"ஆமாம்; முன்பு என்னிடம் மொழிபெயர்க்குமாறு ஒரு கதை கொடுத்து, அதை நான் அப்படியே திருப்பி விட்டேன் அல்லவா? அந்தக் கதைதான் இப்பொழுது படேலின் மனைவி ரூபாவைக் கொன்றுவிட்டது!"

நான் பின்னும் திடுக்கிட்டேன். "அப்படி என்ன ஸார் இருந்தது, அந்த நாசமாய்ப்போன கதையில்?" என்று நாக்குழறக் கேட்டேன்.

"அதில் அவள் அறியக்கூடாத செய்திகள் இருந்தன. அதற்காகவே அதை மொழி பெயர்க்கத் தயங்கினேன். நீங்கள் தமிழில் மாத்திரம் எழுதுபவர்களே ஆயினும் அதன் அடக்கத்தைப் புரிந்துகொண்டால், வாய் வார்த்தையாக அவ்விஷயம் பரவி ரூபாவை எட்டிவிடுமோ எனப் பயந்தேன். அந்தக் கையெழுத்துப் பிரதியை அழித்துவிட்டு, வேறு ஏதாவது கிறுக்கி, பாஷை அறியாத

உங்களிடம் கொடுத்து ஏமாற்றிவிடக்கூட எண்ணியிருந்தேன். ஆனால், எனக்குப் பொழுது கிடைக்கவில்லை. நீங்களும் விடாக்கண்டராகக் கதையை வாங்கிப்போய் விட்டீர்கள். ஆயினும் அதை நீங்கள் பட்டேலிடமே மொழிபெயர்க்கக் கொடுக்க நேரிடும் என்பதை நான் கண்டேனா? அட! அவனாவது அதைக் கிழித்தெறிந்து விட்டிருக்கலாகாதா? உங்களுக்கு என்ன பதில் சொல்வதென்று அதை மறைத்து வைத்திருக்கிறான். சில நாட்கள் போக்குக் காட்டி, பிறகு மொழிபெயர்க்க அவகாசம் கிடைக்கவில்லையென்று திருப்பிவிட நினைத்திருக்கிறான். கடைசியில் நேற்று அது ,ரூபாவின் கைகளில் அகப்பட்டு விட்டது. இதில் யாரை யார் நோவது?''

'அடடா! எவ்வளவு பெரிய துர்நிகழ்ச்சிக்குக் காரணமாகிவிட்டேன்!' என என் மனம் மிகவும் நொந்தது. எனக்கு எல்லாம் ஒரே மர்மமாக இருந்தன. இந்தத் துயரத்தால் உள்ளம் எத்தனை வாடிற்றோ, அத்தனை முழு விவரத்தையும் அறியத் துடித்தது.

கல்பாவுக்கு இந்த மரணச் செய்தி இரண்டுமணி நேரத்துக்கு முன்புதான் கிடைத்ததாம். அவர் 'கல்பா தேவி'யில் வசிப்பவர். உடனே இங்கே கிளம்பி வந்திருக்கிறார். ஆனால், அவர் வருமுன்பே எல்லோரும் மயானத்துக்குக் கிளம்பிச் சென்றுவிட்டனர். உள்ளே அழுது கொண்டிருந்த பெண்களிடமிருந்து நடந்த செய்திகளை அறிந்துகொண்டு, இப்பொழுது மயானத்துக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தார். நானும் அவருடன் வருவதாகக் கூறி நடந்தேன்.

வழியில் மீண்டும் அவரிடம் அந்த விவரங்களுக்குத் துழாவினேன். கல்பா சொல்லலானார்: இனிமேல் நீங்கள் அதைத் தெரிந்து கொள்வதில் தவறென்ன இருக்கிறது? சொல்கிறேன், கேளுங்கள்: அன்று நீங்கள் இந்தக் கதையை யார் எழுதியது என்று கேட்டீர்களல்லவா? எழுதியவரின் பெயர் இல்லை என்று சொன்னேன், உண்மையும் அப்படித்தான். ஆயினும், அந்தக் கதையின் ஆரம்பமே எனக்கு எழுதியவரைக் காட்டிக் கொடுத்து விட்டது. ரூபாவின் கணவனே அதை எழுதியவன்."

"யார்? டாக்டர் எழுதிய கதையா அது? அப்படியானால் அவரும் எழுத்தாளரா?"

"டாக்டர் அல்ல ஐயா; ரூபாவின் முதற் கணவன் விலாஸ் எழுதிய கதை அது."

"முதற் கணவன்! ஏதேது? என் 'சலன'த்தை ஒட்டியே வருகிறதே, இந்தக் கதையும்! அப்படியானால், டாக்டர் ஏற்கனவே விவாகமான பெண்ணையா......"

"சரியாகப் போயிற்று; உங்களுக்குப் படேலின் வரலாறே ஒன்றும் தெரியாது போலிருக்கிறதே!"

"தெரியாது ஸார்; அவர் அண்மையில் மணமானவர் என்பதற்கு மேல் எனக்கு ஒன்றுமே தெரியாது."

* * *

சரி; கேளுங்கள்: இப்பொழுது நான் கூறப் போகிற கதையைத்தான்—அதாவது தனது பிறப்பிலிருந்து இறப்பு வரையில் உள்ள கதையைத்தான்—விலாஸ் அந்தச் 'சலனம்' என்ற கதையில் வரைந்திருந்தான்.

விலாஸ் அதிசய எழுத்தாளன். தன் கைப்படக் கதைகள் எழுதாமலே, எழுத்துலகில் புகழ் எய்தியவன் 'மாரீசத்தனம்' பண்ணிப் புகழடைந்தவனோ என்று நினைக்க வேண்டாம். அவன் எழுதிய கதைகள் அனைத்தும் அவனுடைய சொந்தக் கற்பனைகள் தாம். இருந்தாலும், அவனால் எழுத முடியாது; எழுதியதைப் படிக்கவும் முடியாது. அவன் குருடன்!

விலாஸ் குழந்தைப் பிராயத்திலே பெற்றோரை இழந்து மாமாவால் வளர்க்கப்பட்டவன். அவன் மாமா வஸன்ஜியின் பெண் தான் ரூபா. ரூபாவும் விலாஸும் குழந்தையிலிருந்தே உயிரொன்றும் உடலிரண்டுமாகப் பழகியவர்கள்.

விலாஸுக்கு அப்பொழுது பதினைந்தாவது வயசு நடந்துகொண்டிருந்தது. ஹைஸ்கூல் படிப்பை முடித்து விட்டுக் காலேஜில் சேர இருந்தான். அந்த வருஷம் பம்பாயில் நடுவேனில் தகித்தது. பலர் பல நோய்களுக்கு ஆளாயினர். பெரும்பாலாருக்கு வந்தது போலவே விலாஸுக்கும் கண் நோவு ஏற்பட்டது.

வஸன்ஜி யுனானி வைத்திய முறைகளைக் கற்றவர். சொந்த உபயோகத்துக்காக வீட்டிலே சகல மருந்துகளும் வைத்திருந்தார். விலாஸுக்கு அவரே சிகிச்சை செய்தார். சிகிச்சையினூடே இரண்டொரு நாட்களுக்கு அகமதாபாதுக்குச் செல்ல வேண்டியிருந்தது. கண்களுக்குப் போட்டுக்கொள்ள வேண்டிய மருந்தை விலாஸிடமும் ரூபாவிடமும் காட்டிக் காலையிலும் மாலையிலும் இரண்டொரு துளிகள் ஊற்றிக்கொள்ளச் சொல்லிவிட்டுப் போனார்.

அன்று மாலை விலாஸுக்குக் கண் நோவு அதிகமாக இருந்தது. ரூபாவை மருந்துப் பாட்டிலை எடுத்து வரச்

சொன்னான். அவளுக்கு எப்பொழுதும் விளையாட்டுப் புத்தி. எதிலும் அவசரம்; படபடப்பு. விளையாட்டுப் போக்கில் வேறு ஏதோ ஒரு மருந்தை எடுத்து அவன் கண்களில் ஊற்றிவிட்டாள்.

தீயிட்டது போலக் கண்கள் எரிந்தன விலாஸுக்கு. "எந்த மருந்தைக் கண்களில் கொட்டி விட்டாயடி ரூபா? இப்படி நெருப்பாகக் காந்துகிறதே!" என்று அவன் கூவினான்.

ரூபா பாட்டிலைத் திருப்பிப் பெயர்ச் சீட்டைப் பார்த்தாள். அது அவள் அப்பா காட்டிய மருந்தல்ல. "ஐயோ! தவறு செய்து விட்டேனே, விலாஸ்" என்று கதறினாள் அவள்.

வஸன்ஜிக்கு விஷயம் தெரிந்தால் ரூபாவை அடித்து நொறுக்கி விடுவார். அவர் கண்டிப்பான பேர்வழி. ரூபாவின் அவசரத் தன்மையை அடியோடு வெறுப்பவர். எனவே, அவர் வரு முன்பு கண்களைச் சொஸ்தப்படுத்திக் கொண்டுவிட வேண்டுமென்று யார் யாரோ டாக்டர்களைப் போய்ப் பார்த்தனர். பயன் ஏதும் ஏற்படவில்லை. விலாஸின் கண்கள் போனவைதாம். கடைசியில் இருவரும் அந்தப் பிழையை வஸன்ஜிக்குத் தெரியாமல் மறைத்து விடுவதென்று தீர்மானித்தனர். ஆனால், அந்தத் தீர்மானத்துக்கு அவசியமே இல்லாதுபோய்விட்டது. அகமதாபாதுக்குச் சென்ற வஸன்ஜி அங்கேயே கார் விபத்துக்குள்ளாகி உயிர் துறந்தார்.

கண்களையும், கண்ணான மாமாவையும் இழந்ததோடு, கண் நிறைந்த ஒரு பெண்ணின் பாரத்தையும் தாங்கி நின்ற விலாஸுக்கு நல்ல வேளையாகச் சோற்றுக் கவலை இல்லாதிருந்தது, வஸன்ஜி பெரிய பணக்காரர் அல்ல; எனினும், அக்குழந்தைகளுக்குக் காணுமளவு சொத்தை விட்டு

விட்டுத்தான் இறந்திருந்தார். எனவே, ரூபாவின் படிப்புத் தொடர்ந்து நடந்தது. படிக்க முடியாமல், எதற்கும் பிறர் உதவியை நாடும் அந்தகனாக உலவி வந்தான், துரதிருஷ்டம் பிடித்த விலாஸ்.

ஆனால், தன் பிழையின் விளைவை நன்கு உணர்ந்த ரூபா, அவனுக்குக் கண்ணற்ற தன்மை தோன்றாதபடி சுசுருஷை செய்து வந்தாள். படிப்பு, வீட்டு வேலை, இவைகளிடையே பொழுது கண்டு, விலாஸுக்கு அலுப்புத்தட்டாதிருக்கப் பற்பல பத்திரிகைகளையும் படித்துக் காட்டுவாள்.

இவ்வாறு பத்திரிகைகளிடையே தன் வாழ்நாளைத் தள்ள நேர்ந்ததால்தானோ, என்னவோ, விலாஸின் உள்ளத்தில் கற்பனையூற்றுப் பொங்கி வழிய ஆரம்பித்தது. அவற்றை அவன் கூறக் கூறக் காகிதத்தில் வடிப்பாள் ரூபா. நல்ல சரக்குச் சந்தையில் விலை போகக் கேட்பானேன் ? விலாஸ் முதல் ரக குஜராத்தி எழுத்தாளர்களில் ஒருவனானான்.

விலாஸ் தன் வருங்காலத்துக்குத் திட்டமிட்டபோது தன் இல்லத்தின் அஸ்திவாரக் கல்லாக இருக்கக்கூடியவள், இருக்க வேண்டியவள், ரூபா ஒருத்தியே என்பது அவனுக்கு நிச்சயமாயிற்று. அதற்கு மறும்பு இருக்குமென்று அவன் நினைக்கவில்லை. 'கிணற்று நீரை வெள்ளமா அடித்துச் சென்றுவிடப் போகிறது ?' என்று அந்தப் பேதை, தனது திட்டத்தை மனத்தினுள்ளே போட்டு மூடி வைத்துக்கொண்டு காலம் வரக் காத்திருந்தான்.

அந்தக் காலம் எப்பொழுதோ வந்துவிட்டது. பத்து வருஷங்களாகக் கண் அவிந்த நிலையில் இருந்தவனுக்கு ரூபாவின் உடல் வளர்ச்சி எப்படித்தெரிந்திருக்கமுடியும் ?

அவள் உடல் வளர்ந்ததற்கொப்ப உள்ளமும் கலந்து உரியவனைத் தேடிக்கொண்டுவிட்டது. விலாஸ் தன்னை மணக்கும் நினைவுடன் இருப்பான் என்பதை அந்தச் சிறுமி எவ்வாறு ஊகித்திருக்க முடியும்? அவள் மனம் வேறொரு வாலிபனிடம் சிக்கிற்று. அவன் தான் இந்த டாக்டர் படேல்.

படேல் பணக்கார வியாபாரி ஒருவருடைய பிள்ளை. மெடிகல் காலேஜில் கண் வைத்தியப் பகுதியில் படித்து வந்தான். அந்த வருஷத்தோடு பம்பாய்ப் படிப்பு முடிவடைந்து விடுவதால், பிறகு மேல்நாடு சென்று கற்கும் திட்டம் வேறு இருந்தது. படேலின் சகோதரி, ரூபாவின் பள்ளித் தோழி, அவள் மூலம் அவர்கள் சந்தித்தார்கள்; பழகினார்கள்; காதலரானார்கள், படேலிடம் தன் மனத்தைப் பறி கொடுத்தபோது, ரூபாவுக்கு மற்ற எல்லாவற்றையும்விடப் பிரத்தியேகமான கவர்ச்சி ஒன்றும் இருந்தது. அவன் கண் வைத்தியனாகப் போகிறவன். மேல்நாடு சென்று அத்துறையில் விசேஷப் பயிற்சி பெற்றுத் திரும்பப் போகிறவன். அவனைக் கணவனாகப் பெற்றால், அதிகமான கவனத்தைச் செலுத்தி விலாஸுக்கு எப்படியாவது பார்வையைத் திரும்பக் கிடைக்கச் செய்துவிடமாட்டானா?

அதைத் தங்கள் பழக்கத்தின்போது ஒரு தடவை படேலிடம் கூறினாள். "உன் அத்தானுக்குக் கண் கொடுத்தால் எனக்கு என்ன தருவாய், ரூபா?" என்று வேடிக்கையாகக் கேட்டான், அவன். "எதை நீங்கள் உயர்ந்த பரிசென்று கருதுகிறீர்களோ, அதைத்தருகிறேன்" என்றாள் அவள்.

"இரு; இரு; கொஞ்சம் ஆலோசனை செய்து சொல்கிறேன்" என்று அவன் சிறிது நேரம் வானத்தைப்

பார்த்துச் சிந்திப்பதுபோலப் பாசாங்கு செய்தான். பிறகு, "கண்டுபிடித்து விட்டேன் ரூபா; கண்டு பிடித்து விட்டேன்; சொல்லட்டுமா?" என்று கேட்டான். "சொல்லுங்கள்" என்றதும், சொல்வதென்ன? காட்டியே விடுகிறேனே" என்று அவளையே தொட்டுக் காட்டிச் சிரித்தான். அவளும் அவனுடன் சேர்ந்து சிரித்தாள்.

ஆனால் இந்தச் சிரிப்பையும் கும்மாளத்தையும் எவன் அறிய வேண்டுமோ அந்த விலாஸ் கடைசி வரையில் அறியவே இல்லை. அவன் எப்படித் தன் உள்ளத்தில் இருந்ததை ரூபாவுக்கு ஒளித்துவிட்டானோ, அவ்வாறே அவளும் தன் உள்ளத்தை அவனுக்கு மறைத்து விட்டாள்.

படேல் மேல்நாடு சென்று இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. மறு வருஷம் திரும்பி வந்ததும், ரூபாவை மணப்பதாக ஏற்பாடு. ஆனால், இடையே ஒருநாள், யாரோ ஒரு தூரத்து உறவினர், தம் மகனுக்கு ரூபாவைக் கல்யாணம் பண்ணித் தரும்படி கேட்க வந்தார். வீட்டுக்குப் பெரியவனான விலாஸிடமிருந்து சாதகமான பதில் கிட்டாது திரும்பிச் சென்றார். அப்போதுதான் இனித் தன் மனத்தை அவளிடம் திறக்கவேண்டிய காலம் வந்து விட்டதென உணர்ந்தான் அவன்.

தேங்கி நின்ற திட்டம் அன்று மடை திறந்து பாய்ந்தது, ரூபாவினிடம். அதைக் கேட்டதும் அவள் அப்படியே அதிர்ந்து போனாள். அதிலும் அவன் கேட்ட கடைசிக் கேள்வி அவளுடைய திட்டங்கள் அனைத் தையும் வெடித்துச் சிதறச் செய்துவிட்டது. "இந்தக் கபோதிக்குக் கண்களாக இருந்து காத்துவரும் உன்னைப்

பிறன் மனைவியாக்கி அனுப்பிவிட்டால், நான் எப்படி, யார் துணையில் வாழ்வேன், ரூபா ”

ஐயோ! அதை அவள் சிந்திக்கவே இல்லையே! இப்பொழுது சிந்தித்தாள். சிந்தித்த பொழுது அவனை மணப்பதுதான் தன் கடமை என்பது புலனுயிற்று. அவள் தன் காதலை உதறித் தள்ளிவிட்டாள். அது பற்றி ஒரு வார்த்தைகூட விலாஸின் முன் வாய் திறக்கவில்லை. மறு பேச்சின்றி ஒரு நல்ல நாளில் மனைவியானுள்.

ஆனுல், மனம் குரங்காயிற்றே! அது அடைந்த சலனம் சொல்லத் தரமன்று. இது காரணமாக அவள் விலாஸுக்கு வெறும் கடமை மனைவியானுளேயன்றிக் காதல் மனைவியாகவில்லை.

## 6

ரூபாவுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டி, மேல்நாட்டில் தக்க அறிஞர்களோடு பெரிய ஆராய்ச்சிகளை நடத்தினுன், படேல். இங்கிருந்து போகும் போதே, எந்த மருந்தினுல் விலாஸின் கண் கெட்டதோ அதைக் குறித்தெடுத்துச் சென்றிருந்தான். அதற்கு மாற்று அளிக்கவல்ல பரிசோதனையில் வெற்றி கண்ட அன்றுதான் அந்த ஏமாற்றம் நிறைந்த செய்தி அவனை அடைந்தது. அவன் தங்கை எழுதியிருந்தாள்: “ரூபா உன்னை ஏமாற்றிவிட்டாள்” அண்ணு; அவள் விலாஸின் மனைவியாகிவிட்டாள்” ஆழ்ந்து பதிந்துபோன காதல் அரைநொடியில் அழிக்கப்பட்ட அதிர்ச்சி அவனை எத்தனை தாக்கிற்ருே, அத்தனைக்கும் அவனிடம் ஓர் உரத்தை ஊட்டிற்று: ‘கடமையின் பொருட்டுத்தான் ரூபா விலாஸைக் கைப்பிடித்திருக்க வேண்டும். அவள்

உள்ளத்தில் எனக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில், விலாஸை அமர்த்தியிருக்க முடியாது. எனவே.....'

இங்கேயும் சலனந்தான். அது அவனை இழிவான நினைவுக்குக்கூட விரட்டிற்று. அது சாத்தியமென்றே அவன் நினைத்தான். அதாவது, அவள் அந்தக் கபோதியின் மனைவியாக இருந்துகொண்டே தன் காதலியாகவும் இருக்க இசைவாளென்று.

இந்த நினைவோடு படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும்பினான். திரும்பியதுமே ஆஸ்பத்திரியை ஆரம்பித்து உடனே ரூபாவுக்குச் செய்தி அனுப்பினான். "நடந்ததைப் பற்றிக் கவலைப்படாதே; உன் கணவன் என் முதல் நோயாளியாக இருக்கவேண்டும். அவனை உடனே சிகிச்சைக்கு அழைத்து வா."

படேலின் முகத்தில் எப்படி விழிப்பதென்று அஞ்சினாள் ரூபா. இருந்தாலும் கணவனுக்குக் கண் கிடைக்குமென்ற ஆவல் அவளை உந்திற்று. விலாஸிடம் புதிய டாக்டரைப் பற்றிக் கூறிச் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றாள். பேச்சு மூச்சின்றி ஆபரேஷன் நடந்தது.

படேல் வெற்றி அடைந்துவிட்டான். விலாஸுக்குப் பார்வையைத் தந்துவிட்டான்; ஆனால் அதற்குப் பரிசாக அவன் விரும்பிய காதல் கிடைத்ததா?

இருபது வருஷங்களாக இருளடைந்து கிடந்த கண்களில் மீண்ட ஒளியைத் தன்னைச் சுற்றியிருந்த உலகத்தின்மீது பாய்ச்சிய விலாஸ், அதன் ருசியை அனுபவித்துக் கொண்டிருந்தபோது, ரூபா எல்லையற்ற களிப்புடன் படேலின் அறைக்கு ஓடோடி வந்து தன் நன்றியின் நிறைவைத் தெரிவித்தாள்.

"என் வாக்குறுதியைக் காப்பாற்றிவிட்டேன், ரூபா; ஆனால் உன் வாக்குறுதி.....?"

"கடமை காதலைக் கொன்றுவிட்டது, படேல். ஆனால், என் உள்ளத்தின் தெய்வம் என்றும் நீங்கள் தாம்" என்று ரூபா விசித்தாள்.

"பூஜை புனரஸ்காரமில்லாது வெறும் தெய்வமாக இருப்பதில் என்ன திருப்தி இருக்கிறது ரூபா ?"

அவள், அவன் மனத்தைப் புரிந்துகொண்டாள். கண்களிலே பொல பொலவெனக் கண்ணீர் பொங்கி வழிந்தது. "என்னை மிருகமாக மாற்றாதீர்கள், படேல். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். அவர் இருக்கும் வரையில் என்னைப் பெண்ணாக—இந்தியப் பெண்ணாக—இருக்க விடுங்கள். தயவு செய்து என் சொந்த மனத்தைச் சலனப்படுத்தாதீர்கள்" என்று கதறினாள்.

படேல் கசடன் அல்ல. இளமையின் துடிப்பும், காதலின் உரமும் அவனை அந்த இழிவான நினைவுக்கு விரட்டின. ஆனால், ரூபா அதற்கு உடம்படமாட்டாள் என்று அறிந்ததும் அவன் மனம் மாறிவிட்டான். படேல் சொன்னான்: "ஒன்று மாத்திரம் நிச்சயம், ரூபா; இந்தப் படேலின் மனைவியாக இருக்கஒருத்தியே தகுதியுடையவள். அவள் ரூபாதான். எந்நிலையில், எப்பொழுது, எந்த வயசில் வந்தாலும், அவளுக்காக அந்த இடம் காத்திருக்கும்."

ஆனால், காத்திருக்கவேண்டிய நிலைதான் ஏற்படவேயில்லையே! டாக்டருக்குத் தன் நன்றியைத் தெரிவிக்க வந்த விலாஸ், இவர்களுடைய சம்பாஷணை முழுவதையும் கேட்டுவிட்டான். அவன் மனமும் சலனம் அடைந்தது. அவர்கள் காதலை அடியோடு அறியாதிருந்த அவனுக்குத் தன் பிழை இளமையையுடைய இருவரின் வாழ்வை எப்படிப் பாழ்படுத்திவிட்டது என்பது அப்பொழுது

தான் புலனாயிற்று. 'ஐயோ! இதை அந்தப் பெண் ரூபா முன்பே அறிவித்திருக்கலாகாதா?" என்று மனம் சாம்பினான் அவன். பிறவிக் குருடனெனத் தெரிந்து மணந்து கொண்ட கணவனுக்குக் கண் கிடைத்த பிறகும், உற்சாகமின்றி வாழ்வை வெறும் கடமையாகக் கழித்து வந்த ரூபாவைக் காணுந்தோறும், 'நான் பாவி; இவளை உயிரோடு கொன்று வருகிறேன்' என்ற நினைவுதான் அவனிடம் மிதந்தது.

இந்த நினைவே அவனை அந்த இறுதி முடிவுக்கு விரட்டியிருக்கவேண்டும்.

ஒருநாள், "இன்று சௌபாத்திக் கடலுக்குக் குளிக்கப்போகிறேன், ரூபா!" என்றான்.

"கடலுக்கா?"

"ஆமாம்; இனி ஒவ்வொன்றாக அனுபவித்துப் பார்க்கவேண்டாமா?"

விஷயமறியாத ரூபா, "ஜாக்கிரதையாகக் குளித்து விட்டுச் சீக்கிரம் திரும்பிவிடுங்கள்" என்று கூறி அனுப்பினாள்.

அவன் திரும்பவில்லை. அன்று மாலையில் அவன் பிரேதந்தான் ரூபாவுக்குக் கிடைத்தது.

போனதுதான் போனானே, பாவி! இடையே இந்தச் சலனக் கதையை எதற்காக எழுதிவிட்டுப் போக வேண்டும்? இதை நீங்கள் படுத்திருந்த பார்க்கிலே உட்கார்ந்து எழுதியிருக்கிறான். தன் கைப்பட எழுதிய கதை ஒன்றேனும் வெளிவந்துவிட வேண்டுமென்ற ஆர்வத்துடனும், சுயநலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, பிறர் நிலையை ஆராயாது, உலகம் தன்னைப் போல் தவறு இழைப்பதைத் தவிர்க்க வேண்டுமென்றும்

இதை எழுதியதாகக் கதையின் முடிவில் அறிவித்திருந்தான். படு முட்டாள். உலகம் உய்யக் கதை எழுதியவன், அக்கதையை ரூபா படிக்க நேர்ந்தால் மறுமலர்ச்சி வாழ்வும் நாசமாகும் என்பதைச் சாகப்போகும் அவசரத்தில் நினைத்துப் பார்க்கவில்லை.

'பிறர் என்ன? கணவனை இழந்த துயரம் சிறிது மாறியதும், படேல் ரூபாவை மணம் செய்துகொண்டான். அந்த வாழ்வானது பேதை ரூபாவுக்கு இன்பமாக அமைந்திருக்கும். அதைக் கெடுத்து, அவளைச் சலனப் படுத்திச் சாகடித்துவிட்டது, உங்கள் கையில் சிக்கி அவள் பார்வைக்கு வந்த அந்தச் சலனக் கதை. ஆமாம். ஐயா; இழந்த கண்களைப் பெற்று, உலக சுகத்தை அனுபவிக்கவேண்டிய சமயத்தில், கணவன் தன் பொருட்டு உயிர் நீத்தான் என்பதை அறிந்த பின்னர், எந்த இந்தியப் பெண்மணிதான் மறுமணம் செய்துகொண்ட கணவனுடன் வாழப் பிரியப்படுவாள்?

* * *

சில்பா கதையை முடித்தார். நான் சிறிது 'சலனம்' அடைந்து நின்றேன்.

# சலனம் 4

"மூவாயிரம் ரூபாய்க்குத் தம்பிடி குறைந்தாலும் வாங்கிக்கொள்ள மாட்டேன்; அதுவும், வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பு கொண்டு வந்து கட்டினுல் தான் 'பிளாக்'கை உங்களுக்கு ஒதுக்க முடியும்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் அவர்.

பணம் படைத்தவர்களின் குணமே இப்படித்தான். பெற்ற பிள்ளை, கொண்ட மனைவியைக்கூட நம்பத் தயங்கும் பேர்வழிகளில் ஒருவரான அவர் முற்றும் அயலானுன என்னை எப்படி நம்பப்போகிருர்?

அவரிடம் கடந்த அரைமணி நேரமாகக் கெஞ்சாத வண்ணம் கெஞ்சினேன்: "நீங்கள் கேட்கும் தொகையை நிச்சயம் தருகிறேன், மிஸ்டர் டி ஸௌஸா; ஆனுல், பெருந் தொகையாக இருப்பதால், புரட்டித்தரப் பதினைந்து நாட்கள் அவகாசம் கொடுங்கள். வேண்டுமானுல், என் வாக்கின் உறுதிக்காக, இப்பொழுது நூருே, இருநூருே

முன் பணம் தருகிறேன் ; மிஸ்டர் டி ஸௌஸா, நானும் ஒரு காலத்தில் ஒரு வீட்டுக்கு உடையவனாக இருந்தவன் தான். அன்று, அதிகம் அறிமுகமில்லாத ஆபீஸ் நண்பன் ஒருவனை இதே மூவாயிரம் ரூபாய்க்கு நம்பி அந்த வீட்டை விலைக்கு விற்று, இறுதியில் ஏமாந்துகூட இருக்கிறேன். ஆனால் இப்பொழுது என் கை தாழ்ந்து விட்டது. நடுத்தர வகுப்பாராகிய என் போன்றவர்களிடமிருந்து இத்தனை பணத்தை எதிர்பார்க்கும் நீங்கள் அதைச் சேகரிக்கச் சிறிது அவகாசம் அளிக்கத்தான் வேண்டும்."

என் சொற்களோ, கெஞ்சலோ, எதுவும் அவர் கல் நெஞ்சத்தில் கொஞ்சம்கூடச் சலனத்தை எழுப்பவில்லை. தமது பிடியிலே நின்றார் அவர். "வீடு வேண்டுமா ? பணத்தை நாளையன்று மறுநாள் கொண்டு வந்து கட்டுங்கள் ; இல்லாவிட்டால், வேறு யார் பணத்தோடு வருகிறார்களோ, அவர்களுக்கே அது கிடைக்கும்" என்றார்.

ஒன்றல்ல ; இரண்டல்ல ; மூவாயிரம் ரூபாய் ! அதுவும் ஒன்றுக்கு மூன்று வாடகையில் வீடு பிடிக்க 'வாய்க்கரிசி" சே ! பணத்தின் மதிப்பு, பணக்காரர்களின் பார்வையில் எவ்வளவு பதராய்ப் போய்விட்டது !

பழங்காலத்தை எண்ணி வருங்காலத்துக்குக் கொட்டாவி விடும் சோம்பேறியல்ல நான். இருந்தாலும், இந்த வீட்டுக்காரருடைய கண்டிப்பு, என்னை அந்த நாளின் நினைவுக்கு விரட்டத்தான் விரட்டிற்று.

**அ**ன்று—

'அவசரக்குடுக்கை' என்ற பட்டத்தைத் தாங்கிய நான் அதற்கு ஏற்ப, யாரோ சொன்னார்களென்று,

வயிற்றை வாயைக் கட்டிச் சேர்த்த பணத்துடன் சிறிது கடனும் வாங்கிப் போட்டு, நகரிலிருந்து தொலைவில் சல்லிசாக முடிந்த காரணத்துக்காக, சிறி வீடு ஒன்றைக் கட்டிக் குடி புகுந்தேன். குடியேறிய சில மாதங்களுக்கு பிறகுதான் என் அவசரத் தன்மை புலனாயிற்று. வேலை செய்து வந்த காரியாலயத்துக்கும் வீட்டுக்கும் உள்ள தூரத்தைக் கடப்பது நேரத்தில் பாதியை விழுங்கிய தோடல்லாமல் ஆரோக்கியத்தையும் ஆக்கிரமிக்க ஆரம் பித்தபோது, வேறு வழியின்றி வெற்றிகரமாக 'வாபஸ்' வாங்கி, மீண்டும் நகரத்திலே வாடகை வீட்டில் குடி புகுந்தேன். கடன் பட்டுக் கட்டிய வீடு கவனிப்பா ரற்றுப் பூட்டிக் கிடந்தது.

கட்டிய வீடு கவனிப்பாரற்றுக் கிடந்தது என்பதற் காகக் கடன் கொடுத்தவர்கள் கவலையின்றி இருந்துவிடு வார்களா ? அவர்களின் நெருக்குதலைப் பொறுக்க மாட்டாது, உடனே வீட்டை விற்றுவிட முடிவு செய்தேன். ஆனால், மூன்று மாதங்கள் வரையில் வாரந் தோறும் பத்திரிகையில் விளம்பரம் செய்தும், அதைத் தகுந்த விலை கொடுத்து வாங்கிக் கொள்பவர் எவரும் வரவில்லை. ஆமாம்; அப்பொழுது பம்பாயில் இன்றளவு ஜனப்பெருக்கமோ, இட நெருக்கடியோ இல்லை. எங்கே பார்த்தாலும், 'வாடகைக்கு விடப்படும்' என்ற போர்டுகள் தொங்கிக் கொண்டிருந்த காலத்தில் நகரத்தி லிருந்து பதினைந்து மைல்களுக்கு அப்பாலுள்ள படுகைக் கிராமத்து வீட்டை, வாடகைக்குக்கூட அல்ல, விலைக்கு வாங்கிக்கொள்ள, அதுவும் நியாயமான விலை கொடுத்து வாங்கிக்கொள்ள, எவர்தாம் முன்வருவார் ?

கடைசியாக, மனம் சோர்ந்து இந்த இக்கட்டிலிருந்து தப்ப வழி அறியாது தத்தளித்துக் கொண்டிருந்தபோது

காரியாலயத்தில் என்னுடன் வேலை பார்த்து வந்த ஹோமர்லோபோ என்ற கோவானிக் கிறிஸ்தவ இளைஞன் அதை வாங்கிக்கொள்ள முன் வந்தான். வீட்டுக்கு ஏழாயிரம் ரூபாய் விலை பேசி முடித்தோம். ஆனால், ஹோமரிடம் அப்பொழுது நாலாயிரம் ரூபாய்தான் இருந்தது. தனக்குக் கோவாவில் கொஞ்சம் நிலபுலன்கள் இருப்பதாகவும், அவற்றை விற்று விரைவில் பாக்கிப் பணத்தை அடைத்து விடுவதாகவும் அவன் சொன்னான்.

ஹோமர் எங்கள் காரியாலயத்தில் வேலை யேற்ற நாள் முதல் என் நட்புக்குப் பாத்திரமானவன். மற்றக் காரியாலயத் தோழர்களைவிட அவனிடம் அதிக நட்புரிமை கொண்டிருந்தேன். அதற்குக் காரணம், அவனும் என்னைப்போன்ற ஓர் எழுத்தாளன். இந்தியாவிலும் வெளிநாட்டிலும் இருந்து வெளிவரும் ஆங்கில பத்திரிகைகளிலெல்லாம் அவ்வப்போது அவனுடைய கதைகள் வெளியாகிக் கொண்டிருந்தன. அகில உலகப் புகழ் பெற்ற எழுத்தாளன் என்றாலும் சற்றும் அகந்தை உடையவனல்ல அவன். என்போன்ற சாதாரண எழுத்தாளனிடங்கூடச் சரிசமமாகப் பழகி, தனது கதைப் பிரச்னைகளைக் கலந்து ஆலோசிப்பானென்றால் அவனுடைய எளிய தன்மையைப்பற்றி வேறென்ன சொல்ல வேண்டும்? எனவே, அவன் வாக்கை நம்பிப் பெயருக்கு ஓர் கடன்பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு வீட்டை ரிஜிஸ்தர் செய்து கொடுத்துவிட்டேன்.

ஆனால், எதிர்பார்த்ததுபோல, ஹோமரிடமிருந்து பாக்கிப் பணம் மூவாயிரமும் உரிய காலத்தில் வரவில்லை. என்னுடைய துரதிருஷ்டந்தானோ என்னவோ, நல்லவனாக இருந்த அவனுடைய நடத்தையிலே விபரீதமான மாறுதல்கள் ஏற்படலாயின. சூதாட்டப் பைத்தியம்

அவனைப் பிடித்துக்கொண்டது. யாரோ ஒரு பணக்கார வீட்டுக் கோவானிப் பெண்ணைக் காதலித்தான். அவளுக் கேற்ற வகையில் வாழ விரும்புபவன் போல, தன் தகுதி யைப் பாராது, வந்த பணத்தையெல்லாம் வாரி இறைத் தான். கடைசியில் அந்தக் காதலும் உருப்பெறவில்லை. ஆசாமி பித்துப்பிடித்தவன்போல் ஆனான். அதோடு, நானும் பணத்துக்கு நெருக்கவே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் திடீரென்று தலைமறைந்து விட்டான்.

பத்து நாட்களாக ஹோமர் காரியாலயத்துக்கு வர வில்லை; லீவும் போடவில்லை. இதை அறிந்தபோது என்னைக் கவலை சூழ்ந்தது. அன்று மாலையே அவனைத் தேடி வீடு சென்றேன். அங்கு வேறு யாரோ குடியேறி யிருந்தனர். விசாரித்தபோது, அந்த வீட்டை ஹோமர் எப்பொழுதோ அவர்களுக்கு விற்றுவிட்டான் என்று தெரியவந்தது. அவனுடைய ஊர் விலாசம் என்னிடம் இருந்தது. பதறி அடித்துக்கொண்டு கோவாவுக்கு ஓடினேன். அவன் அங்கே வரவே இல்லை. அங்கு இருந்த ஒரே சொத்தான வீட்டை, என் வீட்டை வாங்கு முன்பே விற்று விட்டானும்.

என் அவசரத் தன்மைக்கு இன்னொரு தண்டனை என்று நொந்துகொண்டு வீடு திரும்பினேன்.

அன்று மூவாயிரம் ரூபாய் வரையில், அதிகமாகத் தெரியாத ஒருவனை நம்பி வீட்டை விற்று ஏமாந்த நான் இன்று வாடகைக்கு வீடு பிடிக்க அத்தனை பெருந் தொகையைக் கிளப்பமுடியாமல் கெஞ்சிக் கூத்தாடும் நிலைக்கு வந்தபோது, என்னதான் பசித்தவன் பழங் கணக்குப் பார்க்கும் தன்மையை வெறுப்பவனாக இருந் தாலும், சுழன்று எழுந்த அப்பழைய நினைவின் வேதனையை அடக்க முடியவில்லை.

மனிதன் என்றும் ஒரே நிலையில் இருந்து விடுவதில்லை. உயர்வும் நலிவும் ஒவ்வொருவர் வாழ்வையும் பின்னித் தொடருகின்றன. ஒரு காலத்தில் நானும் கவலையின்றி வாழ்ந்து வந்தேன். என்னையும் மனைவியையும் மாத்திரம் கொண்ட குடும்பத்தின் தேவைக்கு அதிகமாகச் சம்பா தித்து நிறைய மீத்தும் வந்தேன். பின்பு நாளாக ஆக என் வாழ்வுச் சக்கரம் தாழத் தொடங்கிற்று. அதன் தாழ்ச்சிக்குப் பல் வேறு காரணங்கள் இருந்தன அவற்றுள் ஒன்றுதான் சொந்த வீடுகட்டி வாழ்ந்த அனுபவம் ; மற்றும் குடும்பப் பெருக்கம், விலைவாசி களின் வீக்கம், இவைகளுக்கு ஈடுசெய்ய முடியாத வருவாய், இவையெல்லாம் சேர்ந்து, என்னைச் சாதாரண மனிதனிலும் சாதாரணமானவனாகச் செய்துவிட்டன.

வரும்படிக்கு ஏற்றவாறு குடும்பச் செலவுகளைக் குறைக்க நானும் மனைவியும் பழகிக்கொண்டோம். ஆனால், குடியிருந்த வீட்டுக்கு ஏற்றவாறு குடும்பப் பெருக்கை நிறுத்திக் கொள்வது எங்கள் சக்தியை மீறிய தெய்வச் செயலாக இருந்தது. முன்பு எங்கள் இருவருக்கும் போதுமானதான தென்று பிடித்துக்கொண்ட வீட்டில் இன்று ஆறு ஜீவன்கள் ஒண்டிக்கிடக்க நேர்ந்தது. அவ்வப்போதுள்ள குடும்பப் பெருக்கத்துக்கு ஏற்றவாறு ஜாகை மாற்றிக்கொள்ள முடியாதபடி, பம்பாயில் ஜனப் பெருக்கமும் இட நெருக்கடியும் தொடங்கிவிட்டன.

கிடைத்த வருவாய்க்குள் குடும்பத்தை நடத்தக் கற்றுக்கொண்டதேபோல், கிடைத்த இடத்தில் குடி யிருக்க முயன்றுதான் பார்த்தோம். ஆயினும், அது குழந் தையின் ஆரோக்கியத்தைப் பாதிக்க ஆரம்பித்தது.

வேறு வழியில்லை ; கடனோ முதலோ வாங்கி 'வாய்க் கரிசி'யை அழுது வேறு பெரிய இடம் பிடிக்கவேண்டி

யதுதான் என்று மனைவி வேறு நச்சரிக்கத் தொடங்கி விட்டாள். எனக்கும் அதையன்றி நிவர்த்தியில்லை என்ற வரைக்கும் சலிப்பு ஏற்பட்டுவிட்டது. வீடு தேடும் படலம் ஆரம்பமாயிற்று.

பம்பாயின் இன்றைய நிலையில் அது அவ்வளவு எளிதான காரியமா ? நாள்தோறும் புதுக் கட்டிடங்கள் எழுந்துகொண்டே இருந்தன. காலி மனையே காண முடியாதபடி, மாட மாளிகைகள் கிளம்பிவந்தன. ஆனால், அவை எல்லோருடைய கைக்கும் எட்டும்படியாக இருக்கவில்லையே ! வீட்டு வாடகையை விஷமென ஏற்றிச் சென்றதை யாவது, காலநிலைக்கேற்ற ஏற்றம் என்று ஒப்புக்கொள்ளலாம். ஆயினும், இந்தப் 'பகடி' என்ற 'வாய்க்கரிசி'ப் பழக்கம் ! இது உலக சரித்திரத் திலேயே புதுமையானது. முன் காலத்தில் ஒரு கட்டி டத்தை விலைக்கு வாங்கும் பணத்தை, இப்பொழுது' வீட்டுகாரனுக்கு இனமாக வழங்கவேண்டியிருந்தது. சட்ட விரோதமான வழக்கந்தான் இது ; என்றாலும், இடப் பஞ்சம் காரணமாக, 'பம்பாயின் சரித்திரத்தில் அது நிரந்தர இடம் பெற்றுவிட்டது. இதோ இத்தனையும் சொல்லும் நானே அதற்குத் தயாராகிவிட்டேன் என்றால், வேறு என்ன அத்தாட்சி வேண்டும் ?

கூடிய வரையில் அதிக 'வாய்க்கரிசி' போடாமல் வீடு பிடிக்க வேண்டுமென்று தீவிரமாக அலைந்துகொண் டிருந்தபோதுதான் இந்த டிஸௌஸா கட்டியிருக்கும் வீட்டைப் பற்றிய செய்தியை என் நண்பர் ஒருவர் அறிவித்தார்.

"பகடி நிறைய இல்லை, ஸார் ; மூவாயிரந்தான் எதிர் பார்க்கிறான். வாடகையும் மூன்று அறையுள்ள இடத் துக்கு அறுபத்தைந்து ரூபாய் அதிகம் அல்ல. இந்தக்

காலத்தில் இதுபோன்ற சந்தர்ப்பம் லேசாக வாய்க்கக் கூடியதல்ல. உடனே அவனைக் கண்டு பேசி முடித்து விட்டு வாருங்கள்" என்றார் அந்த நண்பர்.

உடனே வந்தேன்; பேசினேன். ஆனால், முடிப்ப தற்கு? மூவாயிரம் ரூபாயை மூன்றே நாட்களில் சேகரித்துக் கொடுப்பது என்றால் ஆகும் காரியமா?

## 2

வீட்டுக்கு வந்து வேதத்திடம் விஷயத்தைச் சொன்னதும், அவள் ஆத்திரத்தோடும் வெறுப்போடும், "மூன்று நாளில் மூவாயிரமா? அதற்கு எங்கேயாவது கொள்ளை யடிக்கப் போகவேண்டியதுதான்" என்றாள்.

"அப்படித்தான் செய்ய வேண்டுமானால், சொல்; செய்துவிடுகிறேன்" என்றேன் கேலியாக.

"இல்லாவிட்டால், எங்கேயாவது புதையலாவது கிடைக்க வேண்டும்" என்றாள் அவள். பெண்களின் ஆசைதான் எங்கெங்கெல்லாம் தாவிவிடுகிறது!

"புதையல்தானே? அதுவும் கிடைக்க வழியில்லாது போய்விடவில்லை, வேதம்; நம்முடைய ஹோமர் செய்தானே. அதுபோலக் குதிரைப் பந்தயமும் 'சட்டா'வும் விளையாடினால்......"

"போதுமே; அந்தக் கடன்காரனின் பெயரை எதற்கு இந்தச் சமயத்தில் இழுத்து என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீர்கள்?"

"எதற்கும் காலம் வரவேண்டும், வேதம். இந்த இரண்டு அறைக் குடிலுக்குள், நாம் இன்னும் எத்தனை காலம் அடைபட்டுக் கிடக்க வேண்டுமென்று விதி இருக்

கிறதோ, அத்தனை காலமும் இருந்துதான் ஆகவேண்டும். அதற்குள் நீ அவசரப்பட்டால்...... ?"

"என்னவோ முருகன் என்றைக்குத்தான் கண் திறக்கப் போகிறுனே ?"

வேதம் மனமுருகி, முருகன் படத்தின் முன் சென்று வேண்டிக்கொண்ட பிரார்த்தனை, வேலவன் செவிக்கு எட்டியிருக்கத் தான் வேண்டும் ; இல்லாவிட்டால்......!

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிரித்துக்கொண்டு கொடுக்குமென்று நான் வாயைப் பிளந்துகொண்டு வாளா இருந்துவிடவில்லை. தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், எல்லோரையும் துழாவத்தான் துழாவினேன். ஆனல், தொகை என்ன ஐந்தா, பத்தா ? தெரிந்தவர்கள் வருந்தினுர்கள் ; தெரியாதவர்கள் சிரித்தார்கள்.

வீட்டுக்கார டி ஸௌஸா சொன்ன கெடு நெருங்கி விட்டது.

அன்று சனிக்கிழமை. அன்றுதான் கடைசி நாள். காலையில்கூட இரண்டொரு நண்பர்களைச் சந்தித்துப் பணம் கிடைக்குமா என்று பார்த்துவிட்டு, வெறுங் கையுடன் சற்றுத் தாமதமாகவே காரியாலயத்துக்கு வந்தேன். என் மேஜையண்டை தபால்காரன் நின்றிருந் தான். கையெழுத்திட்டுப் பெற வேண்டிய ரிஜிஸ்தர் கடிதங்கள், மணியார்டர்கள் முதலியவைகளே என் காரி யாலய விலாசத்துக்கு அஞ்சல் செய்யப்பட்டு வரும். அவை 'பட்டுவாடா' ஆகும் சமயத்தில் நான் வீட்டில் இருக்கமாட்டேன். ஆதலால், என் பிராந்தியப் போஸ்ட் மாஸ்டரிடம் அவற்றை நிரந்தரமாகக் காரியாலய விலாசத் துக்குத் திருப்பி விடும்படி கேட்டுக்கொண்டிருந்தேன். எனவே, இன்று தபால்காரனை மேசையண்டைகண்டதும்,

பத்தோ, இருபதோ, ஏதேனும் `பத்திரிகையிலிருந்து அன்பளிப்பு வந்திருக்கு மென்று அசுவாரசியமாகக் கருதினேன்.

ஆனால், அவன் கனத்த இன்ஷூர் கவர் ஒன்றை எடுத்து என் முன் நீட்டியதும், ஆச்சரியத்தோடும் அவசரத்தோடும் முதலில் அனுப்பியிருப்பவரின் பெயரை நோக்கினேன்.

"ஹோமர் லோபோ, தபால் பெட்டி நெ. 365 பம்பாய்—!'' என்ற விலாசத்தைப் படித்த என்னால் என் கண்களையே நம்ப முடியவில்லை. கையெழுத்திட்டுக் கவரை வாங்கி உடைத்துப் பார்த்தேன். மூன்று ஆயிரம் ரூபாய் நோட்டுகளும், நூற்றுச் சொச்சம் சில்லறை நோட்டுக்களும் இருந்தன. கூடச் சிறிய சீட்டு ஒன்றும் இருந்தது. ' மிஸ்டர் ராமன், தங்களுக்குச் சேரவேண்டிய பாக்கியும் வட்டியும் ; பெற்றுக்கொள்ளுங்கள். தாமதத்துக்கு மன்னிக்க வேண்டும் — ஹோமர் '' என்று அச்சீட்டில் எழுதியிருந்தது.

ஹோமர் எங்கும் ஓடிப் போகவில்லை. எனக்குத் தரவேண்டிய பாக்கியை மறந்து விடவும் இல்லை. நல்ல தருணத்தில் கொடுத்து உதவக் காத்திருந்தவன்போல அனுப்பியிருக்கிறான் என்பதை உணர்ந்தபோது அவனை உண்மைக் கிறிஸ்தவனாகக் கண்டேன்.

உடனே அவனுக்கு, எந்தச் சந்தர்ப்பத்தில் அவனுடைய பணம் புதையலாகக் கிடைத்து என் மானத்தைக் காத்த என்பதை விளக்கி, என்னுடைய மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதிப் போட்டு விட்டுக் காரியாலயத்தில் லீவு வாங்கிக் கொண்டு வீடு திரும்பினேன்.

வேதத்திடம் இந்த அதிசயத்தைச் சொன்னபோது "ஆமாம்; அந்தக் கடன்காரன் தானாக ஒன்றும் அனுப்பி விடவில்லை; என் தெய்வம் அவனை அனுப்பச் செய்திருக் கிறது" என்றாள்.

"ஆம்; முருகனே அனுப்பச் செய்திருப்பான்; அவன் கண்கண்ட தெய்வமல்லவா?" என்று நானும், ஒத்துப் பாடினேன்.

## 3

பணத்தை எடுத்துக்கொண்டு டி ஸௌஸாவைப் பார்க்கச் சென்றேன். பணக்காரர்களுக்குரிய தோரணையில் வழக்கம்போல, வீட்டு வெளி வராந்தாவிலே நிறுத்தி வரவேற்றார். "ஓ நீங்களா? நமஸ்காரம்!"

"பணம் கொண்டு வந்து விட்டேன், மிஸ்டர் டிஸௌஸா!"

"நான் ரொம்ப விசனிக்கிறேன், மிஸ்டர் ராமன்டு வீட்டை வேறு ஒருவருக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டு; விட்டேன்!"

"என்னிடம் முதலில் ஒப்புக்கொண்டீர்களே, ஸார்!' என்று அதிர்ந்து கேட்டேன்.

"ஆமாம்; ஆனால், பின்பு விசாரித்ததில் நீங்கள் அபாயகரமான மனிதர் என்று தெரியவந்தது."

"என்ன! நான்...அபாயகரமான மனிதனா? எங்கே யாவது திருடிவிட்டேனா? யாரையாவது கொலை செய்து விட்டேனா? அல்லது அரசியல் கைதியா? இல்லை, இனத் துவேஷம், ஜாதித் துவேஷம், மதத்துவேஷம் கொண்ட வனா? ஸ்திரீலோலனா? சூதாடியா? குடிகாரனா? எதைக்

கொண்டு என்னை அபாயகரமானவன் என்று தீர்மானித்தீர்கள், ஸார்?" மனத்தில் மூண்ட ஆத்திர வேகத்தில் வார்த்தைகளைக் கொட்டி இறைத்துவிட்டுப் பதிலுக்காக அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

டிஸௌஸா அமைதியாகக் கேலிச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு, "எழுத்தாளராமே" என்றார்.

பெரிய மலை ஒன்று பெயர்ந்து தலைமேல் விழுந்தது போல இடிந்து போனேன். இதைக் கேட்டபோது எழுத்தாளன் அபாயகரமானவன்; கொலைகாரனிலும் கொடூரமானவன்; திருடனினும் பயங்கரமானவன்; கைதியிலும் ஒதுக்கப்பட வேண்டியவன்; காமுகன், சூதாடி, குடிகாரன் இவர்கள் எல்லோரையும்விட வெறுக்கப்பட வேண்டியவன்! அட பாவ ஜன்மமே!

நான் படபடப்பு மிகுந்தவன்தான். ஆத்திரத்தில் சொற்களைச் சிந்திவிட்டுப் பின்னால் பச்சாதப்படுகிறவன் தான். இருந்தாலும், அன்று கிட்டிய இந்தப் புதுப் பட்டத்தைகேட்டபோது, அதை அளித்தவரிடம் எனக்கு வெறுப்பு ஏற்படவில்லை. என்னை, நான் மேற்கொண்ட அந்தத் தொழிலைத்தான் வெறுத்துக்கொண்டேன்.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஒருநாள் இரவில் ஒரு கனவு கண்டேன். அதில், மில்தொழிலாளி ஒருவன், என்னுடைய கதை ஒன்றைப் படித்ததன் பயனாகத் தன் மனைவி தற்கொலை செய்து கொண்டாளென்று என் கைகளை வெட்டிவிட வந்தான். அன்று அந்தக் கனவை நினைத்துச் சிரித்தேன். ஆனால், இன்று? நேருக்கு நேர் நின்று, படித்த, முற்போக்கான மனிதர் ஒருவர், 'நீ அபாயகரமானவன்' என்று கூறியபோது என்னால் சிரிக்க முடியவில்லை. அழத்தான் தோன்றிற்று.

எப்படி, எதைக் கண்டு, எழுத்தாளன் அபாயகர மானவன் எனத் தீர்மானித்து இந்த டி ஸௌஸா வாக்களித்ததற்கு மாருக வீட்டைத் தரமாட்டேன் என்கிருர் என்பதையெல்லாம் தூண்டித் தொளேத்துக் கேட்கும் மனநிலேயில் நான் அப்போது இல்லே. கைவிடப் பட்ட ஜீவன், கடைசிக் காலத்தில் எப்படியோ உயிர் பெற்று, ஆனல் வாழத் தகுதியற்றதாகி விட்டால் எவ்வாறு உள்ளம் நையுமோ, அவ்வாறு நைந்துவிட்டேன் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அங்கிருந்து எழுந்து நடந்தேன்.

எனக்குப் பின்னல் கட கடவென்று டி ஸௌஸா வெடிப்புச் சிரிப்புச் சிரித்துக் கொண்டிருந்தது, 'எழுத் தாளன் அபாயகரமானவன் மாத்திரமல்ல ; நகைப்புக்கும் இடமானவன்' என்பது போலிருந்தது.

## 4

நொந்த மனத்துடன் வீடு திரும்பிய என்னே இன்னும் நோவச் செய்யும் சம்பவம் ஒன்று அங்கு நிகழ்ந்திருந்தது. வேதம் ஏதோ வேலேயாகச் சற்று வாயிற் பக்கம் சென்றிருந்தபோது என் கடைசிக் குழந்தை எரிந்து கொண்டிருந்த 'ஸ்டவ்'வைப் பிடித்திழுத்து உடம்பைப் பொசுக்கிக் கொண்டு கிடந்தது. உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லே ; என்ருலும், குழந்தை இருந்த அலங்கோல நிலேயைக் கண்டபோது என்னே அறியாமலே கண்ணீர் சுரந்தது.

"நான் என்ன செய்வேன், சொல்லுங்கள் ! சர்வ ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறேன். இருந்தாலும் பத்தடி அறைக்குள் ஆறு ஜீவன்கள் வளேய வேண்டு மென்ருல்

இது போன்ற ஆபத்து அதிசயமானதல்லவே. போதும்; கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுங்கள். இந்தச் சங்கடங் களுக்குத்தான் முடிவு காட்டிவிட்டானே முருகன். சரி; போனகாரியம் என்ன ஆயிற்று? புது வீட்டுக்கு என்றைக்குக் குடி போகலாம்?'' என்று என்னைச் சமாதானம் செய்தவாறு விஷயத்துக்கு வந்தாள், வேதம்.

மனத்தில் புகுந்த ஏமாற்றம் வார்த்தைகளை வெறுப்பு புகையாக வெளியேற்றியது. "வீடா! என்னைக் கட்டையிலே கொண்டு வைக்கிற அன்றுதான்!''

வேதம் சட்டென்று என் வாயைப் பொத்தி, "ஏன்? யாருக்காவது கொடுத்துவிட்டாரு, என்ன?'' என்று கேட்டாள்.

"ஒருவருக்கும் கொடுக்கவில்லை; ஆனால் நமக்குத் தரமாட்டாராம்.''

"ஏனும்? கட்டையிலே போகிறவனுக்கு அதுக் குள்ளே என்ன வந்துவிட்டது இப்படிச் சொல்ல?''

"அவருக்கு ஒன்றும் வரவில்லை; எனக்குத்தான் வந்திருக்கிறது.''

"நீங்கள் என்னதான் சொல்கிறீர்கள்?''

"சொல்லுவதற்கு என்ன இருக்கிறது, வேதம்? இதோ, இந்தக் கை இருக்கிறது பார்; இதைக் கட்டையில் வைத்துப் பொசுக்கிய பிறகுதான், நான் நாலு பேரைப் போல நல்லது பெற்று வாழ முடியும்.''

"சொல்வதைத் தெளிவாகத்தான் சொல்லுங்களேன்.''

"நான் எழுத்தாளனும்; அபாயகரமான பேர்வழி யாம்; அதனால் வீடு தர முடியாது என்று சொல்லி விட்டார்.''

"என்ன அது ? உண்மையாகவா ?"

"இதில் பொய் சொன்னால் ரொம்பக் கௌரவம் பார்."

அவ்வளவுதான் ; வேதம் வேறு என் நொந்த புண்ணில் கோலிட ஆரம்பித்துவிட்டாள். அவளுக்கு நான் எழுத்தாளனாக இருப்பதால் வாழ்வில் கிட்ட வேண்டிய உயர் பதவிகளெல்லாம் கிட்டாமல் இருக் கின்றன என்ற நினைவு நிரந்தரமாக இருந்தது. அதற்கு இன்றைச் சம்பவம் வேறு உரமேற்றி விட்டது. பிறகு கேட்கவா வேண்டும் ? பொழிந்து தள்ளிவிட்டாள்.

தாக்குதல்களை மனிதன் ஓரளவுக்குத்தான் தாங்க முடியும். கருங்கல்போன்ற மனமும் தொடர்ந்து அடி விழுந்தால் பிளந்து விடுகிறது. என் மனமும் பிளந்து தான் போயிற்று. அதன் விளைவாக, அன்றிரவு அழகான 'பார்க்கர்' பேனா—என் எழுத்தை மெச்சி ஆசிரியர் ஒருவர் அளித்த வெகுமதி—ஒன்று முனையை இழந்து குற்றுயிராயிற்று. அதோடு நின்றதா என் ஆத்திரம் ? மாலையில் குழந்தையின் உடம்பை அணைத்து ரணமாக்கிய அக்கினியை நாடி என் வலக்கையும் விரைந்தபோது......

வேதம் தன் வார்த்தைகளை அடக்கிவிட்டுத் திகி லுடன் ஓடிவந்து என்னை அடுப்பின் முன்னிருந்து இழுத்துத் தள்ளினாள். "நல்ல வெறி இது ! நல்ல கோபந் தான் போங்கள் ; என்னை வாழ்வு முழுவதும் அழுது கொண்டே இருக்கச் செய்ய வேண்டுமென்பது உங்கள் நோக்கமா ?"

"என்னை விடு வேதம் ; இந்த எழுத்துப் பைத்தியம் என்னைவிட்டு ஒழியவேண்டும். அதற்கு இது ஒன்று தான் சரியான வழி." நான் அவளைத் திமிறினேன்.

"என்னைத் திமிருதீர்கள்; உங்களை எதிர்க்கச் சக்தியற்றவள் நான். வீடு கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றத்திலும், குழந்தை இப்படிக் கிடக்கிறதே என்ற வேதனையிலும் ஏதேதோ பேசிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்."

அவள் உடல் நடுங்கிற்று. என்னை நெருங்கி அணைத்துக்கொண்டு, கைகளைப் பிடித்துக் கண்களில் ஒத்திக்கொண்டு கண்ணீர் சிந்தினாள்.

நான் பதில் பேசவில்லை. என் தீவிரம், வெறுப்பு, வேகம், எல்லாம் பெண்ணின் கண்ணீரால் கரைந்து கொண்டிருந்தன.

வேதம் என் முகத்தைத் திருப்பி, "என்ன, என்னை மன்னிக்க மாட்டீர்களா? மன்னித்தேன் என்று சொல்ல மாட்டீர்களா?" என்று கதறினாள்.

"உன் குற்றம் எதுவும் இல்லை, வேதம். நீ மாத்திரமல்ல; உலகம் முழுவதுமே என் எழுத்துத் தொழிலை வெறுக்கிறது என்பதை இன்றைச் சம்பவம் எடுத்துக் காட்டிய பிறகு..."

"இல்லை; உங்கள் எழுத்தை நானும் வெறுக்கவில்லை. ரசிகத்தன்மையுள்ள வேறு எவரும் வெறுக்க மாட்டார்கள். எத்தனைதான் பெயரும் புகழும் கிடைத்து விட்டாலும், போதிய ஊதியம் கிட்டாத இந்தத் தொழிலுக்கு விரயம் செய்யும் பொழுதை வேறு எதற்காவது ஈடு செய்தால் கைநிறையச் சம்பாதிக்கலாமே என்ற எண்ணமுடையவள் ஆதலால் உங்கள் கதைகளை நான் வெளிப்படையாக மெச்சுவதில்லை. நீங்கள் எழுதுங்கள்; நிறைய எழுதுங்கள்; வேலையை வேண்டுமானாலும் ராஜீநாமாச் செய்துவிட்டு எழுதிக்கொண்டே இருங்கள். அதற்காக இருபது வருஷங்களாக நான் என் இருதய

அந்தரங்கத்தில் வைத்துப் பூசித்து வரும் இந்தக் கைகளை......''

அவள் மீண்டும் முகத்தை என் நெஞ்சில் புதைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள். சே! நிலைமை எவ்வளவு ரசாபாசமாகப் போய்விட்டது!

"நீ என்ன வேண்டுமானாலும் சொல், வேதம். இன்று கிடைக்க இருந்த வீடு கிடையாமற் போனதற்கு நான் எழுத்தாளனாக இருந்ததுதானே காரணமாகி விட்டது?"

"ஆமாம்; அந்த நாசமாய்ப் போகிறவனுக்கு வேறு என்ன விருப்பு வெறுப்போ? உங்கள் கண்களைத் துடைக்க, 'எழுத்தாளன்' என்று குற்றம் சாட்டி அனுப்பிவிட்டான். இவன் வீடு இல்லையென்று சொல்லி விட்டதால் நாம் தெருவில் நின்றுவிடப் போகிறோமா, என்ன? பணம் இல்லையே என்று தவித்தபோது, புதையல்போல, போன பணத்தைக் கிடைக்கச் செய்த முருகன், இதைவிட உயர்ந்த இடத்தையும் தேடித் தருவான், பாருங்கள்!"

வேதத்துக்குத்தான் தெய்வத்திடம் எத்தனை ஆழ்ந்த நம்பிக்கை! அந்த நம்பிக்கைகளும் அதிகமாக வீண் போனதில்லை. அதுபோல இதுவும்—

## 5

ஆம்; அதுபோல இதுவுந்தான் வீண் போகவில்லை. வேதம் சொன்னபடி, ஒரு மாதத்துக்குள், எந்தத் தெருவில் டி ஸௌஸா கட்டிய வீடு இருந்ததோ,

அதே தெருவின் மறுகோடியில், அதே வாடகையானாலும், வாய்க்கரிசி இல்லாமல் வெறும் 'அட்வான்ஸ்' மாத்திரமே கொடுக்கும்படியாக ஒரு வீட்டைக் கிடைக்கச் செய்துவிட்டான், முருகன்.

அந்த வீடு கிடைத்ததுகூட, என்னுடைய போன பணம் கிடைத்ததுபோல, எதிர்பாராததுதான். அன்று வந்த தபால்களோடு ஹோமரின் குறிப்புக் கடிதம் ஒன்றும் இருந்தது. அவன் எழுதியிருந்தான் :

"உங்களுக்கு வீடு கிடைக்கவில்லையாமே? மிகவும் விசனிக்கிறேன்; ஒருகால் அதற்கு நானே காரணமோ என்ற நினைவு வாட்டிற்று. எனவே, உங்கள் பங்குப் பணியை நான் மேற்கொண்டு வீடு தேடினேன். டி ஸௌஸாவின் வீடு பார்த்தீர்களே, அதே 'ஸயான் ரோடு 24-ஏ'யின் இடதுசாரிக் கோடியில் ஒரு கட்டிடம் முடியுந் தறுவாயில் இருக்கிறது. வீட்டுக்காரன் பட்காவ்கர் என்ற மகாராஷ்டிரன், பணக்காரனல்ல; ஆதலால் பரந்த இருதயமுடையவன். மூன்று அறைகளுள்ள 'பிளாக்'குக்கு அதே அறுபத்தைந்து ரூபாயும், மூவாயிர ரூபாயுந்தாம். ஆனால் அந்த மூவாயிரம் 'பகடி' அல்ல; மாதந்தோறும் வாடகைக்கு ஈடு செய்துகொள்ளப்படும் 'அட்வான்ஸ்'. உங்கள் அனுமதியின்றியே உங்களுக்காக ஒரு 'பிளாக்'கைப் பேசி முடித்திருக்கிறேன். ஒரு வாரத்தில் நேரில் பணம் கொண்டு வந்து கட்டுவீர்கள் என்று கூறியுள்ளேன். தேவையானால் உடனே பட்காவ்கரைச் சந்தியுங்கள்."

இந்தக் கடிதத்தைப் படித்ததும் எனக்கு முதலில் பட்காவ்கரைச் சந்திப்பதா, அல்லது இத்தனை உதவியையும் மறைந்துகொண்டே செய்துவரும் ஹோமரைச் சந்திப்பதா, என்பது புரியவில்லை. ஹோமரை அவசியம்

பார்க்கத்தான் வேண்டும். பார்த்து, அவன் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டதால் ஏற்பட்ட சந்தேகங்களை இந்த எதிர்பாராத உதவிகள் எத்தனை தூரம் ஈடுசெய்து விட்டன என்பதைச் சொல்லி நன்றி தெரிவிக்கத்தான் வேண்டும் என்று அவனுடைய விலாசத்துக்காகக் கடிதத்தைத் துழாவினேன். ஆனால் அதை அவன் அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கவில்லை. கடிதம் பம்பாயிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக இருந்த பம்பாய் 1' என்ற தபால் முத்திரையைத் தவிர வேறு எதுவும் அந்தக் கடிதத்தில் இல்லை. இல்லாவிட்டால் என்ன ? அவனுடைய முன் ரிஜிஸ்தர் கடிதத்தில் தான் தபால்பெட்டியின் எண்ணைக் கொடுத்திருந்தானே. அன்று காரியாலயத்துக்குப் போனதும் போகாததுமாய், தபால் பெட்டி எண்களுக்குரிய விலாச ஜாபிதாவைப் பிரித்துப் பார்த்தேன். 'இண்டோ—பாரின் டிரேடர்ஸ்' என்ற பெயருடன் 'பெல்லார்டு எஸ்டேட்'டிலிருந்த ஓர் கம்பெனியின் தபால் பெட்டி அது. உடனே அந்தக் கம்பெனிக்கு டெலிபோன் செய்து, "ஹோமர் லோபோவிடம் பேசவேண்டும்" என்றேன்.

"ஹோமர் லோபோ என்ற பெயருடையவர் யாரும் இந்தக் கம்பெனியில் வேலை செய்யவில்லையே !" என்றாள் நளினமான குரலில், ஆப்பரேட்டர் பெண்மணி.

"உங்கள் கம்பெனியின் தபால் பெட்டி இலக்கம் 365 தானே ?"

"ஆமாம்."

"அப்படியானால், அதே விலாசத்திலிருந்து அவர் சமீபத்தில் எனக்கு ரிஜிஸ்தர் கடிதம் அனுப்பியிருக்கிறாரே; எப்படி ?"

"எப்படியோ? எனக்கு என்ன தெரியும்? ஒரு வேளை உங்கள் நண்பர் தபால் பெட்டி எண்ணைத் தவருக எழுதியிருக்கலாம்."

"அப்படித்தான் இருக்க வேண்டும். ஒருகால், அனுப்புபவரின் விலாசமின்றிக் கடிதங்களை ரிஜிஸ்தர் செய்து அனுப்ப ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் ஆதலால், கைக்கு, வந்த தபால் பெட்டி எண் ஒன்றை எழுதி அனுப்பிவிட்டானே, என்னவோ? இப்படியெல்லாம் தன்னை மறைத்துக்கொண்டு எதற்குக் காரியங்களைச் செய்யவேண்டும் இந்த ஹோமர்? என்னைச் சில காலம் தவிக்கவிட்டுத் தலை மறைந்திருந்ததால், எப்படி மறுபடி முகத்தில் விழிப்பதென்ற சஞ்சலத்துடன் இவ்வாறு செய்திருக்கிருனே?

இப்படிப் பலவாருக மனம் சிந்தித்தது. சிந்தனைகள் ஒரு புறம் இருந்தாலும் காரியங்கள் முறையாக நடந்தன. ஹோமரின் கடிதம் கிடைத்த மறுநாளே பட்காவ்கரைச் சந்தித்தேன். அட்வான்ஸ் பணத்தைக் கட்டி ரசீது வாங்கிக்கொண்டேன். ஒரு வாரத்துக்குப் பின்னர் வேதம் குழந்தைகள் சகிதம் புதுவீடு கிருகப்பிரவேசமும் ஆயிற்று.

## 6

வேதத்தின் உள்ளத்தில் நீண்ட நாட்களாகத் தேங்கியிருந்த குறை நீங்கிப் போயிற்று. அவளுடைய முருகன் கொடுத்த வீட்டுக்குக் குடிபோனதும் பிடி உயரம் அதிகமாகிவிட்டது போலத் தென்பட்டாள் அவள். ஆனல், என் மனத்திலே விழுந்த அந்த அடி—

எழுத்தாளன் அபாயகரமானவன்!

டி ஸௌஸாவின் இந்த அம்பு போன்ற சொற்கள் ஏற்படுத்திய ரணம் ஆறிவிட்டாலும், அதன்வடு இன்னும் மனத்திலிருந்து மறைந்துவிடவில்லை.

நாள்தோறும் அவருடைய புது வீட்டைத் தாண்டித் தான் போவேன், வருவேன். அந்த வீட்டின் மேல்மாடியிலே அவர் இப்பொழுது வசித்து வந்தார் என்று அறிந்திருந்தேன். மாடியேறி, " ஐயா பெரியவரே ! நீர் அபாயமானவன் என்று விரட்டிய எழுத்தாளனுக்கு இந்தத் தெருவிலே வேறொருவர் வீடு கொடுத்துக் குடியேற்றியிருக்கிறார், ஐயா ; ஜாக்கிரதையாக இருந்துகொள்ளும் என்று சொல்லிவிட்டு வரலாமா ?' எனத் தோன்றும்.

இந்தத் தோற்றத்தைச் செயலாகப் பரிணமிக்கச் செய்யும் சந்தர்ப்பம் ஒன்று ஒரு நாள் நிகழ்ந்தது. அன்று காரியாலயத்து விடுமுறை நாள். ஆனால், தபால் இலாகாவுக்கு விடுமுறை அல்ல. எங்கேயோ போய்விட்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண் டிருந்தபோது, டி ஸௌஸாவின் வீட்டு வாசலில் தபால்காரன் எதிர்ப்பட்டு, அரசாங்க முத்திரை தாங்கிய கடிதம் ஒன்றை என்னிடம் கொடுத்து விட்டுச் சென்றான்.

இந்திய அரசாங்கத்தின் ராணுவ இலாகாவால் போர் வீரர் களுக்கென்று நடத்தப்படும் " பௌஜி அக்பார் ' என்ற பல்வேறு பாஷைகளில் வெளியாகும் வாரப்பத்திரிகைக்குக் கதை வேண்டுமென்று கேட்டு முன்பு ஒரு வேண்டுகோள் வந்தது. அந்தப் பத்திரிகைக்கு ஒரு கதை அனுப்பிச் சமீபத்தில் அது பிரசுரமாயிற்று. அந்தக் கதையைப் படித்தவர் அனைவரும் தன்னைப் பாராட்டினர் என்றும், அவர்களுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கவே அக்கடிதம் எழுதப்பட்டதென்றும், அதுபோன்ற கதைகள் பொதுமக்களுக்கு மாத்திரமல்ல, உயிரை உலைக்

களத்தில் நிறுத்த வந்திருக்கும் போர்வீரர்களுக்கும் உணர்ச்சியையும் ஊக்கத்தையும் ஊட்டும் என்றும் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது.

கடிதத்தைப் படித்ததும், என் தலை நிமிர்ந்து உயர நோக்கிற்று. பெருமையால் அல்ல; டி ஸௌஸாவின் மூஞ்சியில் அடிக்க இதைவிட உயரிய சாதனம் யாது? விறுவிறு வென்று மாடியில் ஏறி, அவருடைய 'போர்ஷன்' வாயிலில் நின்று அறிவுப்பு மணியின் பித்தானை அமுக்கினேன்.

"வருகிறேன்" என்ற மென்மையான பெண் குரல் உள்ளேயிருந்து மிதந்து வந்தது. தொடர்ந்து, சுமார் இருபத்தைந்து வயதுடைய கொடி போன்ற மெல்லிய லாள் ஒருத்து கதவைத் திறந்தாள். அவள் உடுத்திருந்த முழுக் கறுப்பு 'பிராக்' என்னை ஒரு கணம் திடுக்கிட வைத்தது. கிறிஸ்தவர்கள், முக்கியமாகக் கோவாளிக் கிறிஸ்தவர்கள், வீட்டில் யாராவது சமீபத்தில் மரண மடைந்திருந்தால்தான் முழுக் கறுப்பு ஆடைகளை அணிவது வழக்கம். அதோடு அவள் முகத்தில் சொல் லொண்ணு விசனம் வேறு பளிச்சிட்டது. 'யார் இவள்? இந்த வீட்டில் என்ன இழவு வந்துவிட்டது? நாம் வந்த சமயம் சரியில்லையா?' என்பது போன்ற சிந்தனைகள் உடனே உள்ளத்தில் உதித்தாலும், கதாசிரியரின் தோரணையில் என் கண்கள் அந்த அழகிய இளநங்கையை ஒருபுறம் படம் பிடித்துக்கொண்டிருந்தன.

மெல்லிய தென்றல் வீசும்போது எழும் குளத்து அலைகளைப்போல, தன் 'பாப்' செய்த சிகையைச் சீவி விட்டிருந்தாள் அவள். அழகிய வெண்சங்கு போன்ற கழுத்தைச் சுற்றி, சிலுவைச் சின்னம் கோத்த கறுப்புக் கயிறு ஒன்று தொங்கிற்று. கடைந்தெடுத்த சந்தனக்

கட்டையைப் போன்ற கைகால்கள். உடல் சிறிது மெலிந்தே காணப்பட்டாலும், அங்கங்களின் பூரிப்பு அந்த மெலிவை மறைத்திருந்தது. பார்வையைப் பறிக்கும் பால் போன்ற இளம் பாதங்கள் தரையில் பாவாமல் பாவி நின்றன.. என்னைக் கண்டதும் பரந்த முகத்தில் முறுவல் மலர்ந்தாலும், கவர்ச்சி மிகுந்த கண்களிலே சோகம் ததும்பி நின்றது.

" குட் மார்னிங் !"

அவள் என்னை ஒரு தடவை மேலிருந்து கீழ்வரையில் பார்த்துவிட்டு, " குட்மார்னிங் ; யாரைப் பார்க்க வேண்டும் ?" என்று கேட்டாள்.

" மிஸ்டர் டி ஸௌஸாவை."

" நீங்கள் யார் ?"

" ராமன் என்ற 'அபாயகரமான எழுத்தாளன்' வந்திருப்பதாகச் சொல்லுங்கள்."

அவள் என்னை வியப்புடன் நோக்கினாள். என் பேச்சு அவளுக்குப் புதிராக இருந்திருக்க வேண்டும். மேலும் அந்த வீடு இருந்த சூழ்நிலைக்கு இந்தப் பதில் ஏற்றதல்லவே ! அவள் " எந்தப் பயங்கரமானவருக்கும் பயப்பட அவசியம் இல்லாத நிலையை மிஸ்டர் டி ஸௌஸா எட்டிவிட்டார். அவர் இறந்து இன்று பத்து நாட்களாகின்றன " என்றாள்.

" என்ன ! டி ஸௌஸா இறந்துவிட்டாரா ?" என்று பதறிக் கேட்டேன். அட பாவி ! உமது மட்டைக் கர்வத்தைக் குலைக்க வேண்டுமென்று வந்தேன் ; அதற்குள் தப்பித்துக்கொண்டு விட்டாயே !

" ஏன் ? ஏதாவது அவசர காரியமாக அவரைத் தேடி வந்தீர்களோ ?"

" அவசரம் ஒன்றும் இல்லை. சாதாரண விஷயம் "

" சொந்த விஷயமோ, வியாபார விஷயமோ எதுவானாலும் டி ஸௌஸாவின் காரியங்களை இனி நானே கவனிக்கவேண்டும்; அவருடைய ஒரே வாரிசு நான் தான். உள்ளே வாருங்களேன்; உட்கார்ந்து பேசலாம்.'

அந்தப் பெண்ணின் பேச்சு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அவள் எத்தனை அழகியாக இருந்தாளோ, அதிலும் அழகாக, பாவங்கள் வெளிப்படப் பேசினாள். அவளுடைய குரலில் கிளி கொஞ்சிற்று. நான் வந்த வேகம் டி ஸௌஸாவின் மரணச் செய்தியால் தடைப்பட்டு விட்டதெனினும், அந்த அழகியிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. மேலும், அவளிடம் பேச்சை வளர்த்தால், டி ஸௌஸா எப்படிப்பட்ட மனிதர், அவர் எழுத்தாளர்களை அபாயகரமானவர்கள் என்று முடிவு கட்டியதற்கு அடிப்படை யாது, என்பவற்றை அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிட்டுமல்லவா ? எனவே, அவளுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு வீட்டினுள் நடந்தேன். நடந்துகொண்டே சம்பாஷணைக்கு விதையாக, " நான் மிகவும் விசனிக்கிறேன், அம்மணி; டி ஸௌஸாவுக்கு என்ன வியாதி, இப்படி அவரைத் திடீரென விழுங்கிவிட ?" என்று கேட்டேன்.

" ரத்தக் கொதிப்பு, கொஞ்ச காலமாகவே அந்த நோய் அடிக்கடி வந்து கொண்டிருந்தது. கடைசியில் ஒரு நாள்......" அவள் மேலே பேச முடியாமல் துடித்த தன் உதடுகளைக் கைக்குட்டையால் அழுத்திக் கொண்டாள்.

" ரொம்பத் திடமான மனிதராக இருந்தாரே !"

"ஆமாம், திடம்! ஆள்தான் திடமாக இருந்தாரே தவிர, மனம் அடிக்கடி சலன மடைந்துவிடும். அதுவே அவருக்கு இந்த நோயை அளித்துவிட்டது."

"அது சரி; நீங்கள் யாரென்று தெரிந்து கொள்ள லாமோ?"

"என் பெயர் மேரி; டி ஸௌஸாவின் வளர்ப்புப் பெண் நான். அதிருக்கட்டும். நீங்கள் அவரைத் தேடி வந்த காரியத்தைச் சொல்லவில்லையே!"

"அதொன்றும் அவ்வளவு முக்கியமானதல்ல, அம்மணி."

"இல்லை; அதில் ஏதோ விசேஷமாக இருக்கக் கொண்டுதான், நீங்கள் அபாயகரமான மனிதன் வந்திருக் கிறன் என்று அறிவிக்கச் சொன்னீர்கள்."

"ஓ! அதுவா? அது டி ஸௌஸா எனக்கு உவந்து அளித்த பட்டம். இரண்டொரு மாதங்களுக்கு முன்பு, அவர் இந்த வீட்டில் ஒரு 'பிளாக்'கை எனக்கு வாடகைக்குக் கொடுப்பதாக வாக்களித்துவிட்டு, பின்பு நான் பணத்தோடு வந்தபோது, 'நீ எழுத்தாளன்— அபாயகரமான மனிதன்' ஆகவே உனக்கு வீடு தர முடியாது' என்று கூறிவிட்டார்."

"சரி, சரி; இப்பொழுது புரிந்துவிட்டது."

"என்ன புரிந்தது?"

"அவர் அளித்த பட்டம் நியாயமானதே என்பது."

நான் திடுக்கிட்டேன். "அப்படியானல், நீங்களும் எழுத்தாளர்களை அபாயகரமானவர்கள் என்றே கருது கிறீர்களா?"

"கிட்டத்தட்ட அப்படியேதான்."

"இது அபாண்டமான குற்றச்சாட்டு, அம்மணி. எழுத்தாளர்களைப் பற்றி டி ஸௌஸா கொண்டிருந்த முடிவு தவருனது என்பதை எடுத்துக் காட்டவே நான் இப்பொழுது வந்தேன். இதோ இந்தக் கடிதத்தை முதலில் படித்துப் பாருங்கள்; பார்த்துவிட்டுப் பிறகு நீங்களும் டி ஸௌஸாவும் ஏன் அத்தகைய தீர்மானத்துக்கு வந்தீர்கள் என்பதை எனக்குச் சற்று விளக்கு வீர்களா?"

அவள் பௌஜி அக்பாரிலிருந்து வந்த கடிதத்தைப் படித்துவிட்டு, பெருமூச்சுடன் என்னிடம் திருப்பித் தந்தாள்; பிறகு சொன்னுள்: "இவர் எழுதியிருப்பது சரிதான்; ஆனல் நாங்கள் இருவரும் இரு வெவ்வேறு அனுபவத்தின் பேரில் எழுத்தாளர்களை அபாயகரமான வர்கள் என்று தீர்மானித்திருக்கிறேம். என் வரையில் எழுத்தாளர்கள் பிறர் உள்ளங்களில் காதலை வளர்த்து விட்டுத் தாங்கள் அதைக் காப்பாற்ற முடியாதவர்களாக இருக்கிருர்கள் என்பது குறை. டி ஸௌஸாவோ, எழுத்தாளர்கள் 'காமா சோமா' என்று கதைகளை எழுதி இளம் உள்ளங்களில் இயற்கையாகப் படிந்துள்ள பாசத்தை மதிப்பற்றதாக்கி விடுகிருர்கள் என்று குறைப் பட்டவர்."

"ஒருவர் எழுதிய கதையால், ஓர் உள்ளத்தில் உறைந்திருந்த பாசம் உருகி ஓடிவிடுமா? அதிசயமா யிருக்கிறதே, நீங்கள் சொல்வது!"

"அதிசயந்தான். ஏனென்ருல் டி ஸௌஸா பாசத்துக்கும் காதலுக்கும் முடிபோடப் பார்த்தார்."

"அப்படியென்ருல்?"

"அதுதான் கதை; அந்தக் கதையிலே நான் ஏன் எழுத்தாளர்களைக் குறை கூறுகிறேன் என்பதும் வருகிறது. சொல்கிறேன். கேளுங்கள்" என்று நாற்காலியில் உட்கார்ந்து ஆரம்பித்தாள் மேரி.

## 7

"டி. ஸௌஸா உழைப்பால் உயர்ந்தவர். முப்பது ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு சாதாரணக் குமாஸ்தாவாகக் குடியேறியவர், இன்று பெரியதொரு கம்பெனிக்குச் சொந்தக்காரராயிருப்பதற்குக் காரணம் அவருடைய சலியாத உழைப்புத்தான். அந்த உழைப்பே, பெரிய நிலையை அடையுமட்டும் அவரைக் கல்யாண நினைவே யின்றி இருக்கச் செய்தது. தமது முப்பத்தாறுவது வயசில் அவர் ஸ்ரீமதி டி ஸௌஸாவைக் கைப்பிடித்தார். ஆனால், துரதிருஷ்டவசமாக அவளுடன் இரண்டொருவருஷங்கள் கூட இன்பமாக வாழவில்லை. இரண்டு வருஷ இல் வாழ்வில், ஐந்தாறு கர்ப்பச் சிதைவுகள் ஏற்பட்டு, உடல் பலமிழந்து, மனைவியாக இருக்க லாயக்கற்றவளாகி விட்டாள். ஸ்ரீமதி டி ஸௌஸா. இனிக் கருத் தரித்தால் அதுவே அவள் வாழ்வின் இறுதியாகிவிடும் என டாக்டர்கள் எச்சரித்துவிட்டமையால், ஒரே வீட்டில் வாழ்ந்தும், அவர்கள் சகோதர பாவத்திலே பழக நேர்ந்தது.

"ஸ்ரீமதி டி ஸௌஸா கணவனை வேறு கல்யாணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினாள். டி ஸௌஸாவுக்கும் உள்ளூற அந்த ஆசை இருந்திருக்கலாம்; ஆனால் வயசாகிவிட்டதும், தாம் தொந்தியும் தொப்பையுமாகக் குரூபியாக இருந்ததும், இவையெல்லாவற்றையும் விட

ஸ்ரீமதி டி ஸௌஸாவிடம் கொண்டிருந்த பேரன்புக்குப் பங்கம் விளைந்துவிடுமோ என்ற அச்சமும் சேர்ந்து அவரை அந்தக் கோரிக்கைக்கு இணங்கவைக்கவில்லை. மனைவி குழந்தையில்லாக் குறையால் கவலைப்படுகிருள் என்பதை உணர்ந்த அவர், கோவா கதோலிக் கிறிஸ்தவ அநாதை விடுதியில் இருந்த குழந்தைகளில் அழகியவளாக ஒருத்தியைத் தேர்ந்தெடுத்து வளர்க்கக் கொண்டு வந்தார். அந்த அநாதையிலும் துர்ப்பாக்கியம் செய்த குழந்தை மேரி நான்தான்.

" அநாதை விடுதியில் ஆயிரத்தில் ஒன்ருக வாழாமல்" பணக்காரச் சீமான் ஒருவரின் அருமைப் புதல்வியாக வாழக் கிடைத்த என்னைப் பாக்கியவதி என்றல்லவா சொல்லவேண்டும் என நீங்கள் நினைக்கலாம். ஆனல், பெண்ணுக்குப் பணமும் பாசமும் மாத்திரமே வாழ்வை நிறைத்துவிடுவதில்லை. எளிமையில் புரண்டாலும் மனம் விரும்பும் கணவனுடன் வாழ்வதையே அவள் வரவேற் கிருள். என்னைத் துர்ப்பாக்கியம் சூழ்ந்தது இப்போது தான்.

"நான் ஹைஸ்கூலில் அடியெடுத்து வைத்த காலந் தொட்டு ஆங்கிலப் பத்திரிகைகள் கதைப் புத்தகங்கள் இவற்றை விடாது படிப்பேன். மலரும் பருவத்து மத மதப்பு ஓடிக்கொண்டிருந்த அக்காலத்தில் அழகிய காதல் கதைகளே என் கருத்தைக் கவரும். அதிலும், ஏனே தெரியாது, ஹோமர் லோபோ என்ற எழுத்தாளரின் கதைகள் என்ருல், என்னையே மறந்து அவற்றில் லயித்து விடுவேன்."

" ஹோமர் லோபோ என்று பம்பாயிலிருந்து ஒருவர் கதைகள் எழுதி வருகிருரே, அவரையா குறிப்பிடு

கிறீர்கள் ?'' என்று நான் மேரியை இடைமறித்துக் கேட்டேன்.

" ஆம் ; அவரேதான். அவரை நீங்கள் அறிவீர் களா ?''

" நன்முக அறிவேன். அவரும் நானும் ஒரே காரி யாலயத்தில் .சில காலம் ஒன்முக வேலை பார்த்தவர்கள். தவிரவும், உங்கள் அப்பாவிடம் வீடு வாங்குவதற்குப் பணம் தந்தவரும், பின்பு இவ்வீடு கிடையாமற் போன போது, இதே தெருவில் வேருெரு வீட்டை எனக்குக் கிடைக்கச் செய்தவரும் அவரேதான்.''

" ஓ ! அப்படியா !'' என்று மேரி லேசாகச் சிரித்துக் கொண்டாள். " ஆகவே, உங்கள் நண்பரைப் பற்றிக் கூறப்போகும் கதையில் அவர் பங்கில் எவ்வளவு தவறு இருந்தாலும் அவற்றைத் தவறே அல்ல என்று சாதித்து விடுவீர்கள்.''

" நான் ஒன்றும் அத்தனை நியாய விரோதமானவன் அல்ல, அம்மணி.''

" பார்க்கலாமே ; கதையை மேலே கேளுங்கள் :

ஹோமரின் கதைகளில் மயங்கிய நான் கொஞ்சங் கொஞ்சமாக அவரிடமும் உள்ளத்தைப் பறிகொடுக்க ஆரம்பித்தேன். அவரை நேரில் சந்திக்கும் ஆர்வம் எழுந்தது. விலாசத்தை விசாரித்துக்கொண்டு ஒரு நாள் வீடு தேடிச் சென்றேன். ஆளைப் பார்த்ததும், என்காதல் தகுந்த இடத்தைத்தான் சார்ந்திருக்கிறது என்றமுடிவுக்கு வந்துவிட்டேன்.

" பிறகு, எங்கள் பழக்கம் முதிர்ந்தது. அடிக்கடி சந்தித்தோம் ; உல்லாசப் பிரயாணம், விருந்து, படக்காட்சி என்று ஒன்முய் அலைந்தோம். காதல் வளர்ந்து கலைபடா

நிலையை அடைந்தது. இருவருக்கும் திருமண ஒப்பந்தச் சடங்கு (*Engagement*) ஆகவேண்டியதுதான் பாக்கி. அதற்கு, என் ஹைஸ்கூல் படிப்பு முடியட்டும் என்று காத்திருந்தோம்.

"படிப்பு முடிந்தது. டிஸௌஸாவிடம் எங்கள் காதலை அறிவிக்க நினைத்திருந்தபோது அவரே ஒருநாள் என்னை அழைத்து, 'மேரி, நானும் உன் தாயும் தக்க வயசில் மணம் செய்துகொள்ளாது இல்லற இன்பத்தைப் பறிகொடுத்து விட்டோம். என்றால் வளர்க்கப்படும் நீயாவது இளம் பிராயத்தில் இன்பமாக வாழ வேண்டும். பதினாறு வயசு கூட ஆகவில்லை ! என்றாலும், வனப்பும் வளர்ச்சியும் உன்னைக் குடும்ப வாழ்வுக்கு ஏற்றவளாக்கி விட்டன. ஆகவே விரைவில் உன் திருமணத்தை முடித்துவிட வேண்டுமென உத்தேசித்திருக்கிறேன், உன் விருப்பம் என்ன அம்மா ?" என்று கேட்டார்.

"அதற்கு என்ன அப்பா, செய்தால் போயிற்று" என்றேன் நான்.

"அப்படி மெதுவாகக் கூறிவிடாதே, மேரி ; உன்னை வளர்த்தவள் நிலை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. கண் மூடுமுன்பு நீ கணவனுடன் களித்திருப்பதைக் காண அவள் ஆசை கொள்கிறாள்."

"அந்த ஆசையை நிறைவேற்றி விடுவோம், அப்பா !"

'வெறுமனே சொன்னால் போதுமா அம்மா ? உன் மனம் யாரிடமாவது லயித்திருக்கிறதென்றால் அவன் தகுதிகளை ஆராய்ந்து அறிந்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் ; அல்லது நாங்களே உனக்கு ஏற்ற வரன் ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எதுவானாலும் உடனடியாக முடிக்க வண்டும். சொல், என் அன்புள்ள மேரி,

உன் வாலிப நண்பர்கள் யாரிடமாவது உனக்கு விருப்பம் ஏற்பட்டிருக்கிறதா ?'

" ஆம், அப்பா ; அன்ெருரு நாள் ஆங்கிலப் பத்திரிகைகளில் கதை எழுதிப் புகழ் எய்தியுள்ள என் நண்பர் என்று ஹோமர் லோபோ என்பவரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தேன் அல்லவா ? அவரை நான் காதலிக்கிறேன்."

'அப்படியா ? சந்தோஷம் ; பையன் கண்ணுக்கு அழகாகத்தான் இருக்கிருன். சொத்து சொம்பு ஏதாவது இருக்கிறதா ? எழுதிப் பிழைப்பதையன்றி வேறு ஏதாவது உத்தியோகம் வகிக்கிருஞ ?'

'உத்தியோகம் ஒன்றும் இல்லை, அப்பா. சொத்து என்று சொல்லும் வகையில் பிரமாதமாக எதுவும் இல்லையென அறிகிறேன். கோவாவில் ஒரே ஒரு சொந்த வீடுதான் இருக்கிறதென்று சொல்லியிருக்கிருர். அவருக்குத் தாய் தந்தை யாரும் இல்லை ; தனி மனிதர் ; எனவே, எழுத்துத் தொழிலில் கிடைக்கும் வருவாய்க்குள் ராஜாவாக வாழ்கிருர்.'

" என் வளர்ப்புத் தந்தை சுவையற்று உதட்டைப் பிதுக்கிஞர். 'சொத்தும் கிடையாது ; வேலையும் இல்லை; வெறும் எழுத்துத் தொழிலையே ஜீவனமாகக் கொண்ட ஒருவனை நம்பி உன்னை எப்படி ஒப்படைப்பது, மேரி ? நீயே சற்று ஆலோசித்துப் பார் ; இன்று தனி மனிதனுக இருப்பதால் அவன் ராஜாவாக வாழலாம். நாளைக்கு நீயும் சேர்ந்து குடும்பம் பெருத்தால், அவனுடைய எழுத்துத் தொழிலில் வரும் ஊதியம் அதற்கேற்பப் பெருகிவிடுமா ? உண்மையில் குடும்பக் கவலை, மக்களின் பிடுங்கல் இவை தோன்றும்போது மனிதனின் கற்பனு சக்தி வற்றி, எழுதுவது குறைந்து, வரும்படி வாடி விடுமே, அம்மா.

'இந்த என் சொத்துக்கள் இல்லையா?' என்று நீ நினைக்கலாம். ஆனால், பிறர் சொத்தை நம்பி, குடும்பம் நடத்த முன்வரும் வாலிபனிடம் உன்னை ஒப்படைக்க எனக்கு மனம் இல்லை. தானே சம்பாதிப்பவனுக்குத்தான் பணத்தின் அருமை தெரியும். வேறொருவர் பணம் என்னும்போது எவருக்குமே அலட்சியம் ஏற்பட்டு விடுகிறது. இருப்பதை மனம் போனபடி செலவு செய்து விட்டு உன்னை நடுச் சந்தியில் நிறுத்திவிடுவான். மேரி, உன் காதலுக்குக் குறுக்கணை போட வேண்டுமென்பது என் நோக்கம் அல்ல. நீ ஹோமரை மணந்து கொள். ஆனால் மணமாகு முன்பு அவனை நிலையான உத்தி யோகத்தைத் தேடிகொள்ளச் சொல். இதற்காக வேண்டு மானால் உன் கல்யாணப் பிரச்சனையை இரண்டொரு மாதங்கள் தள்ளிப் போடுகிறேன்.'

"டி ஸௌஸாவின் கூற்றில் நியாயம் இருப்பதை நான் உணர்ந்து கொண்டேன். அவருடைய ஆபீசிலே ஹோமருக்கு வேலை போட்டுக் கொடுக்கலாகாதா என்று கேட்டிருக்கலாம். ஆனால், தமது கையை எதிர்பாராமல் குடும்பம் நடத்தத் தகுதியுள்ளவனுக்கே என்னைக் கொடுப்பேன் என்று சொல்லும் அவர், தம் கீழே வேலை கேட்டால், 'இது மாத்திரம் என் கையை எதிர்பார்ப்ப தில்லையா?' என்று திருப்பிக் கொண்டால் என்ன சொல்வதென்று அப்படிக் கேட்கவில்லை.

"ஹோமரிடம் விஷயத்தைச் சொன்னபோது, அவர் தந்த பதில் என்னைத் திடுக்கிட வைத்தது: 'நீ பணக்காரி, மேரி; உன்னிடம் நான் காதல் கொண்டதே தவறு' என்றார்.

'நம்முடைய நலனை உத்தேசித்துத்தானே அப்பா இப்படிச் சொல்லுகிறார்?'

'நான் பிறர் கையை எதிர்பார்க்கவும் இல்லை; பிறரிடம் கைகட்டிச் சேவகம் புரியவும் விரும்பவில்லை. சுயேச்சையை விரும்பும் பிரகிருதி நான். அந்தச் சுயேச்சைக்குத் தடையாக நிற்கும் எதையும் ஏற்கமாட்டேன். நம் காதலுக்கு இன்றோடு சீட்டுக் கிழித்துக் விடுவோம்; வெறும் நண்பர்களாகப் பழகி வருவோம்' என்றார் அவர், இறுதியாக.

" எப்படி இருக்கிறது பார்த்தீர்களா, மிஸ்டர் ராமன், காதற் கதைகளை வரைந்து இளம் உள்ளங்களில் கிளர்ச்சியை உண்டு பண்ணும் உங்கள் ஹோமர், தம் வாழ்வில் எதிர்ப்பட்ட காதலை மதிப்பிட்ட அளவு? ஆனாலும் அவரை நான் அப்படியே விட்டுவிடவில்லை. கெஞ்சாத வண்ணம் கெஞ்சி எப்படியாவது வேலைக்கு முயலும்படி திருப்பிவிட்டேன்.

" ஆனாலும் தானாக ஓடும் குதிரைக்கும், தட்டி ஓட்டி வேண்டிய குதிரைக்கும் வேகத்தில் வித்தியாசம் இருப்பதில்லையா? அந்தக் காலத்தில் வேலை கிடைப்பது ஒன்றும் கஷ்டமல்ல; இருந்தாலும், நான் சந்தித்துக் கேட்ட பொழுதெல்லாம், ' ஒன்றும் கிடைக்கவில்லையே மேரி!' என்றுதான் ஹோமர் கையை விரித்தார்.

" எனக்கே அவர் காதலில் நம்பிக்கை போய்விட்டது. அப்பா கொடுத்த கெடுத் தாண்டி மேலும் இரண்டு மாதங்கள் சென்ற பின்னரும், ஹோமர் ஒரு வேலையைத் தேடிக் கொள்ளவில்லை என்று ஆனபோது அவருடைய திறமையில் எனக்கு அவநம்பிக்கை ஏற்பட்டது.

" கடைசியில் டி ஸௌஸாவின் நெருக்கு தலைப் பொறுக்க மாட்டாமலும், என்னைக் கண்ணென வளர்த்தவள் மரணாவஸ்தையில் செய்த வேண்டுகோளை நிராகரிக்க முடியாமலும், அப்பா பார்த்துத் தீர்மானித்த

வியாபாரக் கப்பல் ஒன்றின் காம்டனுன லாஸரஸ் என்பவரிடம் என் வாழ்வை ஒப்படைத்தேன். ஸ்ரீமதி டி ஸெளஸா இதற்காகவே காத்திருந்தவள் போல, எங்கள் கல்யாணம் முடிந்த சில நாட்களில் கண்களை மூடினுள்.

## 8

"ஸ்ரீமதி லாஸரெஸ் ஆகிக் கடல் வாழ்க்கையை மேற்கொண்டபோது, அவ்வாழ்வு ஹோமருடன் கிட்ட இருந்த வாழ்வுக்கு இணையாகவோ, மேலாகவோ இருக்குமென்று நான் நினைக்கவில்லை. இருந்தாலும் பருவத்தின் புதுமை மணம் அங்கே விகசிக்கும், என் வரையில் அது அத்தனை ஆனந்தமாக அமையாவிட்டாலும், லாஸரெஸ் என்னை மனைவியாகக் கொண்டதற்காகப் பெருமையே அடைவார் என நம்பினேன்.

"அந்த நம்பிக்கையிலே இடி விழுந்தது. லாஸரெஸுக்குத் தமது வியாபாரக் கப்பல் தங்கும் துறைமுகங்களில் எல்லாம் சட்டத்துக்குப் புறம்பான மனைவிகள் பலர் இருந்தனர். எனவே, அவர்களுள் ஒருத்தியாக அவர் என்னைக் கருதியதிலும் வியப்பில்லை. அவருடைய இந்த முறையற்ற போக்கைக் கண்டிக்க நான் மேற்கொண்ட முயற்சிகள் வியர்த்தமாயின. 'அவருக்குக் காதல் என்பது கடைப் பொருள். எங்கெங்கே கைக்கு எட்டும்படியாக அகப்படுகிறதோ அங்கங்கெல்லாம் அதை அடைய வேண்டும்' என்பதை அறிந்தபோது அந்த விவாக பந்தம் எனக்குக் கசந்துவிட்டது. முடிவு என்ன ?

"அடுத்த தடவை நாங்கள் கடற் பிரயாணத்தை முடித்துக்கொண்டு பம்பாய் திரும்பியதுமே எங்கள்

வாழ்க்கைப் பிரயாணமும் முடிந்துவிட்டது. நடந்ததை அறிந்த என் வளர்ப்புத் தந்தை, விவாக ரத்துக்கு மனுச் செய்துகொண்ட என்னைத் தடை செய்யவில்லை; எப்படிச் செய்ய முடியும் ?

" மீண்டும் சுதந்தரக் கன்னியானதும் கட்டவிழ்ந்த என் மனம் அந்தச் சுதந்தர வாலிபர் ஹோமரிடந்தான் பாய்ந்தது. பம்பாய் வந்து சில நாட்களான பின்னர், ஒரு நாள் அவுரைத் தேடிச் சென்றேன்.

" சௌக்கியமா, ஸ்ரீமதி லாஸரெஸ் ? பம்பாய்க்கு எப்போது திரும்பினீர்கள் ?'' என்று என்னைக் கண்டு சிறிதுகூடச் சலனமடையாது கேட்டார் அவர்.

" நான் இப்பொழுது ஸ்ரீமதி லாஸரெஸ் அல்ல; பழைய மேரி ஆகிவிட்டேன் '' என்றேன் அழாக் குறையாக.

" ஸ்ரீமதி லாஸரெஸாயிருந்தால் என்ன ? மிஸ் மேரியாக இருந்தால் என்ன ? எனக்கு நீங்கள் என்றும் சிநேகிதிதான்.''

" இன்றுகூடப் பழைய மனிதராகவே இருக்கிறீர் களே ! என்னுடைய விவாக பந்தம் முறிந்தது உங்கள் மனத்தில் எவ்விதச் சலனத்தையும் எழுப்பவில்லையா ?''

" பழைய மனிதனல்ல, மேரி ; நான் மாறிவிட்டேன். நீ போட்ட தூண்டுகோலால் இப்பொழுது ஒரு காரியால யத்தில் வேலைகூடப் பார்த்து வருகிறேன். இருந்தாலும் என்ன வாழ்வு ? சுவையற்ற வாழ்வு !''

" ஆம் ; சுவையற்றுத்தான் இருக்கும் ; சுவை ஊட்ட வேண்டிய நான் இல்லாதபோது அது எப்படி உங்களுக்கு ருசிக்கும் ?''

“அதெல்லாம் ஒன்றுமில்லை, மேரி; பிறரிடம் கைகட்டி நிற்பதென்றாலே எனக்குச் சற்றும் பிடிக்க வில்லை. இந்த வேலைக்கு எப்பொழுது தலை முழுகலாம் என்றுதான் சமயம் பார்த்திருக்கிறேன்.”

“என் பிரிய ஹோமர், தயை செய்து அவசரப்பட்டு விடாதீர்கள்; என் தூண்டுகோலே உங்களை வேலை யேற்கச் செய்தது என்று சொன்னீர்கள். அதைக் கொஞ்ச காலம் காப்பாற்றி வாருங்கள். அப்பாவிடம் நான் இந்த விவரத்தைக் கூறி நம்முடைய கல்யாணத் துக்கு ஏற்பாடு செய்கிறேன்.”

“உனக்கு ஏன் வீண் சிரமம், மேரி? உண்மையில் உன் அப்பாவுக்கு உன்னை என்னிடம் ஒப்படைக்க மனமில்லை. வேண்டுமானாலும் பார். புதிதாக வேறொரு குறையைக் காட்டி, நான் உன்னை அடையத் தகுதி யற்றவன் என்பார்.”

“ஹோமர் சொன்னபடியேதான் ஆயிற்று, மிஸ்டர் ராமன். என் மனநிலையைச் சொன்னபோது அப்பா கூறினார்: அவன் பொறுப்பற்ற பையன், மேரி. எப்பொழுது உனக்காகத்தான் வேலையில் அமர்ந்திருக் கிறேன் என்று சொல்கிறானே, அப்பொழுது உன்னைக் கைப்பிடித்த பிறகு அந்த வேலையை உதறிவிட மாட்டான் என்பது என்ன நிச்சயம்? அட, வேலைதான் போனால் போகிறதென்றால், தங்குவதற்கு ஒரு நிழலாவது பணக்காரப் பெண்ணைக் கைப்பிடிக்க முன்வரும் ஒரு வனுக்குச் சொந்தமாக வேண்டாமா?”

“அப்பாவின் வாதம் விதண்டாவாதமாகவே எனக் குப் பட்டது. இருந்தாலும் பிடிவாத சுபாவமுடைய அவரிடம் வாதாடுவதில் பயனில்லை என்று ஹோமரிடம் வந்து நடந்ததைச் சொல்லி, ‘உங்கள் காவோ வீட்டை

விற்றுப் பம்பாயிலே சிறிதாக ஒரு வீடு வாங்கிவிடுங்கள் " என்றேன்.

" பார்த்தாயா ? நான் ஊகித்தபடியே ஆகிவிட்டது. சரி; இப்பொழுது பம்பாயில் சொந்த வீடு வாங்கி விட்டால் முழு மனத்தோடு உன்னை எனக்குத் தந்து விடுவாரா ?"

" அதற்குமேல் எது சொன்னாலும் நான் பொருட் படுத்தமாட்டேன், ஹோமர். தயை செய்து வீட்டுக்கு வழி பாருங்கள்."

" சரி, அதையுந்தான் பார்ப்போமே !"

" மறு மாதத்தில் வீடு வாங்கிய பத்திரத்துடன் ஹோமர் என்னைச் சந்தித்தார். 'கொண்டுபோய் உன் அப்பாவிடம் காட்டிச் சம்மதம் பெற்று வா, மேரி ; இந்த வீட்டுக்குக்கூட இன்னும் முழுப் பணமும் கொடுக்க வில்லை. காரியாலய நண்பர் ஒருவர் மூவாயிரம் ரூபாய்க்கு என்னை நம்பி வீட்டைக் கிரயப் பத்திரம் செய்துகொடுத் திருக்கிறார்' என்று உள்ளது உள்ளபடியே என்னிடம் கூறினார்.

" 'அந்த மகராஜன் நன்றாக வாழட்டும். காலமும் பணமும் பிரித்துவிட்ட காதலரைச் சேர்த்து வைத்த புண்ணியம் அவரைச் சாரட்டும். நீங்கள் கவலைப்படா தீர்கள். ஹோமர் ; நம் விவாகம் முடிந்ததும் உங்கள் நண்பரின் தொகையைக் கட்டிவிட ஏற்பாடு செய் கிறேன்' என்று அவருக்குத் தைரியம் சொல்லிவிட்டுச் சந்தோஷத்துடன் டி ஸௌஸாவிடம் ஓடினேன்.

" 'இதோ அப்பா ; ஹோமர் சொந்த வீடும் வாங்கி விட்டார்' என்று பத்திரத்தை அவரிடம் நீட்டினேன். அவர் அதைப் பிரித்துக்கூடப் பார்க்காமல் அலட்சியமாக

மேஜைமீது வீசினர். நாற்காலியில் சாய்ந்து வானத்தை நோக்கிச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

" இன்னும் என்ன ஆலோசனை, அப்பா ?"

" ஒன்றும் இல்லை, மேரி; எப்படி உன்னை விட்டுப் பிரிந்திருப்பது என்று ஆலோசிக்கிறேன்."

" முன்பு, ஒரு வருஷ காலம் இருக்கவில்லையா ? மேலும் ஹோமருக்குப் பம்பாயைவிட்டு எங்கும் போய் விடும் உத்தேசம் இல்லை."

" ம்......" என்று அவர் தாடையில் விரல்களை ஊன்றிக்கொண்டு தயங்கினர்.

" சம்மதம் கொடுங்கள், அப்பா."

டி ஸௌஸா நிமிர்ந்து உட்கார்ந்தார். ஏதோ முடிவுக்கு வந்துவிட்டவர் போலச் சொன்னர் : " என் மனத்தில் சில நாட்களாக ஓர் ஆவல் தலைதூக்கி நிற்கிறது."

" நான் என்னவோ கேட்கிறேன்; நீங்கள் எதையோ பேசுகிறீர்களே, அப்பா !"

" இதோ பார், என்னை அப்பா, அப்பா என்று இனி அழையாதே ! நான் என்ன, உன்னைப் பெற்ற தந்தையா?"

" ஐயோ இதென்ன நீங்கள் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள் ? பெற்றவன்தான் தந்தையா ? வளர்த்த உங்களுக்கு அந்த உறவை அடைய உரிமையில்லையா? அதிருக்கட்டும் ; இப்பொழுது எதற்கு இந்தப் பேச்செல்லாம் ?"

" இல்லை மேரி ; உன்னை அந்தச் சோம்பேறி ஹோமருக்குக் கொடுக்கமாட்டேன். வேறு எவருக்குமே தர முடியாது. உன்னை நானே......"

'அப்பா !' என்று அலறிக் கீழே சாய்ந்தேன் நான்.

" அவர் ஓடி வந்து என்னைத் தூக்கினார். " என்னைத் தொடாதீர்கள் ; அந்தப் பாவ நினைவோடு என் உடலைத் தீண்டாதீர்கள்" என்று கதறி அழுதேன்.

" அவரும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டார். "என் மனத்தை எவ்வளவோ கட்டுப்படுத்திப் பார்த்தேன், மேரி. அதன் சலனத்தை அடக்க முடியவில்லை. மேரி, என் வாழ்வை ஒருமுறை அடியிலிருந்து அலசிப் பார். அதைத் துளி இன்பமாவது தொட்டுச் சென்றிருக்கிறதா என்பதைக் கவனி. நாற்பது வயசு வரையில் பிரம்மச்சாரியாக இருந்தேன். பிறகு ஒருத்தியை மணந்தேன். மண வாழ்வின் ஆனந்தத்தைச் சரியாக நுகரு முன்பே அவள் உதவாக்கரையானாள். அவள் இருக்க வேறொருத்தியைக் கைப்பிடிக்க மனமில்லாமல் நாட்களைத் தள்ளினேன். இன்று அவள் இல்லை. நான் யாரையும் மணக்கலாம். ஆனால் என் வயசென்ன ? மூப்பின் திரை முகத்தில் படிந்துள்ள நான் எந்தக் கன்னியிடம் போய், 'என்னை மணந்து கொள்ளுகிறாயா ?' என்று கேட்க முடியும் ? அப்படியே எவளாவது இணங்கி வந்தாலும், அந்த இணக்கம் என்னிடமுள்ள சொத்துக்களுக்காக இருக்குமேயன்றி, முழு மனத்துடன் கொண்ட காதலாக இருக்குமா ? உனக்கு நான் தந்தையல்ல. என் ரத்தம் உன் உடலில் ஓடவில்லை. வெறுமனே வளர்த்தேன் ; அவ்வளவுதான். தூக்கி வளர்த்த மாமனை மருமகள் மணப்பதில்லையா ?"

"என்றால் அவர் பேச்சுக்களைப் பொறுக்க முடியவில்லை, மிஸ்டர் ராமன். 'என் உள்ளத்திலும் ஒருவர் குடிகொண்டிருக்கிறார் என்பது உங்கள் நினைவில் இருக்கட்டும்' என்று கத்தினேன்."

" இருந்தாலும் நீ எனக்குத் துரோகம் செய்யமாட்டாய் என்ற நம்பிக்கை இருக்கிறது மேரி."

" துரோகம் செய்ய மாட்டேன் என்றாலும் நீங்கள் எதிர்பார்க்கும் மனமொத்த வாழ்வு கிட்டுமா ?"

" கிட்டும். மேரி ; நிச்சயமாகக் கிட்டும். நான் உனக்குச் செய்துள்ள உதவிகளை நினைத்துப் பார்த்தாயானால், உன் உள்ளத்தில் உறைந்திருப்பவன் பறந்து விடுவான்."

" என் மனத்தைத் திடப்படுத்திக்கொள்ள அவகாசம் கொடுங்கள், அப்பா !" என்று அலுத்துப்போய்க் கூறினேன், இறுதியாக.

" வேண்டிய அவகாசம் எடுத்துக்கொள். ஆனால், இந்தக் கிழவனை இறுதிக் காலத்தில் மன நோயுடன் மாத்திரம் சாகடித்துவிடாதே."

## 9

" மிஸ்டர் ராமன், கதை சென்றிருக்கும் கோணத்தைக் கவனித்தீர்களா ? சந்தர்ப்பங்கள் எனக்கு எப்படி விலங்கிட்டு விட்டன என்பதைப் பார்த்தீர்களா ? டி ஸௌஸாவின் வாதத்தில் பலம் இருந்தது. என்னதான் 'கடமை—கடமை' என்று தேற்றிக்கொண்டாலும், என் மனம் வலுவடையவில்லையே !

" ஒரு வாரத்துக்குப் பின்னர் ஹோமர் ஒரு நாள் என்னைத் தேடி வீட்டுக்கே வந்துவிட்டார். " என்ன ஆயிற்று, மேரி ? உன்னை என் கண்ணிலே காணவில்லை?" என்று கேலியாகச் சிரித்துக்கொண்டே கேட்டார்.

" நடந்ததை அவரிடம் சுருக்கமாகக் கூறி முடித்தேன். 'என் அன்புள்ள ஹோமர் ; கடமை எனக்கு

விலங்கிட்டு விட்டது. அதைத் தகர்க்கும் சக்தி உங்கள் காதலுக்குத்தான் இருக்கிறது. புறப்படுங்கள்; நாம், எங்கேயாவது சென்று எளிய வாழ்வு வாழலாம் என்றேன்.

" ஐயோ ! அது பாவம், மேரி !"

" எது பாவம்; பெற்றவருக்கு ஒப்பானவரை மணப்பதா ? அல்லது அதைத் தவிர்க்க ஓடி மறைவதா ?"

" வேண்டாம், மேரி ; உங்கள் உறவில் குறுக்கிட எனக்கு உரிமை இல்லை."

" நீங்கள் கோழை ; காதல் உங்கள் வரையில் பேச்சுப் பொருள்தான் " என்று இரைந்தேன்.

" உன் ஊகம் தவறு, மேரி ; என் காதல் பவித்திர மானது. அது எப்பொழுதும் உன்னைச் சார்ந்ததோ, அப்பொழுதே சிரஞ்சீவித்தன்மையும் பெற்றுவிட்டது. நீ என் மனைவியாக இருந்தாலும், பிறன் மனையாளாக வாழ்ந்தாலும், அது அழியாது. என்றைக்கு நீ எவ்விதத் தளைகளுமின்றி என்னை வந்தடைந்தாலும், அந்த என் உள்ளம் புது மணத்துடன் ஏற்றுக் கொள்ளும். எனவே இப்போதைக்கு உன்னை வளர்த்தவரின் வயசு காலத்து ஆவலைப் பங்கப்படுத்தாதே. நான் போய்வருகிறேன், மேரி !"

" ஹோமர் ! ஹோமர் !" என்று கூவினேன் நான். அவர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

" காதலை ஊதி ஊதி எரிய விட்டு, இப்படி அதன் மீது நீரைக் கொட்டிவிட்டு அவர் திரும்பிப் பாராது போனது நியாயந்தானா ? சொல்லுங்கள், மிஸ்டர் ராமன் ; ஏன் பேசாதிருக்கிறீர் ?"

"உங்கள் கதை என்னை ஒரே திகைப்பிலும் வியப்பிலும் மூழ்கடித்து விட்டது, அம்மணி. பிறகு என்ன நடந்தது, சொல்லுங்கள்" என்றேன்.

"மேலே என்ன இருக்கிறது சொல்ல? எவ்விதச் சமாதானமும் என் மனத்தை டி ஸௌஸாவின் கோரிக்கைக்கு உடம்படச் செய்ய முடியவில்லை. ஹோமர் கடைசியாக என்னைச் சந்தித்துப் போனது எப்படியோ அவருக்குத் தெரிந்துவிட்டது. அது முதல் என்னைக் கண்காணிக்க வேறு ஆரம்பித்து விட்டார். 'நீ வீட்டில் தனியே இருக்க வேண்டாம்; ஆபீஸுக்கு வந்து ஏதாவது வேலை செய்துகொண்டு இரேன்' என்றார் ஒரு சமயம். 'சரி' என்று ஆபீஸில் டெலிபோன் பெண்ணாக வேலை செய்து வந்தேன். 'சினிமாவுக்கு வா,' 'பார்ட்டிகளுக்கு வா,' என்றெல்லாம் என்னை அழைத்துச் சென்று உற்சாக மூட்டப் பார்த்தார். ஆனால், இதனாலெல்லாம் ஓர் பெண்ணின் தந்தைப் பாசம் காதலாக மாறிவிடுமா?

"'அந்தப் படுபாவி எழுத்தாளன்தான் என் ஆசையில் மண்ணடித்து விட்டான். அவன் ஒருவன் குறுக்கிட்டிரா விட்டால், மேரி, உன் மனம் இத்தனை கல்லாகியிராது' என்று அடிக்கொரு தடவை புலம்புவார்.

"என் வாய் கல்லாய் அடைத்துக்கொண்டு விடும் இந்தப் பேச்சுக்கள் எழும்பொழுது. ஆம்; பேசி, வாதாடிப் பயன்?"

"கடைசியில் டி ஸௌஸாவின் ஏக்கம் அவரை ரத்தக் கொதிப்பு அடையச் செய்தது. வைத்தியம் செய்து கொள்ள அறவே மறுத்து விட்டார். நோய் அடிக்கடி தோன்றி, சென்ற வாரத்தில் அவரை அள்ளிக்கொண்டு போயிற்று.

"பாவப் படுகுழியில் விழாது தப்பிவிட்டேன். என் ஹோமர், சொன்ன சொற்படி எனக்காக இன்னும் காத்திருப்பாரா ?

"சொல்லுங்கள், உங்கள் நண்பரைப் பற்றி சமீப காலச் செய்திகள் உங்களுக்குத் தெரிந்திருக்கலாமே."

எனக்கு ஹோமரின் இருப்பிடமே தெரியாது என் பதை அவனுடைய பணமும் கடிதங்களும் கிடைத்த மர்மமான மார்க்கத்தைக் கூறி மேரிக்கு விளக்கினேன்.

"பார்த்தீர்களா, இந்த எழுத்தாளர்களை நம்பக் கூடாது என்பதைக் காட்டி விட்டீர்களே! முழுப் பூசணிக்காயைக் கலத்துச் சோற்றில் மறைக்கப் பார்க் கிறீர்களே !" என்ருள் அவள் பளிச்சென்று.

"உண்மையிலேயே எனக்கு ஹோமரின் இருப்பிடம் தெரியாதம்மா ; தெரிந்தால், உடனே உங்களிருவரையும் ஒன்று சேர்த்து வைத்துவிட மாட்டேஞ ?"

அவள் சட்டென்று 'பௌஜி அக்பாரி'லிருந்து வந்த கடிதத்தை என் சட்டைப் பையிலிருந்து உருவி எடுத்து, விரித்து என்னிடம் காட்டிஞள் : "சரி; இதில் கையெழுத்திட்டிருக்கும் 'கமாண்டிங் எடிட்டரை யாவது தெரியுமா உங்களுக்கு ?"

அது ஹோமரின் கையெழுத்துதான். அட இழவே! அதை நான் இதுவரையில் கவனிக்கவே இல்லையே !

"ஹோமர் இங்கேயா இருக்கிருன் ! அவன்தாஞ என் கதை இந்தப் பிரபலப் பல பாஷைப் பத்திரிகையில் பிரசுரமாகக் காரணமாக இருந்தவன் ! அவனுடைய பாராட்டுக் கடிதந்தாஞ இது ? என்ருல் நம்ப முடிய வில்லையே ! பின் எப்படி அவன் பம்பாயிலிருந்து

எனக்குப் பணமும் கடிதங்களும் அனுப்பினான்? அவற்றைத்தான் இங்கே யதேச்சையாக வந்திருந்தபோது அனுப்பியிருப்பானென்று கொண்டாலும், எனக்காக வீடு தேடி அலைந்து முடித்திருக்கிறானே, அது எப்படிச் சாத்தியமாயிற்று?"

"அதெல்லாம் எப்படியேனும் இருக்கட்டும் மிஸ்டர் ராமன். இப்பொழுது உங்கள் நண்பரின் இருப்பிடம் தெரிந்துவிட்டது. வாக்களித்தபடியே அவரை என்னிடம் கொண்டு சேர்ப்பது உங்கள் பொறுப்பு."

"தயாராயிருக்கிறேன், அம்மணி; கொண்டு வாருங்கள் காகிதமும் பேனாவும். இப்பொழுதே கடிதம் எழுதி, உடனே அவனைக் கதறி ஓடி வரச் செய்துவிடுகிறேன்."

"தந்தியே அனுப்பிவிடுங்களேன், மிஸ்டர் ராமன்."

"தேவையில்லை, மேரி அம்மா; டில்லி போன்ற நகரங்களுக்கு இப்பொழுதெல்லாம் தந்தியை முந்திவிடுகின்றன தபால்கள். தந்தி மிதக்கிறது; தபால் பறக்கிறதல்லவா?"

அவள் பக்கத்திலிருந்த மேஜையைத் திறந்து 'லெட்டர் பாட்' ஒன்றும் பேனாவும் எடுத்து வந்து என்னிடம் கொடுத்தாள். தேதியிடப் பேனாவை நாட்டிய போது என் கண்கள் கணநேரம் குத்திட்டு நின்றுவிட்டன. ஆம்; அந்த 'லெட்டர் ஹெட்'டின் தலைப்பில் "இண்டோ-பாரின் டிரேடேர்ஸ்" என்று அச்சிடப்பட்டிருந்தது.

"அம்மணி" என்றேன், நாட்டிய பேனாவைத் தூக்கிக்கொண்டு.

"ஏன், மிஸ்டர் ராமன்!"

"எழுத்தாளர்களை நம்பக்கூடாது என்று சொன்னீர்களே; உங்களைப் போன்ற பெண்களை மாத்திரம் நம்பலாமா ?"

"இதென்ன சந்தேகம் உங்களுக்குத் திடீரென்று?"

"உண்மையாகச் சொல்லுங்கள்; எனக்கு மூவாயிரம் ரூபாய் அனுப்பியதும், வீடு தேடி முடித்ததும் நீங்கள்தானா, இல்லையா, என்பதை."

மேரி நகைத்தாள்; முன்பு அவளுடைய முகத்தில் தேங்கி நின்ற விசனம் அனைத்தும் அகன்று, மோகனமாக அமைந்திருந்தது அத்தச் சிரிப்பு. சொன்னாள்: "மிஸ்டர் ராமன், என் ஹோமருடைய அன்புக்குப் பிரதியாக, அவர் கொடுக்கவேண்டிய தொகையையும், படவேண்டிய சிரமங்களையும், நான் ஈடு செய்யாவிட்டால், எங்கள் தூய காதலுக்கு என்ன மகத்துவம் இருக்கிறது? உங்கள் பெயரையும், வேலை செய்து வரும் காரியாலயம் எது என்பதையும், நீங்களே மூவாயிரம் ரூபாய்க்கு அவரை நம்பி வீடு கொடுத்தவர்கள் என்பதையும் என்னிடம் அறிவித்திருந்தார். அன்று நீங்கள் வீடு கேட்க வந்திருந்த போது உங்களுக்கும் டி ஸௌஸாவுக்கும் நடந்த சம்பாஷணையை நான் மாடியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். வீட்டுக்காகப் பூர்த்தி செய்து கொடுத்து விட்டுச் சென்ற விண்ணப்பத்தையும் பார்த்தேன். அவற்றிலிருந்து உங்கள் சங்கட நிலையை ஊகித்ததோடு, ஹோமர் உங்களிடம் பட்டிருந்த கடனை இன்னும் தீர்க்கவில்லை என்பதையும் அறிந்தேன்.

"டி ஸௌஸா என்னை மனைவியாக்கிக் கொள்ளும் எண்ணம் எழுந்த பிறகு பணப் பெட்டியின் சாவிகளையெல்லாம் என்னிடமே தந்திருந்தார். எனவே மூவாயிரம்

ரூபாயையும் வட்டித் தொகையையும் உங்களுக்கு அனுப்ப நான் சிரமப்படவில்லை.

"ஆனால் விண்ணப்பத்தில் உங்கள் தொழிலை 'எழுத்தாளன்' என்று குறிப்பிட்டிருந்ததைக் கண்டதும் டி ஸௌஸாவுக்கு விசாரம் பிடித்துக் கொண்டது. 'ஓர் எழுத்தாளனால் தமது ஆவல் நிர்மூலமானது போதும்; இன்னும் ஒருவனை நாம் குடியிருக்கப் போகும் வீட்டிலே குடி வைத்துக் கட்டி அழ வேண்டாம்' என நினைத்து உங்களுக்கு வீடு கொடுக்க முடியாது என்று கூறி விட்டார்.

"இதை நான் எதிர்பார்க்கவில்லை. பாவம்! பணம் அனுப்பியும் பயன் இல்லாது போய் விட்டதேயென்று, ஆபீஸ் கிளார்க் ஒருவரிடம் ரகசியமாக விஷயங்களைச் சொல்லி உங்களுக்காக இடம் தேடச் செய்தேன். என் அதிருஷ்டம் இந்தத் தெருவிலே வீடு கிடைத்தது.

"மிஸ்டர் ராமன், இப்படியெல்லாம் செய்திரா விட்டால், நீங்கள்தான் இன்று இங்கே வந்திருப்பீர்களா? இந்த 'பௌஜி அக்பார்' கடிதந்தான் என் பார்வைக்கு வந்திருக்குமா? ஹோமரின் இருப்பிடத்தைத்தான் நான் தெரிந்துகொள்ள முடிந்திருக்குமா?"

"மேரி அம்மா; நீங்கள் என் பொருட்டு மிகவும் சிரப்பட்டிருக்கிறீர்கள்; உங்களுக்கு எவ்வாறு நன்றி செலுத்துவதென்பதே தெரியவில்லை."

"நான் உங்கள் பொருட்டுச் சிரமம் எதுவும் பட வில்லை, மிஸ்டர் ராமன். என் காதல் என்னை இத்தனையும் செய்யத் துண்டியது."

"ஆம், காதல்தான். அந்தத் தூய காதல் நீடூழி காலம் வாழ்க" என்று வாழ்த்திவிட்டு, ஹோமருக்குக் கடிதம் எழுதப் புகுந்தேன்.

# சலனம் 5

கடிதத்தை அவசரத்தோடு பிரித்துப் படித்தேன். நாள்தோறும் வரும் இதரக் கடிதங்களைப் பிரிக்கும்போது ஏற்படாத அவசரமும் ஆர்வமும் இந்தக் கடிதத்தைக் கண்டபோது என்னிடம் எழுந்தன. அதற்குக் காரணம், அதை எழுதியிருந்தவரின் பெயரும் அதனுடன் திரும்பி யிருந்த பொருளும்தாம்!

" பிரிய நண்பா,

இந்தக் கடிதம் உங்களுக்கு அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளிக்கக் கூடும். அத்தனை ஆசையோடு கேட்டு வாங்கிய கதையைத் திருப்ப நேர்ந்ததற்கு விசனிக்கிறேன். அதன் காரணத்தை எழுத்தில் பொரிப்பது நல்லதில்லை. மாலையில் காரியாலயத்துக்கு வந்து நேரிலே அதைத் தெரிந்து போவீர்களா ?

எத்தனை நேரமானாலும் உங்களுக்காகக் காத்திருப்பேன். தவறாது வாருங்கள். நமஸ்தே.

அன்புடன்

**பண்டிட் அமர்நாத் "**

நான் மாத்திரம் எழுத்தாளனுக இல்லாவிட்டால், அமர்நாத் எழுதியிருந்ததுபோல அவருடைய செய்கை எனக்கு அதிர்ச்சியை இல்லாவிட்டாலும் ஏமாற்றத்தை யாவது அளித்துத்தானிருக்கும். ஆனுல் நான் எழுத் தாளனுக இருந்ததோடு ஆயிரந்தடவை சறுக்கி விழுந்து அடியிலிருந்து ஏறி வந்தவனுகையால், விரும்பிக் கேட்ட கதையே ஆயினும், அது திரும்பிவிட்டதற்காகக் கலங்கிப் போய்விடவில்லை.

மனிதர் பலதரப்பட்ட ருசியுடையவர்கள். பெற்ற தாய்க்கே தன் குழந்தைகளிடம் மாறுபட்ட விருப்பு—வெறுப்பு இருக்கும்போது ஒரே ஒரு கதையைப் படித்து விட்டு என்னை அளவிட்ட ஒரு ஆசிரியருக்கு மற்ருெரு கதை பிடிக்காமல் போனதில் வியப்பென்ன இருக்கிறது ? அவர் ' காரணம் ' என்று குறிப்பிட்டுள்ளது இதாகத்தான் இருக்கவேண்டும். அதை இக்கடிதத்தில் ' பாலிஷா'க எழுதியிருக்கிருர். நேரில் காணும்போது இன்னும் சற்று மெருகேற்றிச் சொல்லப் போகிருர். இது கூடத் தெரி யாதா, என்ன, பதினைந்து வருஷங்களாகப் பலதரப்பட்ட பத்திரிகாசிரியர்களுடன் பழகிய எனக்கு ?

ஆயிரம் வேலைகள் தலைக்கு மேலே குவிந்துகிடந்தன. அவற்றினிடையே பொழுது கண்டு, தாய்மொழிப் பத்திரி கைகளுக்கு எழுதுவதே சிரமமாக இருந்தது. ஆயினும் புது உறவு—புது மொழி என்ற மோகம் இந்த ஆசிரியர் அமர்நாத்தின் கோரிக்கைக்கு என்னை இணங்க வைத்தது. " சரிதான் ; கிடக்கிருர் மனுஷர் ! இவருடைய சிந்தி இலக்கியத்துக்கு ஒவ்வாத இக்கதை என் தமிழ் நாட்டு வாசகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தட்டும்."

இவ்வாறு எண்ணிக்கொண்டு, பண்டிட்டின் கடி தத்தை மடித்து மேசையினுள் தள்ளிவிட்டுக் கதையைப் பெட்டியில் பத்திரமாகப் பூட்டி வைத்தேன்.

இன்று போலத்தான் அன்றும்—அதாவது, சென்ற மாத ஆரம்பத்தில் தமது 'ஜிந்தகி'........பத்திரிகையில் வெளியிடக் கதைகள் வேண்டுமென்று கேட்டு இதே அமர்நாத்திடமிருந்து வந்த கடிதம் என்னைத் திகைப்பிலோ, களிப்பிலோ ஆழ்த்தவில்லை. நண்பர்கள் குழாம் பெருகப் பெருக, அதிலும் பிற மொழி இலக்கிய அன்பர்களின் தொடர்பு ஏற்பட ஏற்பட இந்தத் தமிழனின் இலக்கியம் மெல்ல மெல்லப் பிறமொழிகளையும் எட்டிப் பார்க்கலாயிற்று.

மறுநாள் அமர்நாத்தை முதல் தடவையாகச் சந்தித்தேன். அவர் சொன்னார்: "நண்பரே, இதுநாள் வரை, சிந்தி இலக்கியம் என்னும் கூட்டுக்குள்ளே குட்டிக் கரணம் போட்டு வந்த என்னை, என் காரியதரிசி—உங்களவர்—வெளியே அழைத்து வந்து காட்டினார். சமீபத்தில் வெளியான உங்களது கதையொன்றைப் படித்து மொழிபெயர்த்துச் சொன்னார். தன்னைத்தானே திரும்பத் திரும்ப நிலைக்கண்ணாடியில் அழகு பார்த்துக் கொள்ளாமல், பிறருடைய அழகை, தன்மைகளை, ரசித்து, ஆராய்ந்து, அவற்றை நிலைக்களனாகக் கொண்டு எழுதும் உங்களது பாணி......எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. எங்கள் 'ஜிந்தகி'க்கும் அத்தகைய கதைகள் வேண்டும். நீங்கள் தமிழிலே எழுதிக் கொடுத்தால் போதும்; என் காரியதரிசி அதை ஆங்கிலமாக்குவார்; நான் எங்கள் மொழியில் மாற்றி வெளியிட்டு விடுகிறேன்."

தொடர்ந்து அவர் விரும்பும் கதைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில் எனக்கு ஒரு விஷயம் சட்டென்று நினைவுக்கு வந்தது. அந்த நினைவின் எதிரொலியாக அமர்நாத்திடம் கேட்டேன்: "பண்டிட்ஜீ, தன்னைத்தானே அழகு பார்த்துக் கொள்ளாமல், பிறர்

அழகை ரசிக்க வேண்டுமென்ற உங்கள் ஆவல் புரிந்தது. அதுபோல தன் அழகைப் பிறர் எப்படி ரசிக்கின்றனர் என்பதை அறியும் ஆவலும் தங்களுக்கு உண்டா?"

அவர் சட்டென்று பதில் தந்தார்: "ஏன் இல்லாமல். காக்கைக்கு எப்பொழுதும் தன் குஞ்சு பொன் குஞ்சு தானே! அதன் கறுமையைப் பிறரல்லவா எடுத்துக் காட்டவேண்டும்?"

"அப்படியானால் 'ஜிந்தகி'க்கு எழுதும் எனது முதல் கதை உங்கள் சிந்தி மக்களின் வாழ்க்கையையே அடிப்படையாகக் கொண்டிருப்பதில் தடை ஏதும் இல்லையே?"

"இல்லை" என்றார் அவர்.

சிந்திக்காரர்களின் பழக்க வழக்கங்களை வைத்து ஒரு கதையை அப்பொழுது உருவாக்கி வந்தேன். அதையே இவர் தேவைக்கு அளித்துவிடலாமேயென்றே இவ்வாறு சொன்னேன். அதற்கு அமர்நாத்தின் சம்மதம் தடையின்றிக் கிட்டிவிட்டமையால், கதையும் தடையின்றி உருவாகி, 'ஜிந்தகி'க் காரியாலயம் சென்றது. ஆனால், அது சென்றது போலவே திரும்பிவிட்டது. ஆசிரியருக்கு அது ஏன் பிடிக்கவில்லை?.........

*　　　*　　　*

அந்தக் கதை!

வழக்கம்போல ஆலோசித்துத் திட்டமிட்டு எழுதிய கதையல்ல அது. 'சலனம்' என்ற தலைப்பில் நான் எழுதி வந்த கதைத் தொடரில் நாலாவதாக, பம்பாயில் குடியேறியுள்ள சிந்தி அகதி மக்களைப் பாத்திரங்களாகக் கொண்டு அதை அமைக்கவேண்டுமென்று மாத்திரம் திட்டமிட்டுக் கொண்டு அவர்களைப்பற்றிய விசாரிப்பில் இறங்கியபோது அக்கதை எனக்குக் கிடைத்தது......என் காரியாலயத்தில்

கித்வானி என்ற பெயருடைய சிந்திக்காரர் எஞ்சினீயராக இருக்கிறார். மூன்றும் மனிதருடன் உள்ளம் விட்டுப் பழகாமல் ஒதுங்கிய சுபாவமுடையவர்அவர். அவருடைய இலாகாவிலே வேலை செய்து வந்தமையாலும், நான் ஒரு எழுத்தாளன் என்று கூறி யிருந்தமையாலும், எப்பொழுதோ ஒரு தடவை தம் சகோதரி கூட ஒரு சிந்தி எழுத்தாளி என்று என்னிடம் சொல்லியிருந்தார். எனவே எனக்கேற்ற செய்திகளை அந்த அம்மாளிடமிருந்து ஆதாரத்துடன் பெறலா மென்று ஒரு நாள் கொலபாவிலிருந்த அவருடைய வீட்டுக்குச் சென்றேன். முன்னறிவிப்புச் செய்யாததால், நான் சென்ற சமயம் கித்வானி வீட்டில் இல்லை. அவரு டைய தங்கை, சுமார் இருபத்தைந்து வயசுக்குள்ளான அழகிய மீரா என்னை வரவேற்றாள்.

நான் வந்த காரியத்தைச் சொன்னதும் அவள் சொன்னாள் : "அண்ணா உங்களைப்பற்றி நிறையச் சொல்லியிருக்கிறான். உங்களைப் பழக்கம் செய்துகொள்ள வேண்டுமென்று எனக்கு ஆசை. உங்கள் வீட்டு விலா சத்தைக் கேட்டு வருமாறு எத்தனையோ தடவை சொன் னேன். ஆனால் அவன், 'வேண்டாம், மீரா. அவரை நீ அவருடைய வீடு சென்று பார்ப்பது கூடாது' என்று கூறிவிட்டான்."

"அப்படியா ? கித்வானி என்னிடம் சொல்லவே இல்லையே ! சொல்லயிருந்தால் நானே உங்களைத் தேடி முன்பே வந்திருக்க மாட்டேனா ? ஆமாம் ; கித்வாளி ஏன், எங்கள் வீட்டுக்கு வரலாகாது என்று தடைசெய்து விட்டார் ?"

"அதுவா ? அது......" மீரா சிறிது தயங்கிப் பிறகு, "அதுதான் சொன்னேனே அண்ணாவின் போக்கே ஒரு மாதிரியென்று" என்றாள்.

நான் அதற்குமேல் அவ்விஷயத்தைத் தூண்டித் துளைக்க விரும்பவில்லை. ஒருவேளை கித்வானி, தன் சொந்தச் சகோதரியிடமே நம்பிக்கையற்ற சந்தேகப் பிரகிருதியோ என்னவோ! சொன்னேன்: "அதிருக்கட்டும் மீராதேவி. இப்பொழுது நானாக உங்கள் வீடு தேடி வந்துவிட்ட பிறகு, என் தேவையைப் பூர்த்தி செய்வதில் தடை ஏதும் உண்டோ?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. ராம், உங்களுக்கு வேண்டிய விவரங்களைக் கேளுங்கள்; சொல்கிறேன். ஆனால், நீங்கள் எங்களவர்களின் வாழ்க்கையை நிலைக்களனாகக் கொண்டு எத்தகைய கதையை எழுத உத்தேசித்திருக்கிறீர்கள்? காதல் கதையா? சோகக்கதையா? சுப முடிவுடைய கதையா? அல்லது......?"

"'சலனம்' என்ற தொடரில், விதவையாகி மறுமணம் செய்துகொண்ட பெண்களின் மனப்போக்கை அடிப்படையாகக் கொண்டு கதைகள் எழுதி வருகிறேன். அதே தொடரில் இந்தக் கதையையும் எழுத உத்தேசித்திருக்கிறேன்" என்றேன்.

மீரா சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுக் கேட்டாள்:

"உங்கள் தலைப்புக்குப் பங்கமின்றி, விதவையின் மறுமணம் என்பதை மாத்திரம் நீக்கிவிட்டு, வேறு விதமான 'சலன'க் கதையை ஏன் எழுதக் கூடாது?"

"நன்றாக எழுதலாம்; 'சலனம்' என்ற வார்த்தை நான் எழுதும் கதைகளின் தன்மையை மாத்திரம் பொருளாகக் கொண்டதில்லையே! மனித வாழ்வில் ஆணிடமும் பெண்ணிடமும் பற்பல நிலைகளில் சலனம் ஏற்படுகிறது. ஆனால், நான் இந்தத் தொடரில் காட்ட விரும்புவது,

வாழ்க்கை இயல்பிலிருந்து மாறுபட்டுப் புதுவழி வகுத்துக் கொள்பவர்களின் திடம் கடைசிவரையில் நீடித்திருப்ப தில்லை, அதில் எப்படியாயினும் சலனம் ஏற்பட்டு விடுகிறது என்பதே."

"வாழ்க்கை இயல்பிலிருந்து மாறுபடுவதென்பது விதவை மறுமணம் செய்துகொள்வது ஒன்றுதானா? வால்மீகி ராமாயணத்தில் உத்தரகாண்டம் உங்கள் நினைவில் இருக்கிறதா? அரக்கர்களிடமிருந்து மீட்ட சீதையைத் தீக்குளிக்கச் செய்த பின்னரே ஏற்றுக் கொண்டும் ராமன் ஏன் சலனமடைந்தான்? ஏன் அவளை மீட்டும் ஆரணியத்தில் விட்டுவரப் பணித்தான்? அத் தகைய சலனக் கதை ஒன்றை இந்தத் தடவை சித்திரி யுங்களேன்."

"செய்யலாம், மீராதேவி. ஆனால் அதற்குக் சூழ்நிலை சரிவர அமையவேண்டுமே?"

"சூழ்நிலை என்ன? கதையையே வேண்டுமானாலும் நான் அமைத்துத் தந்துவிடுகிறேன்."

"நல்ல காரியமாயிற்று; உங்கள் கற்பனையைத் திருடி என் பெயரில் வெளியிடுவதா?"

"இது கற்பனையல்ல, ராம்; நிஜமாக நடந்த சோகப் பெண்ணின் வரலாறு. அதை நானே கதையாக வடித்து வெளியிட விரும்பியும் என் பேனாத் துணிவடையவில்லை. எங்களில் ஒருவரின் பலவீனத்தை நானே பிரபலப் படுத்துவதா?"

சர்க்கரைப் பந்தலில் தேன்மாரிப் பொழிந்தாற் போலாயிற்று என் நிலை. நான் வெறுமனே கதைக்குச் சூழ்நிலை தேடிவந்தேன். இங்கே என்னடா என்றால் கதையே காத்திருந்தது. என் தலையசைப்புக்கு இணங்கி மீரா அந்தக் கதையைச் சொல்லலானாள்.

# 2

சிந்து மாகாணத்திலே கராச்சிக்கு அடுத்த முக்கிய நகரம் ஹைதராபாத்துத்தான். அழகிலும் அமைப்பிலும் அந்த நகரம் தனிப்பெருமை வாய்ந்தது. பிரசித்திப்பெற்ற சிந்துநதியின் அருகில் இருக்கும் வாய்ப்புடையது; ஆதலால், வியாபாரத்திலும் போக்குவரத்திலும் தலை சிறந்து விளங்கிற்று.

அந்த நகரில் பல பார்க்குகள் உண்டு. அவற்றில் தலையாக விளங்குவது தோலாராம் பார்க் என்பது. அதை அமைத்த தோலாராம் லச்சுமண் கித்வானி பெரிய தனவந்தர். நகரின் பிரபல சினிமாத் தியேட்டர்கள் இரண்டுக்குச் சொந்தக்காரர். அது தவிர, உள்ளூரிலே எத்தனையோ வியாபாரங்களை நடத்தி வந்தார்......"

"மன்னிக்க வேண்டும் மீராதேவி; ஆரம்பத்திலே குறுக்கிட நேர்ந்ததற்கு விசனிக்கிறேன். உங்களவர்களின் பெயர்களைப் பற்றி எனக்கு ஒரு சந்தேகம். தென்னாட்டவர்களாகிய நாங்கள், முதலில் ஊரின் பெயரையும், அடுத்ததாகத் தந்தையின் பெயரையும் கடைசியில் எங்களது பெயரையும் வைத்துக் கொள்வது வழக்கம். ஆனால் உங்களிடையே......"

"எங்களிடையே அப்படியில்லை. எங்களுக்கு 'ஸர் —நேம்' அதாவது குடும்பப் பெயர் என்று ஒன்று உண்டு. இப்பொழுது நமது தோலாராம் லச்சுமண் கித்வானியின் பெயரையே எடுத்துக் கொள்வோம். முதலில் இருக்கும் தோலாராம் என்பதுதான் அவருக்கு இட்ட பெயர். அடுத்திருப்பது அவருடைய தந்தையின் பெயர். இறுதியில் வருவதுதான் குடும்பப் பெயர்.

பெண்கள் ஆண்கள் எவராயினும் சரி; இப்படித்தான் பெயர் அமைப்பு இருக்கும். நீங்கள் முதல் இரண்டு எழுத்தைத் தலையெழுத்தோடு சுறுக்கிக் கொள்வது போல நாங்களும் செய்து கொள்வதால் குடும்பப் பெயர் தான் முழுதாக நிற்கும். மேலை நாட்டவரைப்போலவே குடும்பத் தலைவனை 'மிஸ்டர்' என்றும், தலைவியை "மிஸஸ்" என்றும், ஆண் குழந்தைகளை 'மாஸ்டர்' என்றும், பெண் குழந்தைகளை 'மிஸ்' என்றும் அடை மொழிகளிட்டுக் குடும்பப் பெயரையும் சேர்த்து அழைப்பது புதிதாகப் பழகுபவர்களின் வழக்கம். உள்ளூர்க்காரர்கள், வீட்டிலுள்ளோர், நெருங்கிய பந்துக்கள் நண்பர்கள் இவர்கள் மாத்திரமே எங்களை இயற் பெயருடன் அழைப்பார்கள்."

"அது சரி; ஆனால் பெண்கள் விவாகமாகிப் புருஷன் வீடு சென்ற பிறகும் இதே பெயரைத்தான் தாங்கியிருப் பார்களா?"

"இல்லை; சொல்கிறேன் கேளுங்கள்; நம் கதையில் முக்கிய பாகம் தாங்கும் பிரச்சனை இது. எனவே இதைச் சற்று விரிவாகவே கூற வேண்டும். சிந்து மாகாணத்தைச் சேர்ந்த நாங்கள் (அங்குள்ள முகமதியர்களைத் தவிர்த்து) பெரும்பாலும் ஹிந்துபழக்க வழக்கங்களும், சீக்கிய நடை முறைகளும் கலந்த ஷாஹிஜ்தார் என்ற இனத்தவர். எங்களிலும் பல உப-பிரிவுகள் உண்டு. அதிலே ஒரு பிரிவு 'ஷிகார்புரி' என்பது எங்கள் குடும்பம் அந்த இனத்தைச் சேர்ந்ததுதான். நம் கதையில் வரும் தோலாராமும் அந்த இனத்தவரே. ஷிகார் புரியார்கள் பிரபல வியாபாரிகள். பெரிய தனவந்தர்கள். நகரத்திலே மதிப்புக்குரிய மக்கள். ஆனால் பெரும்பான்மையோர் மேலைநாட்டு நாகரிகத்தில் மூழ்கிக் கிடப்பவர்கள்.

"எங்களிடையே நிகழும் திருமணங்கள் மூன்று வகைப்படும். சாஸ்திரிய ஹிந்து ஆசாரப்படி உங்களைப் போலவே விவாகம் நடப்பதும் உண்டு; சீக்கிய சம்பிரதாயப்படி 'குரு கிரந்தம்' என்ற வேதப் புத்தகங்களை வைத்துப் பூசித்து வலம் வந்து எளிய முறையிலும் திருமணங்கள் நிகழும். மேலைநாட்டுப் பழக்கப்படி ரிஜிஸ்தர் கலியாணங்களும் நடப்பதுண்டு. ஆனால் ஒன்று; திருமணம் எப்படி நடந்தாலும், விவாகரத்தோ, பெண்களின் மறுமணமோ நிகழ்வது மிகவும் துர்லாபம்.

"சாதாரணமாகப் பெண்கள் விவாகம் ஆகும் வரையில் தங்கள் இயற்பெயருடன் தந்தையின் பெயரை யும் பிறந்த குடும்பத்துப் பெயரையும் தாங்கியிருப்பார்கள். பிறகு பின் இரண்டும் மறைந்து, அவற்றின் இடத்தை முறையே கணவனின் பெயரும் அவனது குடும்பப் பெயரும் ஆக்கிரமித்துக் கொள்ளும். சில சமயங்களில் அந்த இயற்பெயர்கூட மாறிவிடுவதும் உண்டு. ஹிந்து சாஸ்திர முறைப்படி விவாகம் நடத்துபவர்கள் ஜாதகங் களைப் பொருத்தம் பார்ப்பார்கள். உங்களில் ஜாதகங்கள் பொருந்தாவிடில் விவாகம் நடக்காது. ஆனால் எங்களில் அத்தகைய சந்தர்ப்பங்களில் பெண்ணின் இயற்பெயரை மாற்றி அமைத்து விவாகத்தை நடத்துவார்கள். பெயர் மாற்றத்தால் பெண்ணின் வருங்காலம், பிறப்பு வளர்ப்பு அனைத்தும் மாறிவிடுகிறது என்ற நம்பிக்கையே இதற்குக் காரணமாக இருக்கலாம். இப்பொழுது புரிந்ததா உங்களுக்கு எங்கள் பெயரைச் சூழ்ந்திருந்த சிக்கல்?"

"அது புரிந்தது. ஆனால் குடும்பப் பெயர் என்று சொன்னீர்களே; இப்பொழுது உங்கள் அண்ணாவின் பெயரும், நமது தோலாராமின் குடும்பப் பெயரும்

ஒன்றுயிருக்கிதே? அப்படியானுல் நீங்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தவர்தாமா?

"அதுவல்ல மிஸ்டர் ராம்; 'கித்வானி' என்ற பெயரைத் தாங்கிய குடும்பங்கள் எத்தனையோ ஆயிரம் சிந்தி ஜாதியில் இருக்கின்றன. அவர்கள் பெரும்பாலும் ஒருவரை ஒருவர் அறிந்துகூட இராத வெவ்வேறு குடும்பத்தைச் சார்ந்தவர்கள். எனினும் ஒரு காலத்தில் ஒரே குடும்பமாக இருந்து பிரிந்தவர்களாக இருக்கலா மென்று அனுமானிப்பது தவறல்ல. அது போகட்டும் இப்பொழுது கதையை மேலே கேளுங்கள்......"

தோலாராமுக்கு இரண்டு மக்கள். மூத்தவன் கிஷின் சந்த்; இளையவள் ரேகா. நம் கதை நடக்கும் போது ரேகாவுக்குப் பதினெட்டு வயசு. காலேஜில் இண்டரில் படித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய அண்ணன் கிஷின், பம்பாயில் எஞ்சினீயரிங் படிப்பை முடித்து விட்டு, மேல் படிப்புக்காக அமெரிக்கா சென்றிருந்தான்.

செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்த செல்லப் பெண் ரேகா, அவள் என் தோழி. எங்களிடையே இருந்த ஒற்றுமைகளைக் கூறும்போது, 'அவளே நான்; நானே அவள்' என்ற மயக்கங்கூட ஏற்படும். ஆம், மிஸ்டர் ராம். இதோ என்னைப் பார்க்கிறீர்கள். பெற்றோர், சுற்றம், சொத்து சொம்பு எல்லாவற்றையும் பறிகொடுத்து, அகதியாக இங்கு வந்து குடியேறியிருக்கும் சோக நிலையை மறந்து விட்டு, எட்டு வருஷங்களுக்கு முன்பிருந்த இந்த மீராவைக் கற்பனை செய்து பாருங்கள். அவள்தான் அன்றைய ரேகா. வயதில், வளர்ச்சியில், தோற்றத்தில், குணத்தில், பேச்சில், பழக்கத்தில்—ஏன்

அவளுக்கு விவாகமான பிறகு ஏற்பட்ட பெயரில்கூட நாங்கள் ஒருவராகவே இருந்தோம்.

தோலாராம் மனைவி காசிமி மிகவும் வைதிகமானவள். எத்தனைக்கெத்தனை தோலாராம் மேலை நாகரிகத்தில் மூழ்கி யிருந்தாரோ, அத்தனைக்கும் அசையாமல் அந்த அம்மாள் சிந்திகளின் ஆசார அனுஷ்டானங்களை அணுவும் விடாது கடைப்பிடித்து வந்தாள். காசிமி அம்மாவுக்குப் பெண் பெரியவளாகி விட்டால், சரியான காலத்தில் கல் யாணத்தை முடித்துவிட வேண்டுமென்ற ஆசை. ஆனால் தோலாராமோ, "கல்யாணம் தேவைப்படும் போது அவளே தனக்குரியவனைத் தேடிக்கொள்வாள்" என்பார்.

கடைசியில் அவ்விருவரும் திருப்தியடையும்படி ரேகாவின் கல்யாண பந்தம் ஏற்பட்டது.

கொஞ்ச நாளாகத் தோலாராம் சினிமாப் படம் ஒன்று பிடிக்கவேண்டுமென்று திட்டமிட்டு வந்தார். அந்தத் திட்டம் அந்த வருஷம் உருப்பெறத் தொடங் கிற்று. முதல் முதலில் கதை எழுத ஓர் எழுத்தாளரை அமர்த்தி, தமது பங்களாவிலே அவருக்கு ஜாகையளித்து அந்த வேலையை முடிக்க ஏற்பாடு செய்தார். லால்வானி என்ற அந்த எழுத்தாளர். வாலிபர் அழகிய தோற்ற முடையவர்; மென்மையான, மேலான சுபாவங்களுடை யவர்; எழுத்திலும் புகழ் பெற்றவர். கதை எழுத ஆள் தேடும் பிரச்சனை எழுந்தபோது, அவருடைய கதைகளைப் படித்து மயங்கி இருந்த நானும் ரேகாவுந்தான் லால்வானி யின் பெயரைப் பிரேரேபித்தோம். அவரே தேர்ந்தெடுக்கப் பட்டு எங்கள் அண்மையிலே வசிக்கவும் வந்துவிட்டார்.

அவரது வனப்பின் கவர்ச்சியோ, பேச்சின் காந்த சக்தியோ, எழுத்தாளர் என்றால் தெய்வம் என்று கருதும்

எங்களுடைய மனே பாவந்தானே, காலேஜ் போகும் நேரந் தவிர மீதிப் பொழுதையெல்லாம் நாங்கள் லால் வானியுடன் கழித்தோம். அவருடன் பழகுவது எங்களுக்குத் தேனைப் போலத் தித்தித்தது ; வார்த்தை யாடிக்கொண்டிருப்பது அமிர்த தாரையை வர்ஷித்தது. எல்லாவற்றையும் விட, அவர் எங்களைக் கதை எழுது பவர்களாகப் பழக்கிவிடுகிறேன் என்று ஆரம்பித்தபோது, நாங்கள் ஒரே இன்ப லாகிரியில் மிதந்துவிட்டோம். மிஸ்டர் ராம், அந்த மனிதர் பிறகு என்ன என்னவெல்லா மோ துரோகமான காரியங்களைச் செய்துவிட்டார். இருந் தாலும், இன்று இந்தப் பம்பாயில் அண்ணுவுக்கு முழுவதும் பாரமாயிராமல் என் வயிற்றை நானே கழுவிக் கொள்ளும் வண்ணம் என்னை ஓர் எழுத்தாளியாக்கிவிட்ட குருநாதர் அவர்தாம்.

“அம்மணி” என்று மீண்டும் குறுக்கிட்டேன் ; “ உங்களுக்கு விவாகம்......?”

மீராவின் முகத்தில் சோகத்திரை படர்ந்தது. ஆயினும் என் கேள்விக்கு அவள் பதில் தந்தாள். “சொல்லப் போகும் ரேகாவின் கதைதான் கிட்டத்தட்ட என்னுடை யதும். பிரிவினை அமளி அவளைக் கணவனுடன் வாழக் கொடுத்து வைக்காதவளாக்கிற்று. அதே அமளி என் கணவரையும்......” அவள் கண்களில் கண்ணீர் பொங் கியது. வார்த்தையைப் பாதியில் நிறுத்திவிட்டு முகத்தை வேறு புறமாகத் திருப்பி, கைக்குட்டையால் துடிக்கும் உதடுகளை அழுத்திக்கொண்டாள்.

“ மீராதேவி.”—நான் மன்னிப்புக் கேட்கத் தயா ரானேன்.

அவள் முகத்தைத் திருப்பினுள். “ ராம், பெண்கள் அபலைகள் என்பது எக்காலத்துக்கும் பொருந்தும்

உண்மைதான். நடந்ததை நினைத்து வருந்தக்கூடாது என்று நாள்தோறும் மனத்தைத் திடப்படுத்தி வந்தும், புதுமனிதரான உங்கள் முன்பு இப்படி......என்னை மன்னித்துவிடுங்கள், மிஸ்டர் ராம்."

"நானு மன்னிப்பது, மீராதேவி? அனுவசியமாக உங்கள் சொந்த விஷயத்தில் புகுந்து மறைந்ததுக்கத்தைக் கிளறிய குற்றத்துக்கு நான் மன்னிக்கப்பட வேண்டியவனல்லவா?"

"சரிதான், மிஸ்டர் ராம்; விட்டுத் தள்ளுங்கள் அப்பேச்சை. சொல்லப்போனால் என் ரேகாவின் சோகத்தைவிடப் பெரிதா, என் சோகம்? அதைக் கேளுங்கள், முதலில்."

மீரா கதையைத் தொடர்ந்தாள்:

உருவமும் நிழலுமான எங்களுள் நிழலுக்குக் காதல் பிறந்தது. ரேகாவின் உள்ளம் வாணியிடம் லயித்தது.

இந்தகாதல் விஷயம் நெடுநாள்ரகசியமாயிருக்கவில்லை. சீக்கிரமே தோலாராமின் கவனத்துக்கு வந்தது. அவர் அந்த ஐக்கியத்துக்கு முழு மனத்துடன் சம்மதம் அளித்து விட்டார். காசிமி அம்மாவும் அந்த இணைப்புக்குத் தடை சொல்லவில்லை. சொத்து சுதந்தரம், பெற்றோர் சுற்றமற்ற ஏழை எழுத்தாளனோடு தன் பெண் ஒன்றியதுகூட அவளுக்கு விகற்பமாகப் படவில்லை. ஆனால் அந்த இணைப்பு, சாஸ்திரோக்தமாக வேண்டும் என்று அவள் விழைந்தாள். ஜாதகங்கள் பொருந்தாவிட்டாலும், மணப்பெண்ணின் பெயரை மாற்றி அமைத்துக் கல்யாணம் செய்துவிடும் வழக்கம் எங்களில் உண்டே; எனவே, காசிமி அம்மாவின் பிரியப்படியே ஜாதகங்களின் பொருத்தம் பார்க்கப்

பட்டது. பொருத்தம் அவ்வளவு சிலாக்கியமாக அமை யாததால், ரேகா, என்னுடைய பெயரைத் தாங்கி லால் வானியின் மனைவியானாள்.

மீராவுக்குக் கல்யாணமான மறுமாதத்தில், கராச்சியில் உள்ள ஸ்டூடியோ ஒன்றில் தோலாராமின் படப்பிடிப்பு ஆரம்பமாயிற்று. அதன் முழுப் பொறுப்பையும் தம் மருமகனிடமே ஒப்படைத்து விட்டார் அவர். லால்வானி கராச்சிக்குக் கிளம்பிச் சென்றார். அவருடன் மீரா போக முடியவில்லை. அப்பொழுது அவளுக்கு இண்டர் இரண் டாவது வருஷப் பரீட்சைச் சமயம். வாழ்வில் எத்தனை இன்பம் கண்டாளோ, அத்தனை இன்பத்தைப் படிப்பிலும் கண்டவளாதலால், சில காலம் கணவனைப் பிரிந்திருப் பதற்கு அவள் தயங்கவில்லை.

நான்கு மாதங்களுக்குப் பிறகு பரீட்சையை நன்றாக எழுதிவிட்டு. பலநாளைப் பிரிவு ஏக்கத்தைத் தீர்த்துக் கொள்ளக் கராச்சிக்கு விரைந்த மீரா, தன் கணவர் தன் னுடையவரல்ல என்பதைத்தான் கண்டாள். ரோஷனு என்ற முஸ்லிம் நடிகை தோலாராமின் படத்தில் பிரதம பாகம் தாங்கி நடித்து வந்தாள்,

இள மனைவியைப் பிரிந்த வேட்கைத் தேக்கமோ அல்லது குலுக்கும் மினுக்கும் நிறைந்த அந்த நடிகையின் ஜாலமோ, தெரியாது, லால்வானி மிக எளி தாக அவள் வலையில் சிக்கிக்கொண்டார். அவரை அவ ளுடைய பிடியிலிருந்து மீட்க, மீரா, நான்—ஏன் தோலா ராம்கூட எவ்வளவோ முயன்று பார்த்தோம் ; பயனில்லை. முடிவில் தோலாராம் கோபவெறி கொண்டு படத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு, மீராவுடன் ஊர் திரும்பி விட்டார்.

பண வருவாய் அற்றுப் போனதும் ரோஷனு லால்வானியை உதறிவிடுவாள். பிறகு அவர் தாமாக வீடு வந்து சேருவார் என்ற உறுதி அப்பொழுது எங்கள் எல்லாருக்கும் இருந்தது. அவர் வரத்தான் வந்தார்; ஆனுல் எப்பொழுது ?

ஹைதராபாத்துக்குத் திரும்பிய ஒரு வாரத்துக்கெல்லாம் தோலாராமுக்கு இரண்டு வக்கீல் நோட்டீஸுகள் ஒன்ருக வந்தன. ஒன்று ரோஷனுவின் சார்பாகவும், மற்ருென்று லால்வானியின் சார்பாகவும் அனுப்பப்பட்டிருந்தன. படப்பிடிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டதால் தங்கள் பெயர் பிரபலமடைவது தடைப்பட்டுவிட்டதென்றும், அதற்கு நஷ்ட ஈடு செய்யவேண்டுமென்றும் அந்த நோட்டீஸுகள் அறிவித்தன.

தோலாராமுக்கு ரோஷம் ஏற்படக் கேட்பானேன் ? "எதையாவது அழுது தொலேயுங்கள், அப்பா; நமது மானம் கோர்ட்டேறி அடிபட வேண்டாம்' என்ற மகளின் கண்ணீர் நிறைந்த வேண்டுகோளையும் கவனிக்காமல் அவர் வழக்கை நடத்தத் தயாரானுர். ஆனுல் அதில் அவருக்குத் தோல்விதான் கிடைத்தது.

இந்தத் தோல்வியும், இடையே இத்தகைய அவமானங்களையும் மகளின் வாழ்க்கை அலங்கோலத்தையும் பார்க்கச் சகிக்காது மனமுருகிச் செத்த மனைவியை இழந்த துயரமும் சேர்ந்து தோலாராமை ஒரே வைராக்கிய மனிதராக்கியிருந்த சமயத்தில்தான் லால்வானி தமது பித்தம் தெளிந்து மனைவியை நாடி வந்தார். அவரைப் பிடித்திருந்த ரோஷனுப் பிசாசு, கார் விபத்துக்குள்ளாகி மரணமெய்திவிட்டாள். அவளுடைய பிடி அற்றுப் போனதும் லால்வாணி பழைய மனிதராகி மீராவிடம் வந்தார்.

ஆனால், தோலாராம் எளிதாக அவரை வீட்டில் புக அனுமதித்து விடவில்லை. "என் பெண் இப்படியே வாழாவெட்டியாக வாழ்வாள்; அல்லது அவள் விரும் பினால் வேறு எவனையாவது மணந்துகொள்வாள். உன்னைப் போன்ற கயவனுக்கு மனைவியாக இனி ஒரு போதும் வாழமாட்டாள்" என்று கண்டிப்பாகக் கூறி விட்டார்.

தந்தைக்கும் தவறிழைத்த கணவனுக்கும் இடையே தத்தளித்து நின்ற மீராவை நோக்கி லால்வானி கேட் டார்: "என்ன மீரா, உன் முடிவும் இதுதானா? மனிதர் தவறு இழைப்பது சகஜம். ஆனால், அதை உணர்ந்து திருந்த முன் வரும்போது அவர்களுக்கு வாயிலை அடைப்பதுதானா, ஹிந்து மனைவியின் லட்ச ணம்?" என்று உணர்ச்சி பொங்கக் கேட்டபோது, அவளால் தாள முடியவில்லை. ஓடிச்சென்று அவர் கால் களில் விழுந்துவிட்டாள்.

"தீண்டாதே, அந்தப் பதிதனை" என்று தன்னைப் பற்றி இழுத்த தந்தையின் கையை உதறிவிட்டு அவள் சொன்னாள்: "அப்பா, எத்தனைதான் மாசடைந்து திரும்பி வந்தாலும், அவர் என் கணவர்; வாழ்விலே எனக்கு ஒளி தரவல்ல ஒரே நந்தா விளக்கு. அவர் தவறுகளை நான் மறந்துவிட்டேன். நீங்களும் மறந்து மன்னிப்பதானால் முன்போல் ஒன்றாக வாழ்வோம். இல்லாவிட்டால்......"

"இல்லாவிட்டால் என்ன?" என்று ரௌத்திரா காரத்துடன் கேட்டார் தோலாராம்.

"நாங்கள் இந்தப் பரந்த உலகத்தில் எளியவர் களாகக் கைகோர்த்து நடப்போம்."

தோலாராமின் சுருதி இறங்கிப் போயிற்று. அவருடைய நெறி, பிடிவாதம், வைராக்கியம் எல்லாம் மகளின் அந்த ஒரு சொல்லில் அவிந்து போயின. இருபது வருஷங்களாகச் செல்வத்தில் புரண்டு வளர்ந்த தன் அருமைக் கண்மணி ஏழையாகக் குடிலில் வாழ்வதா ?

லால்வானியைப் பழையபடி தம்முடனே வாழ மௌனச் சம்மதம் ஈந்துவிட்டார் அவர்.

* * *

மீராவின் வாழ்வில் செல்லரித்த பழைய ஏடு புரண்டு புத்தேடு இடம் பெற்றது. ஆனால் இத்தடவை—பாரத நாடு சுதந்திரம் பெற்றதன் பயனாகப் பிளவுண்டது. அந்தப் பிளவின் எதிரொலியாக எழுந்த மதவெறியர்களின் அமளி ஹைதராபாத்தை விட்டு வைக்கவில்லை. அந்த நகரின் முதல் அடியே என் மீராவின் தலையில்தான் விழுந்தது. தோலாராமின் பங்களாவில் புகுந்த மதவெறியர்கள் அவரை ஒரே அடியில் கொன்று வீழ்த்திவிட்டு மீராவைக் கவர்ந்து சென்றனர்.

லால்வானி அப்பொழுது தியேட்டரில் இருந்தார். அங்கும் கலகம் பரவிவிடவே, பங்களாவுக்கு ஓடிவந்து அது வெறிச்சோடியிருப்பதைத்தான் கண்டார். செத்தவர்களுக்கு அழுவதற்கோ, பிரிந்தவர்களைத் தேடுவதற்கோ, இடமில்லாத நிலைக்குக் கலகம் பெருகிவிடவே, மீராவை மறந்து, எல்லாரையும்போல் அவரும், தம் உயிரைக் காத்துக்கொள்ள ஓடி ஒளியத்தான் வேண்டியதாயிற்று.

இரண்டு வருஷங்கள் புரண்டுவிட்டன. அலை ஓய்ந்த கடலைப்போல, வெட்டப்பட்ட தலையும் உடலும் துடித்து அமைதியுற்றதுபோல, பாரதம் உடல் வேறு தலை வேறாக அயர்ந்து கிடந்தது. வெட்டுண்டு உதிரம்

காய்ந்திருக்கும் பாகங்களிலிருந்து ஈக்கள் அங்கும் இங்கும் ஓடி மொய்க்குமே, அதுபோல அகதி ஈக்கள் இந்தியா வுக்கும் பாகிஸ்தானுக்கும் பரிமாற்றம் கொண்டனர்.

சொத்திழந்து சுற்றமிழந்து, பிறந்த மண்ணைப் பிரிந்து வந்த அந்த அபாக்கிய மக்களுக்கு நமது அரசாங்கம் தன்னால் இயன்ற அளவு உதவிற்று. பங்களா இல்லா விட்டாலும் கூடாரமாயினும் கொடுத்தது: பந்தி போஜனமளிக்க முடியாவிட்டாலும் கூழாயினும் வார்த் தது. பெரிய பதவிகள் தர இயலவில்லையெனினும் சிறிய குமாஸ்தா வேலையாவது கொடுக்க முயன்றது.

ஆனால், வயிறும், வயிறு வளர்ப்பும் மாத்திரமே இடி போன்ற துயர்களை அவித்துவிடுமா? தாயை இழந்தவர் எத்தனை பேர்? தங்கை தமக்கையரைத் தாரை வார்த்தவர் எத்தனை பேர்? தாரத்தைக் காவு கொடுத்தவர் எத்தனை பேர்? இத்துயரையும் துடைக்க அரசாங்கம் பின்வாங்க வில்லை. கடத்திச் செல்லப்பட்ட பெண்களின் பரிவர்த் தனை ஆரம்பமாயிற்று.

இந்தச் சமயத்தில்தான், தன் குடும்பத்தின்மீது விழுந்த இடியனைத்தையும் தூரத்திலே இருந்து அறிந்து சகித்துக்கொண்ட மீராவின் அண்ணா கிஷின்சந்த் தன் அமெரிக்கப் படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும் பினான். போகும்போது செல்வச் சீமானாகப் போனான்; வந்தபோது? இங்கே என்ன இருந்தது? யார் இருந் தார்கள் அவனுக்கு?

போனவர்கள் போய்விட்டாலும், இருக்கிறவர்கள் வாழ வேண்டுமே! இந்தியா வந்ததும், கிஷின், டெல்லிக்கு ஒரு வேலை விஷயமாகச் சென்றிருந்தான். அப்பொழுது கடத்திச் செல்லப்பட்ட பெண்களின் பரிவர்த்தனையைப் பற்றிக் கேள்வியுற்றான். ஒருகால் மீரா அந்தக் கும்பலில்

இருக்கலாமோ என்ற அற்ப ஆசை அவனை அகதிகளின் முகாமுக்கு விரட்டிற்று. ஆம்; அவள் அங்கேதான் இருந்தாள்; தேய்ந்து, உருக்குலைந்து, உதிர்ந்த மலராய் ஒடிந்த கிளையாய் அங்கொரு மூலையில் விழுந்து கிடந்தாள்!

"மீரா!"

"அண்ணு!"

அவர்களுடைய ஆலிங்கனத்தை அவளுடைய அந்த நினைவு விலக்கிற்று. "ஐயோ அபசாரம், அண்ணு; இந்த அபாக்கியவதியைத் தீண்டாதே!"

"சகோதரி!" கிஷனால் பேசமுடியவில்லை.

"என்னை இங்கேயிருந்து முதலில் மீட்டுச் செல், அண்ணு; இங்கே எங்களின் ஆனந்தம் நாள்தோறும் பறிபோய்க்கொண்டே இருக்கிறது."

"நீ என்ன சொல்லுகிறாய் மீரா?"

"இங்கே எங்களைச் சாகவிடாமல் கட்டிக் காக்கிறார்கள். என்னை உடனே வெளியேற்று. நான் சுதந்தரமாகச் செத்து, இந்தப் பாவச்சுமை நீங்கட்டும்."

"வாழ்வு வாழ்வதற்காக, மீரா; சாவதற்கல்ல."

"ஆனால் நான் யாருக்காக வாழவேண்டும்?"

"உன்னுடையவருக்காக; இல்லாவிட்டால் உன் சகோதரனுக்காக."

"என்னுடையவர்! அவர் போய் எக்காலமாயிற்றோ? உயிரோடிருந்தாலும் இந்தப் பதித உடலையா அவருக்குச் சமர்ப்பிப்பது?"

"மனம் நொந்து பேசாதே, சகோதரி; தெரிந்து பாவக் குழியில் விழாத நீ பரிசுத்தமானவள். அதைத்தான்

பெரியோர்களான காந்தி முதல் அனைவரும் வற்புறுத்து கிறார்கள்."

" அவர்கள் வற்புறுத்துவார்கள் அண்ணா ; ஆனால் ஏற்றுக்கொள்ளுபவர்கள் தயக்கமின்றி ஏற்பார்களா ? ஏற்றுக்கொண்டாலும், முன்போலச் சலனமின்றி வாழ் வார்களா ?"

" மற்றவர்கள் நிலை எப்படியோ ? ஆனால், உன்னை உன் கணவர் சலனமின்றி ஏற்கத்தான் வேண்டும். தெரிந்து பிழை செய்த அவரை நீ தயக்கமின்றி ஏற்க வில்லையா ?"

" அது பெண்ணின் கடமை, அண்ணா ; அவர் ஆண் அல்லவா ?"

" அதே பெண்ணின் கடமையை அந்த ஆணிடமும் நிலை நாட்டுகிறேன், பார் ; தெய்வம் மாத்திரம் அவரை எங்கேயாவது உயிருடன் வைத்திருக்கட்டும்" என்று கூறி அவளைத் தேற்றி அழைத்து வந்தான் கிஷின்.

கிஷின் தான் சொன்ன சொல்லை நிறைவேற்றி விட்டான்.

அவனுக்குப் பம்பாயில் உத்தியோகமாயிற்று, சகோ தரியுடன் இங்கே வந்தான். வந்ததும் அகதிகளின் ரிஜிஸ் திரார் காரியாலயத்தில் போய் விசாரித்தான். லால்வானி பம்பாயில் கோல்வாடா, காம்பில் வசித்து நகரத்திலிருந்த பத்திரிகாலயம் ஒன்றில் ஆசிரியராக இருப்பதாகச் செய்தி கிடைத்தது. நேரே அவரைச் சந்தித்துத் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டான். அவரிடம் அவன் என்ன என்ன பேசினானோ, தெரியாது. அன்றைக்கே லால்வானி மீரா வைத் தமது கோல்வாடா வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டார்.

அன்றிரவு நிகழ்ந்த அந்தத் தம்பதிகளின் முதற் சந்திப்பு !

ஒரு கேள்விகூடக் கேட்காமல், ஒரு விதத் தயக்கத்தின் சின்னத்தையும் காட்டாது, பிறந்த வீட்டிருந்த மனைவியை அழைத்துப்போவதுபோல, பாவ பிண்டமாகி விட்ட தன்னை அழைத்துச்சென்ற கணவனைக் கண்ட போது, 'தெய்வம் என்கிறார்களே ; அது வேறெங்கும் இருக்கவில்லை ; இதோ என்னைக் கைப்பிடித்துக் கூட்டிச் செல்வது தான்' என்று எண்ணினாள் மீரா. தொடர்ந்து அன்றிரவுச் சந்திப்பில் என்ன என்ன கூறி அவருடைய மன்னிப்புக்குப் பாத்திரமாக வேண்டும், எந்த எந்த வார்த்தைகளால் அவருடைய இந்தத் திடமான செயலைப் போற்றவேண்டும் என்றெல்லாம் எண்ணியிருந்தாள்.

ஆனால், இரவு அவர் அவளுக்கு வீட்டினுள்ளே படுக்கையை விரித்துவிட்டுத் தமது படுக்கையுடன் வெளித் தாழ்வாரத்துக்குக் கிளம்பியபோது, அவளுடைய நினைவுகளிலே சலனம் படர ஆரம்பித்தது.

"வெளியே பனி அடிக்கிறதே" என்று கதவோரம் வந்து நின்று தயங்கியவாறு அவள் சொன்னாள்.

"பரவாயில்லை ; இந்த உடலுக்கு இனி எல்லாம் சகஜமாகத்தானே வேண்டும் ?" என்றார் லால்வானி.

அந்த வார்த்தையிலே அவர் உள்ளம் பிரதிபலித்தாலும், மீரா கலங்கிவிடவில்லை. அவள் இன்னும் தயங்கியவாறு அங்கேயே நின்றாள்.

"ஏன் நிற்கிறாய் ? என்ன வேண்டும் ?" என்று அவர் கேட்டார்.

மீண்டும் ஜாடையாக, "கதவு திறந்தே இருக்கட்டுமா ?" என்று கேட்டாள்.

"வேண்டாம்; இங்கே திருட்டுப் பயம் அதிகம், கதவை அடைத்து உட்புறம் தாழிட்டுக்கொள்."

வெளிக் கதவை எத்தனை வேகத்தோடு சாத்தித் தாழிட்டாளோ, அதே வேகத்தில் அவள் உள்ளக் கதவும் தானாக மூடித் தாழிட்டுக்கொண்டது. இருந்தாலும், மனத்தின் ஒரு மூலையில், சிறிது சமாதான வெளி தென்படாமல் இல்லை. "இது எத்தனை புரட்சிகரமான காரியம்? ஒரு கணத்தில் மனத்தை உருட்டித் திரட்டி ஒருமுகப்படுத்திவிட அது உருகியோடும் வெண்ணெயா, என்ன?"

அது வெண்ணெயல்ல; மெழுகுமல்ல; நசுங்கும் களிமண் உருண்டைகூட அல்ல; அது பாறை; உளிக்கும் தகராத கடிய கருங்கற் பாறை என்பதைத்தான் நாட்கள் அவளுக்கு உணர்த்தின.

அந்தக் கல்லினுள்ளே குடி புகுந்துவிட்ட தேரையின் வாழ்வுதான் தனதும்; அது எப்படி ஆண்டவன் அளிக்கும் உணவை உண்டு, உலகம் தெரியாது, ஒருவிதச் சுகமறியாது வாழ்கின்றதோ, அதுபோல வாழ வேண்டியதுதான் தனது விதி என்பதைத்தான் இறுதியில் அவள் கண்டாள்.

உள்ளத்தில் கொந்தளித்த சலனத்தின் வேகத்தைத் தாங்க மாட்டாது, மீரா ஒரு நாள், "நாம் இப்படி வாழ்வதன் அர்த்தம் என்ன?" என்று கேட்டேவிட்டாள்.

"நீ என் சகோதரி" என்றார் லால்வானி.

அவ்வளவுதான்; அன்றிரவே மீரா கிஷினிடம் வசிக்க வந்துவிட்டாள். அண்ணன் அவளைச் சலனமின்றி வரவேற்றான்.

இருந்தாலும் "நீ அவசரப்பட்டிருக்கக்கூடாது, மீரா" என்றும் கூறினன்.

"இன்னும் எத்தனே அமைதிதான் காட்ட வேண்டுமென்கிருய், அண்ணு. உலகின் நடைமுறையிலிருந்து புரளுவதென்பது நாம் நினைப்பதுபோல அத்தனை எளிதான செயலல்ல; அதற்குத் துணிந்து விட்டாலும், அத்துணிவு உண்மை உருக்கொண்டிருப்பதில்லை. உண்மையாக இருந்தாலோ, அது நிலைப்பதில்லை. அண்ணு, அவருக்கு நான் சகோதரியல்ல; மனைவி அந்த உரிமை பறிபோய் விட்ட பிறகு நான் அவருக்கு வேறு எவ்விதத்தில் உறவு? அன்று என்னை மீட்டு வந்தபோது நீ சொன்னுய். "நீ உன் கணவருக்காக வாழவேண்டும்; அல்லது உடன் பிறந்தவனுக்காக வாழவேண்டும்" என்று. கணவருக்காக வாழ வேண்டியதில்லை யென்பது இப்போது தெளிவாகி விட்டது. எனவே, அடுத்தபடியாக யாருக்காக வாழவேண்டுமோ, அவனிடம் வந்திருக்கிறேன். உனக்கும் நான் ஆகாத எச்சிற்பிண்டமாகி விட்டேனென்றால், அதோ தெரிகிறது பார், நீலக்கடல், அதில் வாழும் ஆயிரக் கணக்கான ஜீவராசிகளுக்கு நான் ஆகாத பண்டமல்ல!"

மீராவின் இந்தத் தீவிரமான சொற்கள் கிஷினின் வாய்க்கு நன்ருக மூடியிட்டு விட்டன. ஆம்! அது திறக்க வழியிருந்தால்தானே!

**மீ**ரா கதையை முடித்துவிட்டு, "எப்படி இந்த சலனம்?" என்று கேட்டாள்.

"என்னுடைய சோகக் கதைகள் எல்லாவற்றையும் மிஞ்சிவிட்டது, மீராதேவி, உங்கள் மீராவின் கதை" என்றேன் நான்.

ஆனால், அத்தனை அற்புதமான கதை, இந்த 'ஜிந்தகி' ஆசிரியருக்குப் பிடிக்கவில்லையாமே ?

இந்த ஆசிரியர்களே அதிசயப் பிறவிகள்தாம். எழுத்தாளனுக்குப் பிடிக்கும் கதை ஒன்றாவது இவர்களுக்குப் பிடிக்க வேண்டுமே—ம்ஹூம். அதனால்தானே, இப்பொழுது ஒவ்வொரு எழுத்தாளனும் தானே ஒரு பத்திரிகாசிரியனாக வேண்டியிருக்கிறது !

## 3

"ஜிந்தகி"யிலிருந்து கதை திரும்பி வந்த மறுநாள் காரியாலயத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். அருகே அமர்ந்திருந்த கித்வானியின் மேஜை டெலிபோன் மணி ஒலித்தது. ரிஸீவரை எடுத்து, "ஹலோ" என்ற அவர். உடனே அதை என்னிடம் நீட்டி, "இதோ ராமன், உங்களுக்கு" என்றார்.

"ஹலோ, ராமன் பேசுகிறேன்."

"நமஸ்தே; என்ன ஸார், நேற்று வரவேயில்லையே?"

பேசுவது பண்டிட் அமர்நாத் என்பதைப் புரிந்து கொண்டு, "வந்து......?" என்று கேட்டேன்.

"கதையை வெளியிட முடியாத காரணத்தை அறிந்து போகவேண்டாமா ?"

"அதைத்தான் உங்கள் கடிதமே அறிவித்துவிட்டதே —பிடிக்கவில்லையென்று."

"பிடிக்கவில்லையா ? நன்றாய்ச் சொன்னீர்கள் : எத்தனை அருமையான கதை ! பிடிக்கவில்லை என்று எந்த மடையனாவது சொல்வானா ஸார் ?"

"பின்னே ?"

அமர்நாத் சற்று மெதுவான குரலில் சொன்னார்: "அது மாத்திரம் உண்மைக் கதையாக இல்லாவிட்டால் எவ்வளவோ சந்தோஷத்தோடு வெளியிட்டிருப்பேன், ஸார்; தவிரவும்......"

"ஏன் தயங்குகிறீர்கள்?"

"இல்லை; விஷயம் ரகசியமாக இருக்கட்டும். அந்தக் கதையில் வரும் லால்வானிதான் இந்த 'ஜிந்தகி'யின் முதலாளி.

ஆமாம் ஸார்; பிறர் புண்ணில் ஈரமின்றி கத்தியைப் பாய்ச்சும் டாக்டருக்கே புண் வந்தால் அவர் அதில் கத்தியை எளிதில் பாய்ச்சிக்கொண்டு விடுவாரா? அது போகட்டும்; இந்தக் கதையைத் திருப்பிவிட்டதற்காக மனச் சங்கடம் எதுவும் கொள்ளாமல், அடுத்ததாக வேறொரு கதை......"

"ஆகட்டும்; பார்க்கலாம்" என்று சொல்லி ரிஸீவரை இடத்தில் வைத்தேன்.

"யார் ஸார், அது?" என்று கேட்டார் அருகே இருந்த கித்வானி.

"'ஜிந்தகி' என்றொரு பத்திரிகை வருகிறதே, அதன் ஆசிரியர்."

"ஓஹோ, லால்வானியா?"

"இல்லை அதன் முதலாளி அல்ல. ஆசிரியர் அமர்நாத் தான் இப்பொழுது என்னுடன் பேசியவர்."

"என்ன ஸார், கதைக்கிறீர்கள்? அந்த லால்வானி தான் ஸார், பண்டிட் அமர்நாத். அது அவன் புனைபெயர்."

"அப்படியா சமாசாரம்? சரி; சரி; இப்பொழுது எனக்கு எல்லாம் விளங்கிவிட்டன."

" என்ன ராமன்? என்ன விளங்கிவிட்டது உங்களுக்கு?"

" இல்லை; உங்கள் சகோதரியிடம் முன்பு சிந்திக் காரர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க வந்திருந்தேன் அல்லவா? அப்பொழுது அவள், தம் சிநேகிதி மீராவின் கதையைச் சொல்லி, 'இதை நீங்கள் எழுதுங்களேன்' என்றாள்."

" யார்? என் சகோதரியின் சிநேகிதி மீராவா?"

" ஆமாம், ஸார், அமெரிக்காவுக்கெல்லாம் போய்ப் படித்துவிட்டு வந்து, இப்பொழுது இங்கே எங்கோ எஞ்சினீயராக இருக்கிறாராமே, அந்தக் கிஷின்சந்தின் சகோதரி."

கித்வானி சிரித்தார்: " அந்தப் போக்கிரிப் பெண் உங்களிடம் தனது கற்பனைத் திறனை நன்றாகக் காட்டி விட்டாள்."

" அப்படியானால் அவள் சொன்ன கதை உண்மைக் கதையல்லவா? இதோ, அமர்நாத்கூட அது உண்மைக் கதையென்று சொன்னாரே."

" கதை என்னவோ உண்மைக் கதைதான். ஆனால், அவள் உங்களை ஏமாற்றியது கதையில் அல்ல; பெயர் மயக்கத்தில். கே. டி. கித்வானி என்ற என் பெயரில் 'கே' என்ற முதல் எழுத்துக் கிஷின்சந்த் என்ற என் இயற்பெயரையே குறிக்கிறது."

" ஆ! அப்படியானால், அது உங்கள் மீராவின் கதைதானா?"

" ஆமாம், ராமன்; விலகா இருள் படிந்துவிட்ட அவளுடைய இந்த வாழ்வுக்கு இளமை பெருஞ் சத்துரு

வல்லவா ? அதிலே சலனம் தோன்றி அவளை இழியச் செய்துவிடலாகாதே என்றுதான் நான் இன்னும் பிரம்ம சாரியாகவே இருக்கிறேன். அதோடு, கூடிய வரையில் ஆண்களின் கண்ணில் படாமல் அவளைப் பாதுகாத்தும் வருகிறேன்.

ராம், மனது குரங்காயிற்றே! அது எப்பொழுது பேன் பார்க்கும் ? எப்பொழுது தலையைப் பிராண்டும் ? என்பதைச் சொல்ல முடியாதல்லவா ?

நான் சித்வானியை நோக்கி மௌனமானேன். ஆயினும் என் உள்ளம், “ ஆம் ; சலனம் பொல்லாதது தான் ” என்றது.

★